# பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு

முனைவர் கா.காமராஜ்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பழங்குடி மாணவர்களுக்கான
# தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு

முனைவர் கா. காமராஜ்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம் தரமணி, சென்னை 600 113

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு |
| ஆசிரியர் | : | முனைவர் கா. காமராஜ்<br>உதவிப் பேராசிரியர்<br>சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>தரமணி, சென்னை - 600 113 |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை - 600 113<br>தொலைபேசி எண் 044 - 2254 2992 |
| வெளியீட்டு எண் | : | 786 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2014 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : | 8+127 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 65/- (ரூபாய் அறுபத்தைந்து மட்டும்) |
| அச்சகம் | : | சரவணா அச்சகம்<br>144, தம்பு தெரு<br>சென்னை - 600 001 |
| பாடம் | : | கல்வி மொழியியல் |

முனைவர் **கோ. விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பி.எச்.டி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 113.

# அணிந்துரை

கல்வி வளர்ச்சியில் உயர்வு பெறாத எந்தச் சமுதாயமும் வாழ்வில் தன்னிறைவு பெற இயலாது; மாறிவரும் உலகத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்ள இயலாது. எனவே சமுதாய வளர்ச்சிக்குக் கல்வியறிவே அடிப்படை என்ற உறுதி இன்றும் வேரூன்றியுள்ளது. அதிலும் ஒப்பாகச் சமுதாயநிலையில் பொருளாதாரத்திலும், கல்வியிலும் பின்தங்கிய நிலையில் உள்ள பழங்குடியினர் கல்வி அறிவு பெறுவது என்பது மிகவும் அவசியமாகிறது.

அன்ன சத்திரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்....
அன்ன யாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்று பாரதி கூறியதற்கேற்ப இன்று தமிழக அரசு பழங்குடி மக்களின் கல்வி வளர்ச்சி வேலைவாய்ப்பு, சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நல்ல பல அறிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியும் வருகின்றது.

இவ்வாறு அரசு பல சலுகைகள் வழங்கியும் இம்மாணவர் களிடையே இன்றும் கூட குறைந்த கற்றல் நிலையே காணப்படுகிறது. காரணம் இருமொழிக் கல்வியைச் செயல்படுத்துவதால் சில இடர்பாடுகள் உள்ளன. பழங்குடி மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும் போதும் பல மொழி பேசும் பழங்குடி மக்கள் ஒரே கிராமத்தில் வசிக்கும் போதும் இரு மொழிக் கல்வி முறையைச் செயல்படுத்த அதிகச் செலவும் செய்ய வேண்டி உள்ளது. இதுபோன்ற பல்வேறு சிக்கல்கள் காணப்படுகிறது.

உதவிப்பேராசிரியர் முனைவர் கா. காமராஜ் அவர்களின் முனைவர் பட்ட ஆய்வேடானது செம்மைப் படுத்தியும், செறிவுபடுத்தியும் 'பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு' என்னும் தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளான நீலகிரி, கோத்தகிரி, வால்பாறை, ஊட்டி, கூடலூர் போன்ற பகுதிகளுக்குச் சென்று நேரடி களஆய்வின் மூலம் பழங்குடி மக்கள் பேசும் மொழியையும் பழங்குடி மாணவர்கள் தமிழ் கற்கும்போது அம்மாணவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களையும் அதற்கானத் தீர்வுகளையும் இந்நூலின் வழி தெளிவுபட விளக்கியுள்ளார். தமிழை இரண்டாம் மொழியாகக் கற்போருக்கு இந்நூலானது மிகச் சிறந்த வழிகாட்டி நூலாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இது போன்ற சிறந்த நூல்களைத் தமிழ்க் கூறும் நல்லுலகிற்கு வழங்கிட வேண்டும் என வாழ்த்தி மகிழ்கின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்நாட்டின் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. ஆதலால், இவற்றின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு வீரமணி அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப்பணியாளர்கள் மற்றும் கணினியச்சு செய்த திருமதி. எ.ம. இலட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த சரவணா அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்

இயக்குநர்

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| வ.எண். | - | வரிசை எண் |
| ப. | - | பக்கம் |
| அ.ப.ந.உ.ஆ | - | அரசு பழங்குடியினர் நல உறைவிடப் பள்ளி ஆனைகட்டி |
| அ.மே.வா.பா. | - | அரசு மேல்நிலைப்பள்ளி வால்பாறை |
| அ.ம.உ. வா.பா. | - | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி வால்பாறை |
| அ.உ. தே. | - | அரசு உயர்நிலைப் பள்ளி தேவாலா |
| அ.மே. க. | - | அரசு மேல்நிலைப் பள்ளி கர்கியூர் |
| அ.மே.வா.பா | - | அரசு மேல்நிலைப் பள்ளி வால்பாறை |
| அ.மே. எ. | - | அரசு மேல்நிலைப் பள்ளி எருமாடு |
| அ.உ. கை. | - | அரசு உயர்நிலைப் பள்ளி கையுன்னி |

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 1 |
| பழங்குடிகள் | 3 |
| ஆய்வு நெறிமுறைகள் | 15 |
| கற்பித்தல் வழி பழங்குடி மாணவர்களின் மொழித்திறன் மதிப்பீடு | 28 |
| பழங்குடி மாணவர்களின் தமிழும் மொழிப் பிழை ஆய்வு மதிப்பீடும் | 57 |
| பாடநூல் வழி பழங்குடி மாணவர்களின் மொழித்திறன் மதிப்பீடு | 82 |
| முடிவுரை | 122 |
| துணைநூற்பட்டியல் | 124 |

# முன்னுரை

தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் சூழலில் பாடநூல் என்பது முதன்மையான கருவியாகவும், மதிப்பீட்டுக் கருவியாகவும் செயல்படுகின்றது. தினசரி வாழ்வில் மொழிப் பாடநூல் ஆசிரியர்களின் கற்பித்தலுக்கும் மாணவர்களின் கற்றலுக்கும் துணை நிற்கிறது. மொழிப்பாடநூல், கற்றல் கற்பித்தலுக்கு மைய ஆதாரமாகவும் (Core Resource) மூலமாகவும் (Source of Supplimental Material) வகுப்பறைச் செயல்பாட்டில் ஊக்கமளிப்பதாகவும், சிறந்த பாடத்திட்டமாகவும் செயல்படுகின்றது. இதனால் ஆசிரியர்களுக்கு மொழிப் பாடநூலைத் தேர்வு செய்வது கடினமாகவே உள்ளது. மொழிப்பாடநூல் கற்பித்தல் செயல்பாட்டில் ஆற்றும் பாங்கினை வைத்துத் தேர்வு செய்யப்படுகிறதா என்பது கேள்விக் குறியாக உள்ளது. கற்பித்தல் நிலையில் தெளிந்த முடிவு எட்டாத போது கற்றல் நிலையில் ஒரு மொழிப்பாடம் இன்னும் சவாலாகத்தான் இருக்கும். இந்நிலையில், பழங்குடி மாணவர்களுக்கான கற்பித்தலிலும், கற்றலிலும் பங்காற்றும் தமிழ்ப்பாடநூல் முறையே ஆய்வுக்குட் பட்டதாகும்.

இருப்பினும் மொழிப்பாடநூல் பழங்குடி மாணவர்களுக்குப் பொருத்தமானதாகவும், அவர்களின் கற்றல் சூழலுக்குப் பொருத்தமானதாகவும் அமைப்பது இன்றியமையாததாகும். மொழிக் கற்றல் முறையே பழங்குடி மாணவர்கள் தமது எண்ணங்களையும், குறிக்கோள்களையும், விருப்பங்களையும் அடைவதற்கான வழியாகும். பழங்குடி மாணவர்களது இத்தகைய செயல்பாட்டை ஈடு செய்வதற்கு மொழிப்பாடநூல்களைத் தக்கவாறு செம்மைப்படுத்திய நிலையில் தேர்வு செய்யப்பட வேண்டுவது அவசியம். இங்கு மொழிக் கற்றல் கற்பித்தலில் முதன்மையான அங்கமாக விளங்குவது தமிழ்மொழிப் பாட நூலாகும். அப்பாடநூலின் வழி. பழங்குடி மாணவர்களுக்குத் தேவையான அறிவைப் பெற முடிகிறதா என்பதனை அளவிட்டுப் பார்ப்பதற்காக இவ் ஆய்வினை மேற்கொள்ள முனையப்பட்டது.

இவ்வாய்விற்கு பெரிதும் உதவிய நெறியாளர் முனைவர் பெ.செல்வக்குமார் அவர்களுக்கு எனது இதயம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுத் தொடர்பாக எனக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்கிய பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலைவர்

முனைவர் சி. சிவசண்முகம் அவர்களுக்கும் பேராசிரியர் வே. தயாளன் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

தலைவர், நுண்தேர்வு மற்றும் மதிப்பீட்டு மையம், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் பேராசிரியர் பொன். சுப்பையா (NTS) அவர்களுக்கும், தற்போதைய தலைவர் பேராசிரியர் மு.பாலகுமார் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாய்வினை நிகழ்த்துவதற்கு உதவித் தொகை வழங்கிய National Testing Service India, Mysore நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

ஆய்வுத் தொடர்பான களஆய்வு மேற்கொண்ட போது எனக்கு வேண்டிய தகவல்களைச் சேகரிக்க அனுமதி வழங்கிய கோவை மாவட்டம் மற்றும் ஊட்டி மாவட்டத்தைச் சார்ந்த அரசுப்பள்ளி, அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். வினாநிரல்களை இன்முகத்தோடு பெற்றுக் கொண்டு அதனைப் பூர்த்திச் செய்து எனக்குக் கள ஆய்வு செய்ய முழு ஒத்துழைப்புக் கொடுத்த 9-ஆம் வகுப்பு, மற்றும் 10-ஆம் வகுப்பு இருளர், குறும்பர், பணியர், காடர் மாணவர்களுக்கும் என் அன்புகலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்வதற்கு என்னை ஊக்கப்படுத்தி உதவிய தமிழ்நாடு ஹரிஜன சேவாசங்க செயலாளர் சீனிவாசன் அண்ணா அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகும். ஆய்விற்குத் தேவையான நூல்களை வழங்கிய பாரதியார் பல்கலைக்கழக நூலகத்தாருக்கும், மாவட்ட மைய நூலகத்தாருக்கும், ஐ.ஓ.பி கிளை நூலகத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

கள ஆய்வு செய்வதற்கு என்னுடன் துணையாக இருந்து எனக்குத் தேவையான உதவிகளைக் கேட்கும் போதெல்லாம் செய்து கொடுத்த நண்பர்களான திரு.சு.நவநீதகிருஷ்ணன், திரு.மு.கணேஷ்குமார், திரு. சே. சீனிவாசன் ஆகியோருக்கும் என் நட்புகலந்த நன்றிகள்.

முனைவர் பட்ட ஆய்வேட்டினை புத்தகமாக வெளியிட இசைவுத் தந்த நிறுவன இயக்குநர் ஐயா அவர்களுக்கும் நிறுவன பேராசிரிய பெருமக்கள் அனைவருக்கும் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகிறேன்,

தட்டச்சு பணியினைச் சிறப்பாக செய்து நூலாக வெளியிட உதவிய செல்வி தீபிகா லட்சுமணன் அவர்களுக்கும் இந்நூலை அச்சிட்டுத் தந்த சரவணா அச்சகத்தாருக்கும் எனது நன்றி.

முனைவர் கா.காமராஜ்

# பழங்குடிகள்

பழங்குடிகள் என்னும் சொல் பொதுவாக மூதாதையரிடமிருந்து தோன்றிய பல குடும்பங்களைக் கொண்ட எந்த ஒரு குழுவையும், பொதுவான பெயரையும் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தன்மைகளையும், ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் இயல்பையும், திருமணம், செய்யும் தொழில் ஆகியவற்றில் சில வேறுபட்ட தன்மைகளைக் கொண்டு விளங்கும் தன்மை உடையவராய் ஒருவருக்கொருவர் கட்டுப்பாட்டுடனும் வாழும் பல குடும்பங் களின் அமைப்பே பழங்குடிகள் ஆகும். இந்தியாவில் பல பண்பாட்டுக் கூறுகளுடன் 577-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மனித இனத்தின் பொருளாதார நாகரீக பரிமானத்தின் தொடக்க நிலையிலேயே வாழும் பழங்குடி மக்கள் தமிழகத்தில் 36 வகையான பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். இதில் தமிழக அரசின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி தமிழகத்தில் மொத்த மக்கள் தொகையில் 1.04 சதவீதம் உள்ளனர். இவர்களில் 23.35 சதவீதம் மட்டுமே கல்வி அறிவு பெற்றவர்கள். (டாக்டர் நசீம்தின், 1981) இதில் இருளர், குறும்பர், பணியர், காடர், கோத்தர், தோடர், காட்டு நாயக்கர் ஆகிய பழங்குடிகளை மாத்திரமே பூர்வீகப் பழங்குடிகளாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

இப்பழங்குடிகள் தனக்கென தனிப்பட்ட பண்பாடோடும். அடையாளத்தோடும் குறிப்பிட்ட எல்லைப் பகுதிகளுடன் சமத்துவ உணர்வுடன் பகிர்ந்தளிக்கும் எண்ணத்துடன் வாழ்பவர்கள் மற்றும் பாரம்பரிய அறிவைப் பயன்படுத்தி வாழ்பவர்கள்தான் பழங்குடிகள் என்பதற்கு மானிடவியலாளர் கருத்துக் கூறுகின்றனர். மனித இனத்தின் உயிரியல் படிமலர்ச்சியும், பண்பாட்டு படிமலர்ச்சியும் ஒரு சீரான வளர்ச்சிப் பாதையினை கொண்டவைகளாக உள்ளன. பண்பாட்டுப் படி மலர்ச்சி எளிய நிலையில் தொடங்கிக் காலப் போக்கில் பல சிக்கல் நிறைந்த கலப்பு நிலைகளாக மாறி அது மென் மேலும் எளிமையற்ற போக்கை வளர்த்துக் கொண்டது. தொடக்கத்தில் சமத்துவ சமுதாயங்களும், பின்னர் தரநிலைச் சமுதாயங்களும் அதன் பின்னாக வர்க்கச் சமுதாய முறையானது முதலில் குலக்குழு அமைப்பாகவும் பின்னர் பழங்குடி அமைப்பாகவும் படிமலர்ச்சி யடைந்தது. என்றும் மானிடவியலாளர் குறிப்பிடுகின்றனர். இத்தகைய பழங்குடி மக்கள் இன்றும் கூட பொருளாதார வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் பின் தங்கிய நிலையில் இன்றளவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் கல்வி வளர்ச்சியினை மேம்பாடு அடையச் செய்வதன் நோக்கமாகவே இந்த ஆய்வு என்பது மேற்கொள்ளப்பட்டு கல்வி குறித்த இவர்களின் நிலைப்பாடு பின்வரும் பல்வேறு நிலைகளில் விளக்கப்பட உள்ளன.

## வாழ்க்கை முறை

இவர்கள் தங்கள் இனத்தலைவர்களின் ஆணைக்கும், தலைமைக்கும், அதிகார எல்லைக்கும் மட்டுமே அடங்கி வாழும் தன்மை பெற்றவர்கள் ஆவர். இவர்கள் பேசுகின்ற மொழி, தெய்வ வழிபாடு, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைச் சேகரிக்கும் முறையிலே வேறுபாடு கொண்டு தனித்தனிக் குழுக்களாக மலைகளிலும், காடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். தாங்கள் மேற்கொண்ட தொழில்களில் நலிவு ஏற்படுமாயின் வேறொரு இடத்திற்கு மாறிக்கொண்டே இருக்கும் தன்மை உடையவர்கள். இதனால் இவர்களைப் பழங்குடிகள் என்றும் நாடோடிகள் என்றும் அழைத்தனர். நாடோடிகளாக வாழும் மக்கள் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஏற்ப தங்களை மாற்றிக்கொள்ளும் தன்மை உடையவராகவும் காணப்படுகின்றனர்.

பழங்குடியினர் அல்லது நாடோடிகள் என்று அழைக்கப்படும் இம்மக்கள் கல்வியறிவு குன்றிய நிலையில் இருப்பதனால் நாகரிக மக்களுடன் பழகுவதற்குக் கூச்சப்பட்டும் பழகத்தெரியாமலும் தனியாக இருப்பதற்கு ஏற்றவாறு ஒதுக்குப்புறமாக இருக்கும் இடங்களையே தேர்வு செய்கின்றனர். மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களான மலைப்பகுதி, அடர்ந்த காடுகள் உள்ள பகுதிகளில் வாழ்கின்றனர்.

## பழங்குடியினர் மொழியறிவு

பழங்குடிமக்கள் சிறுபான்மையினராக இருந்த போதிலும் தமிழை முதன்மையாகக் கொண்ட தமிழ்நாட்டில் வாழ்ந்து தனது வாழ்க்கை வளத்தையும், அறிவு வளத்தையும் பெருக்க வேண்டும் என்கிற அவசியத்தில் எழுத்துத்தமிழையும், பேச்சுத்தமிழையும் அறிவுத் தமிழையும் தெரிந்திருப்பது பழங்குடி மாணவர்களுக்கு கட்டாயமாகிறது. தனது சமூகத்திற்குள்ளே நடக்கும் எண்ணப் பரிமாற்றத்திற்கு அவர்கள் தமிழைச் சார்ந்து நிற்கத் தேவையில்லை. ஆனால் சமூகத்தைப் பிரிந்து சமநிலப்பகுதிக்கு வந்து தனது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்கிற சூழலில் தமிழ்மொழி அவர்களுக்கு ஒரு கருவியாகச் செயல்பட வேண்டியுள்ளது. இதன் பொருட்டு பழங்குடி மாணவரின் தமிழ்மொழி அறிவை அளவிட்டுப் பார்ப்பது காலம் கருதி மேற்கொள்ளும் தலையாய பணியேயாகும். இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாராய்ச்சி, கீழ்க்காணும் நோக்கங்களை மையப்பொருளாகக் கொண்டமைகிறது. தமிழக அரசு பழங்குடி மாணவர்களுக்கு எட்டாம் வகுப்பு வரை கட்டாயத் தேர்ச்சி முறை என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்நிலையில் அனைத்து மலைவாழ் மாணவர்களும் தேர்ந்து மேல்நிலை வகுப்புகளுக்குச் செல்லும்போது அவர்களுக்குக் கட்டாயத் தேர்ச்சியின் மூலம் கிடைக்கப் பெறும் அறிவை வைத்துச் சவாலை எதிர்கொள்ள முடியாமல் போகிறது. தனது கல்வியில்

உயர்நிலைக்குச் சென்று பாடங்களைச் சரிவரப் புரிந்து கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. இந்நிலையில் மாணவர்களின் பேச்சிலும், எழுத்திலும், புரிதலிலும் வெளிக்கொணர்தலிலும் பெரிய அளவில் சிக்கல் ஏற்படுகிறது. கட்டாயத்தேர்ச்சி முறையினால் பழங்குடி மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம். ஆனால் முறையான கற்பித்தல் ஆரம்பப்பள்ளிக் காலத்திலிருந்தே கடைபிடிக்கும் அம்மாணவனின் கல்வித்தரம் உயர்ந்த வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்யும். பிறகு அம்மாணவன் சமநிலைப்பகுதிகளில் உள்ள வசதிகள் படைத்த ஆரோக்கியமான மாணவர்களுக்கு ஈடு கொடுக்குமளவிற்கு தகுதியடைய முடியும் என்பதில் ஐயமில்லை.

பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப்பாட நூல் ஒரு மதிப்பீட்டாய்வு என்னும் தலைப்பில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி ஆனைகட்டி, கூடலூர், ஊட்டி, கோத்தகிரி பகுதிகளில் வாழும் இருளர், குறும்பர், பணியர், காடர் ஆகிய மலைவாழ் மக்களின் வாழ்க்கை நிலை சமூகஅமைப்பு, காலநிலைக் கல்விமுறைகள் போன்றவற்றையும் 9, 10 ஆம் வகுப்பு பயிலும் பழங்குடி மாணவர்கள் தமிழ் மொழிக்கல்வியின் போதும் ஏற்படும் சிக்கல்கள் போன்றவற்றையும் ஆராயும் நோக்கில் இவ்வாய்வு அமைகின்றது.

முன்னோடி ஆய்வு நிகழ்வின்போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பழங்குடி மாணவர்களின் மொழியறிவைப் பொருத்தவரை மொழியனியற் கூறுகளான ஒலி, உருபு, தொடர் ஆகிய மூன்று நிலைகளிலுமே சமநிலை காணாத போக்கைக் காண முடிகிறது. பொதுவான கருத்தாகக் கொண்டாலும் பல்வேறுபட்ட பழங்குடியின் மொழிகளுக்கிடையே ஏற்படும் வேறுபாட்டைப் பொருத்தும் மொழியறிவில் அம் மாணவர்களுக்கிடையே வேறுபாடு காணத்தான் செய்கிறது.

### இருளர் பழங்குடிகள்

'இருளர்' தமிழ் நாட்டில் வாழும் தொன்மையான பழங் குடியினருள் ஒரு பிரிவினர் ஆவர். இம்மக்கள் நீலகிரி, கோவை போன்ற மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலும், கேரள மாநிலத்தில் பாலக்காடு பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றனர்.

இருளர்களை (Irular), வெல்லன் (Vellan) பூசாரி (Pusari) இரளியன் (Iruligan) என்றும் பல பெயர்களில் குறிப்பிடுவர். இருளர் கருத்த நிறத்தைப் பெற்றிருப்பதால் 'இருளர்' எனப் பெயர் பெற்றனர் என்று தாஸ்டனும் (Thurston) லூயிசும் (Luiz) கூறுவர். 'இருளர்கள்' இருள் (Irul) என்னும் மரத்திலிருந்து தோன்றியவர்கள் எனக் கூறப்படுகின்றனர். இதனாலேயே 'இருளர்' எனப் பெயர் பெற்றனர் என்பது வழக்கு" என "வாழ்வியற் களஞ்சியத்தில்" (1991 : தொகுதி 4:218) கூறப்படுகிறது. இருளர்கள் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், குன்னூர், கோத்தகிரி ஆகிய மூன்று வட்டங்களிலும் பரவலாகக் காணப்படும் சிறுபான்மையினர் ஆவர்.

சமூகத்தில் நம்மிடமுள்ள பிற சமூகத்தினரைக் காட்டிலும் குறைந்த சமூகத்தகுதி, குறைந்த அதிகாரம், குறைந்த மதிப்பு, குறைந்த உரிமை ஆகியவற்றைப் பெற்றுள்ள மக்கள் குழுவே இச்சிறுபான்மையினர் எனப்படுவர். (வாழ்வியற் களஞ்சியம் : தொகுதி 4:1991:578). எந்த நாட்டிலும் பெரும்பான்மையினரும், சிறுபான்மை யினரும் கலந்தே இருக்கின்றனர். இதில் சிறுபான்மையினர் பேசும் மொழியானது பயன்பாடு சுருங்கியதாக இருக்கின்றது. பெரும் பான்மையோர் பேசும் மொழியானது பரந்த எல்லைக்குட் பட்டதாகவும் மாநில / நாட்டு அங்கீகாரம் பெற்றதாகவும் இருக்கின்றது. சிறுபான்மையினரது மொழி வீட்டளவில் மட்டும் பயன்படுவதாக இருக்கின்றது. சிறுபான்மையினரான பழங்குடியினர் மொழிக்கும் பெரும்பான்மையினர் பேசும் சமுதாயமொழிகளுக்கும் நிறைய மொழி இடைவெளி உள்ளது.

## இருளர் குடியிருப்பு

இருளர் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் குன்னூர், கோத்தகிரி ஆகிய பகுதிகளில் உள்ள ஆனைகட்டி, கார்குடி, சோலூர், மட்டம், குஞ்சப்பனை, கல்லம்பாளையம், அல்லிமாயர் ஆகிய ஊர்களில் வாழ்கின்றனர். இவ்வூர்கள், கர்நாடகா மாநில எல்லையைச் சார்ந்தும், நீலகிரி மாவட்டத்திலுள்ள படுகர் ஊர்களைச் சார்ந்தும் இருப்பதால் தமிழ்மொழி பேசும் மக்களோடு தொடர்பு இல்லாதவர்கள் ஆகின்றனர். எனவே தமிழ்மொழி பேசும் வாய்ப்பு அற்றவர்களாகவோ அல்லது வாய்ப்பு குறைவாகப் பெற்றவர் களாகவோ உள்ளனர்.

இருளப் பழங் குடியிலிருந்து கல்வி கற்க வரும் குழந்தைகள் பாடமொழி / பயிற்றுமொழியாகத் தமிழ்மொழியைக் கட்டாயம் கற்கவேண்டிய சூழ்நிலைக்கு உட்படுகின்றனர். இருள மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்கும்போது, குறிப்பாக செய்யுள், உரைநடை போன்றவற்றைப் புரிந்துகொள்வதில் என்னென்ன இடர்பாடுகளை அடைகின்றனர் என்பதையும் அதற்கான குறைசார் காரணங்களையும் ஆராய்வதும் இந்த ஆய்வில் அடங்கும்.

## இருளமொழி

இருளமொழி தென்திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்த மொழியாகும். இருளமொழி பழந்தமிழுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு கிளைமொழியாகும் (The Encyclopeadia of Dravidian Tribes, Vol. 11:72). “பெரும்பான்மையான இடங்களில் இருளர்களின் குடியிருப்புகள் தமிழ்மொழி பேசும் மக்களோடு தொடர்பு இல்லாத வகையில் அமைந்திருப்பதால் இக்குழந்தைகள் பள்ளியில் சேரும் வரை தமிழ்மொழியைப் பேசுவதற்குக் குறைவான வாய்ப்பையே பெற்றுள்ளனர்” (ஆசிரியர் கைவிளக்கு 1991:6). எனவே இருளமொழி மாணவர்கள் தமிழ் மொழியைச் சரியாக அறியாதவர்களாக அறிய வாய்ப்பில்லாதவர்களாக பள்ளிச்சூழலுக்கு வருகின்றனர்.

இச்சூழ்நிலையில் தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வதிலும், தமிழ்மொழி வாயிலாகப் பிற பாடங்களைக் கற்றுக்கொள்வதிலும் பின்தங்கியவர்களாக உள்ளனர். பொதுவாக, ஒரு குழந்தை பள்ளிச்சூழலுக்கு வரும்வரை, எம்மொழியில் புரிந்து கொள்கிறதோ அம்மொழியே அக்குழந்தையின் தாய்மொழி / முதன்மொழி ஆகிறது. அக்குழந்தை எந்தச் சுற்றுச்சூழலைப் பின்பற்றி வளர்கிறதோ அதுவே அடிப்படை அறிவாகிறது. ஆரம்பக்கல்வி அவரவர் தாய்மொழியில் கற்பிக்கப்படவேண்டும் என்பது அரசினது கல்விக்கொள்கையாகும். இருப்பினும் சில பழங்குடியினர் வாழுகின்ற பகுதிகளில் பழங்குடியினரது தாய்மொழி கல்வி மொழியாக இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. எனவே அப்பழங்குடியினர் மாநில மொழியிலேயே கற்கவேண்டிய சூழ்நிலையும், அவசியமும் ஏற்படுகின்றது. இருள மாணவர்களுக்குத் தமிழ்மொழி இரண்டாம் மொழியே! தமக்கு அந்நியமான தமிழ் மொழியைச் சந்திக்கக் கற்க நேரிடும் இருள மாணவர்கள் அம்மொழிக் கூறுகளைப் புரிந்து கொள்வதிலும் அதைப் பயன்படுத்துவதிலும் சிக்கல்களுக்கு உள்ளாகுகின்றனர்.

கற்றல் திறன்களை மாணவர்கள் மிகுதியாகப் பெறுவதற்குத் தமிழ்மொழி வாய்ப்பளிக்கின்றது. மாணவன் எந்தமொழியோடு வளர்ந்தானோ எந்த மொழியோடு வளர்கின்றானோ, அந்த மொழியே அவனின் சிந்தனை ஆகும். அச்சிந்தனையின் வெளிப்பாட்டிற்கும் உகந்ததாக அமைகிறது. மூளையில் தோன்றும் சிந்தனை அடுத்த நிலையில் தமிழ்மொழிச் சொற்களாகவே வடிவம் பெறும் என்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையாகும் அம்மொழியைக் கற்கும்போது முதலில் அம்மொழியைக் கற்கவே ண்டும். அது கூறும் பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும். இதனால் நேரமும், முயற்சியும் அதிகம் வீணடிக்கப்படுகின்றன என்று குழந்தைசாமி (1985:2) குறிப்பிடுவது பழங்குடி மாணவர்களுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

## குறும்பர் பழங்குடிகள்

நீலகிரி மாவட்டத்தில் வாழும் சிறுபான்மை பழங்குடிகளில் குறிப்பிடத்தக்கவர்கள் குறும்பர்கள். நீலகிரியின் பூர்வீக, ஆதிவாசிகள் என கருதப்பட்டவர்கள் தொதவர், கோத்தர், குறும்பர் ஆகியோர். இக்கருத்தினை உறுதிப்படுத்தும் பழங்கதைக் குறிப்பும் உண்டு.

“கோத்தர்களின் குலதெய்வமான கம்பட்டராயன், கைவினைத் தொழில் செய்ய கோத்தர்களையும், பால் பண்ணைத் தொழில் செய்ய தொதவர்களையும், தேன் சேகரிக்கக் குறும்பர் களையும் படைத்தான் எனத் தெரிவிக்கிறது” (பாலகிருஷ்ணன் 1984:15)

இவர்களது பெயர்க்குறியீடுகளும், வாழுகின்ற இடச்சூழலும், பேசுகின்ற மொழி அமைப்பிற்கேற்ப வெவ்வேறானதாக இருக்கின்றன. குறும்பர் என்போர் குறுப (ர்) (Kuruba) எனவும், குறும்பர் (ர்) / (ன்) எனவும் அழைக்கப்படுகின்றனர்.

சென்னை மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி (1901) குறும்பர் என அழைக்கப்படுவது ஒரே இனத்தைக் குறிப்பதாகும். 'குறும்பர் என்பது தமிழ்ச்சொல்லாகவும் இருக்கலாம்' என்று தர்ஸ்டன் (1993 : 157) குறிப்பிடுகின்றார். குறும்பர்கள், நீலகிரி மாவட்டத்திலும் மைசூர் மாநிலத்திலுள்ள குடகு மாவட்டத்திலும், கேரளாவில் வயநாட்டிலும், தருமபுரி மாவட்டத்திலுள்ள மஞ்சு மலையிலும் பரவலாகக் காணப்படுகின்றனர். நீலகிரியில் உள்ளோர் ஊர்க் குறும்பர், எனவும் 'குறும்பர்' எனவும், குடகு மாவட்டத்திலுள்ளோர் பெட்ட குறுப(ர்) எனவும் வயநாட்டிலுள்ளோர் முள்ளுக்குறும்பர் எனவும் அழைக்கப்படுகின்றனர். தருமபுரியிலுள்ள மஞ்சு மலையில் வாழ்வோர் 'மஞ்சுமலைக் குறும்பர்' எனவும் அழைக்கப்படுகின்றனர் (பரமசிவானந்தம் 1961) : 171.

## குறும்பர் பற்றிய வரலாற்றுச்செய்திகள்

சென்னை மாநில மக்கள்தொகைக் கணக்கெடுப்பு (1891) இல் வெளியிட்ட செய்தி. ஒரு காலத்தில் இவர்கள் தென்னிந்தியாவில் அதிகார வர்க்கத்தில் இருந்தவர்கள் எனவும், சுமார் ஏழு, எட்டாம் நூற்றாண்டிற்குப் பின் கொறகர், சோழர், சாளுக்கியர் ஆகியோர்களால் முறியடிக்கப்பட்டு அழிந்து விட்டனர் எனவும் எஞ்சியோர் மலைப் பிரதேசங்களை நோக்கிச் சென்றடைந்தனர் எனவும், மலைகளில் சென்று குடியேறியவர்கள் நாகரீகமற்ற ஆதிவாசிகளாகவும், சமவெளிகளை அடைந்தவர்கள் ஆடுமாடுகளை மேய்ப்பவர்களாகவும் நெய்தல் தொழிலில் வல்லவர்களாகவும் விளங்குகின்றனர்.

மேலும் மானிடவியல் ஆய்வாளர்களான கிலிக், எச்.பி.லிச்சர்ட். கிலூயிஸ் போன்றவர்களது கருத்துக்களை ஒப்பிட்டு தர்ஸ்டன் (1993 - 158) குறிப்பிடுவதாவது "நீலகிரி பகுதியின் மற்றொரு குறும்ப குலத்தவர் மேய்ப்பவன் குறும்பர் (Shepherd kurumbas) ஆவர். இவர்களுக்கு ஆடோ / மாடோ ஒன்றும் கிடையாது. உடை, மொழி பழக்கவழக்கங்கள் என்றும் இவர்களது பெயரோடு தொடர்புடையன அல்ல. குறுவாவும்,குறும்பாவும் வெவ்வேறு வகையினர்களானாலும் திராவிடப் பழங்குடி இனத்தவர்களாக வாழ்ந்திருந்தனர். குறும்பர் இந்நிலத்தின் ஆதிமனிதர்கள் என்றும், நாட்டின் பல பகுதிகளில் குறும்பர் எனவும் 'குறுபரு' என்று அழைக்கப்படுவதாகவும், மலைக்குறும்பர் என்று குடும்பமாகப் பிரிக்கப்படுகின்றனர் என்றும், கிரீக், ஹெச்.பி. குறிப்பிடுகின்றார். ரிச்சர்ட்டு என்பவர் குறும்பருக்கும் குறுபருக்கும் எவ்விதத் தொடர்புமில்லையெனக் கூறுகின்றார்.

லூயி என்பவர் குறுபரும், குறும்பரும் ஒரே இனத்தவர்தான் என அபிப்பிராயப்படுகிறார். நீலகிரி குறும்பரும், மைசூர் குறுபருவும், மலபார் பணியருடனும், ஆனைமலை காடர் இனத்தவருடனும் ஒப்பிடப்படுகின்றனர்.

நீலகிரியில் குறும்பர்கள் மந்திரவாதிகளாகவும், நோய் தீர்க்கும் வைத்தியர்களாகவும் கருதப்பட்டு வந்தனர். இவர்களது மந்திர சக்தியால் வரக்கூடியக் கொடிய ஆபத்துக்களைத் தடுக்க முடியும் என்றும், பெண்களை வசியம் செய்யவும் முடியும் என்று கூறுகின்றனர். "படுகர்கள் குடியேறியதிலிருந்து குறும்பர்கள் பில்லி சூனியம் போன்ற துன்பங் களிலிருந்து காவல் காக்கும் காவலாளிகளாகக் கருதப்பட்டமையால் படுகக்கிளை ஒவ்வொன்றிற்கும் ஒரு குறும்பன் 'பங்காளி' என அமர்த்தப்பட்டான் என பாலகிருஷ்ணன் (1984:59) குறிப்பிடுகின்றார்.

## காடு குறும்பர்

குறும்பர்களில், 'காடு குறும்பர்' என அழைக்கப்படுகின்ற பிரிவினர் இன்றும் உள்ளனர். குடியேற்றத்தின் காரணமாக நீலகிரியில் குடியேறிய படுகர்கள் குறும்பர்களது மந்திர சக்திக்குப் பயந்து அவர்களைக் கொலை செய்ததற்கானக் குறிப்புகள் உள்ளன (தாஸ்டன் 1912:133-134). கொலை செய்யப்பட்டவர்கள் போக மீதி உள்ளவர்கள், தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற அச்ச உணர்வில் காட்டினுள் சென்று வாழத்தொடங்கி இருக்கலாம். இவர்களே 'காடு' குறும்பர்கள் என அழைக்கப்படுகின்றனர். காடு குறும்பர்களே பெட்டக்குறும்பர் தேனு / ஜேனு, குறும்ப(ர்) எனப் பிரிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றனர்.

## பெட்டக் குறும்பர்

பெட்டகுறும்பர்கள் வன தேவதைகளை வணங்குபவர் களாகவும் மாமிசம் உண்பவர்களாகவும் ராகி மாவிலிருந்து தயாரிக்கப்படும் கூழை அருந்துபவர்களாகவும் இருக்கின்றனர். சமவெளிகளில் வாழும் 'ஒக்கலியர்' இனத்தவரோடு தொடர்புடையவர் களாக இருக்கின்றனர். ஒக்கலியர், கன்னட மொழி பேசுகின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குறும்பர் பேச்சு மொழியில் கன்னடத்தின் சாயலைக்காணலாம். பெட்டக்குறும்பர்கள், ஒக்கலியர் இனத்தவர்களது கலாச்சாரத்தைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கின்றனர். அவர்களைப் போலவே, வெற்றிலைப்பாக்கு மாற்றி முறையான திருமண ஏற்பாடுகளைச் செய்து கொள்கின்றனர். பெட்டக் குறும்பர் யானைப் பாகர்களாகவும் யானைகளைப் பிடிப்பதில் வல்லவர்களாகவும் விளங்குகின்றனர்.

## ஜேனு / தேனு குறும்பர்

இவர்கள், காட்டின் உட்பகுதிகளில் சிறிய குடிசைகளில் வசிப்பவர்கள். இவர்கள் பிற இன மக்களைத் தங்கள் குடியிருப்புக்களுக்குள் அனுமதிப்பதில்லை. 'ஒக்கலிகள்' 'லிங் காயத்துகள்' (படுகர் இனத்தில் உயர்ந்த குடியினர்) போன்றவர்களை உயர்ந்த சாதி மக்களாகக் கருதி மதித்து நடக்கின்றனர். காடுகளில் உள்ள மூங்கில் அரிசி, வேர்கள், கிழங்குகள் இவற்றுடன் தேன் சேர்த்து உண்ணும் வழக்க முடையவர்கள் மரம் வெட்டும் தொழிலில்

தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். வனவிலங்குகளைக் குறி வைப்பதில் வல்லுநர்களாகவும் இருக்கின்றனர்.

## நீலகிரியில் குறும்பர்களது குடியிருப்பு

நீலகிரியில் குறும்பர்கள் சிறிய குக்கிராமங்களில் வாழ்கின்றனர். 'ஊர்க்குறும்பர்கள்' நெல்லிபானம் பகுதியிலும், ஜேனுகுறும்பர் அல்லது சோலிக நாயக்கர்கள் என்று அழைக்கப் படுபவர்கள் முதுமலைக் காட்டுப்பகுதிகளிலும், முள்ளுக்குறும்பர்கள், கூடலூரின் எல்லையாகிய வயநாடு பகுதியிலும் பெருமளவில் வாழ்கின்றனர். இங்குள்ள குறும்பர்கள் பெரும்பாலும் வனத்துறை இலாக்காவில் யானை பிடிக்கின்றவர்களாகவும், அவற்றைப் பராமரிக்கின்றவர்களாகவும் இருக்கின்றனர். கொஞ்சம் முயன்று படித்தவர்கள் அரசு அலுவலகங்களில் பணிபுரிகின்றனர்.

முதுமலைக்கு அருகில் அக்கார்டு (Accard) என்ற நிறுவனம் உள்ளது. இது பழங்குடிமக்கள் கிராமங்களைத் தத்துஎடுத்துக் கொண்டு, அவர்களுக்கு வேண்டிய கல்வி, சுகாதாரம், மருத்துவ, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கின்றது. பழங்குடி இனத்தவர்களைப் பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு பல விதத்திலும் உதவி செய்வதாகவும் உள்ளது.

பெட்டக்குறும்பர் அல்லது குறும்பர்கள் நீலகிரியின் பல்வேறு பகுதிகளில் சிதறலாகக் காணப்படுகின்றனர். இவர்களது வாழ்க்கைத் தரம் அவ்வளவு மேம்பட்டதாகத் தெரியவில்லை. மண்ணாலாகிய சிறிய குடிசைகளில் வாழ்கின்றனர். ஆங்காங்குள்ள படுகர் விவசாயிகளுக்கு வேலைக்காரர்களாக இருந்து அவர்கள் வழங்கும் விவசாய விளைபொருட்கள், கூலி இவற்றை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களாக இருக்கின்றனர். அறுவடைக் காலங்களில், இரவுநேரக் காவலாளிகளாகவும் வேலை செய்து வருகின்றனர்.

கோத்தகிரியில் N.A.W.A (நீலகிரி ஆதிவாசி நலச்சங்கம்) என்ற தனியார் அமைப்பு ஒன்று உள்ளது. இவ்வமைப்பு இங்குள்ள பழங்குடி இனத்தவர்களுக்குப் பண உதவியும் பல்வேறு வழிகாட்டுதல் களையும் செய்துவருகிறது.

குறும்பர்களின் குடியிருப்புகள் மொட்டை அல்லது கொம்பை என்று அழைக்கப்படுகின்றன. இவை பொதுவாக, அரைடஜன் குக்கிராமங்களை உள்ளடக்கியவையாக இருக்கும். பெரும்பாலான குக்கிராமங்களில் தழைகளால் வேயப்பட்ட மண்வீடுகளே உள்ளன. அவை ஒழுங்கற்ற முறையில் வெள்ளையடிக்கப்பட்டவையாகவும் அவர்கள் கரியைக் கொண்டு வரையப்பட்ட சித்திரங்களால் அலங் கரிக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. கொம்பை என்ற பெயர் நீலகிரி மாவட்டங்களிலுள்ள பல கிராமங்களில் இன்றும் காணப்படுகின்றது. கொலக்கொம்பை, மஞ்சுக்கொம்பை, தேனாடு கொம்பை, பொம்பாலக்கொம்பை போன்ற ஊர்ப்பெயர்கள் உள்ளன. இக்கிராமங்கள் ஒரு காலத்தில் குறும்பர் இனத்தவர்களின்

குடியிருப்புகளாக இருந்தன என்பதிலிருந்து சுட்டிக்காட்டக் கூடியனவாக உள்ளன. (பழங்குடியினர் ஆய்வு மைய வெளியீடு, 1991 : 15).

## குறும்பர்களது மொழி

குறும்பர்களது மொழி தென் திராவிடமொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை (ஜெயபால், 1978:10) குறும்பமொழி தமிழ் மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளோடு தொடர்புடையது. சூழ்நிலைகளின் காரணமாக பல்வேறு இடங்களில் வாழத்தலைப்பட்ட குறும்பர்கள் தங்கள் வாழ்விடங்களுக்கு ஏற்றவாறு பழக்கவழக்கங்களையும், பேச்சு வழக்கையும் அமைத்துக் கொண்டனர். குடகு, வயநாடு ஆகிய பகுதிகளில் வாழ்வோர் கன்னடம், மலையாளம் கலந்த மொழியையும், நீலகிரியிலுள்ளோர் தமிழ் மற்றும் கன்னடம் கலந்து பேசுகின்றனர். காடுகளின் நடுவில் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டு ஒதுங்கி வாழ்கின்றவர்களாக குறும்பர்களது குழந்தைகள் தமிழை அறியாதவர்களாகவே உள்ளனர். வளர்ந்து விட்ட நாகரீகயுகத்தில் சமூகத் தொடர்புச் சாதனங்களான, சினிமா, தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றின் தாக்கத்திற்கு ஓரளவு ஆட்பட்டிருந்த போதிலும், அவர்களது தமிழறிவு மிகவும் குறைவுதான். தமிழைப் புதிய மொழியாக / வேற்று மொழியாக / கடினமான மொழியாகவே கருதுகின்றனர். எனவே தமிழை மொழிப்பாடமாகக் கற்பதிலும், தமிழ்மொழி வாயிலாகப் பிறபாடங்களைக் கற்பதிலும் பின்தங்கியவர்களாகவே உள்ளனர்.

## பணியர் பழங்குடிகள்

பணியர் பழங்குடி மக்கள் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் பகுதிகளில் தேவலா, பந்தலூர், ஏருமாடு, தேவர் சோலை முதலிய இடங் களில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பழங்குடி மக்கள் நீக்ராயிட் இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் கருத்த நிறமும், தடித்த உதடும், சுருண்ட மயிரும், தடித்த மூக்கும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

## அணிகலன்கள்

பணியர் இன ஆண்கள் முழங்காலுக்கு மேல் வேட்டி அணிந்து உடலை மறைத்துக்கொள்கின்றனர். இடுப்பில் பெல்ட் போன்று கருப்புத்துணியை அணிகின்றனர். பெண்கள் இடுப்பில் மட்டும் முண்டு கட்டிக்கொள்கின்றனர். இம்மக்கள் தற்போது தற்கால மக்கள் உடுத்தும் ஆடைகளையும் அவ்வப்போது உடுத்தி வருகின்றனர். சிறுவர்கள் ஆடையின்றிக் காட்டில் அலைகின்றனர்.

பெண்கள் காதுவொட்டி போன்றவற்றை அணிகின்றனர். ஆண்கள் கையில் காப்பு மற்றும் வளையம் போன்றவற்றை அணிகின்றனர். இப்பழங்குடிமக்கள் காதைப் பெரியதுளை செய்து ஓலை அணிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதை வைத்து இவர்கள் பணியர் பழங்குடிகள் என்பதை நாம் சுலபமாகத் தெரிந்து

கொள்ளலாம். சில பணிய பெண்கள் காது ஓலையில் குண்டு மணியைப் பதித்துள்ளனர். சிவப்பு நிறமுள்ள குண்டுமணியை அதிகம் அணிகின்றனர்.

### வீடு அமைப்பு

இவர்கள் தங்களின் குடிசைகளைக் கோரைப்புல்லால் வேய்ந்து பக்கவாட்டில் மூங்கிலால் கட்டி அதன் மீது மண்ணைப் பூசுகின்றனர். தரையைச் சாணத்தால் மெழுகிக் கொள்கின்றனர். இவர்கள் தங்களின் அமைவிடத்தை 'சயிலை' என்றும் பல குடிசைகள் கொண்ட கிராமத்தை 'பாடி' என்றும் அழைக்கின்றனர். தங்களின் குடிசைக்கு வெளியே கோலாப்ப எனப்படும் திண்ணையொன்றை அமைத்துக்கொள்கின்றனர். தற்போது தமிழக அரசு இவர்களுக்கு புது வீடுகள் கட்டித்தந்துள்ளது.

### தொழில்

பணியர் பழங்குடிமக்கள் என்பவர்கள் கடும் உழைப்பாளிகள் ஆவார்கள். இதில் பெரும்பாலோர் விவசாய வேலைசெய்கின்றனர். பணியர் என்ற சொல்லுக்கு வேலை செய்பவர் என்று பொருளாகும். இவர்களில் ஒரு சிலர் தான் விவசாயம் செய்கின்றனர். ஆண்கள் நிலத்திலும், காப்பி, தேயிலை தோட்டங்களிலும் வேலை செய்கின்றனர். பெண்கள் காட்டிற்குச் சென்று காட்டுப்பொருளைச் சேகரிக்கின்றனர்.

### உணவு

காட்டுக்கிழங்குகளை வேகவைத்து உண்கின்றனர். வயல் வெளிகளில் உள்ள நண்டுகளை விரும்பி உண்ணுகின்றனர். இதுதவிர எலி, மீன், அணில், முயல் போன்றவற்றையும் விரும்பி உண்ணுகின்றனர்.

### பணியர் மொழி

இவர்கள் தமிழும், மலையாளமும் கலந்த மொழியினைப் பேசுகின்றனர். இவர்களின் மொழிக்கு இலக்கணமும், இலக்கியமும் இல்லை தமிழை விட கன்னடம் அதிகமாகப் பேசவும், எழுதவும் செய்கின்றனர். தற்காலச் சூழலில் இந்த இனத்தைச் சார்ந்த ஒரு சில மாணவர்கள் மட்டுமே தமிழ் படிக்க பள்ளிக்கு வருகின்றனர்.

### காடர் பழங்குடிகள்

காடர் இனப்பழங்குடி மக்கள் தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள வால்பாறை மற்றும் ஆனைமலைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். காடர்கள் என்பவர்கள் இந்தியாவின் பழமையான பழங்குடிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அடர்ந்த காடுகளில் வசித்து வருகின்றனர். எனவே காடன் என்ற சொல் காடு என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். வால்பாறை என்பது பல வளங்கள் நிறைந்த இயற்கை எழில் மிகுந்த மலைப்பகுதியாகும்.

### தோற்றம்

காடர் என்ற பழங்குடி மக்கள் குட்டையான உருவமும், கருத்த நிறமும், தடித்த உதடும், சுருட்டையான முடியும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

### ஆடை

பழங்காலத்தில் இவர்கள் இலைதழைகளையும் மரப்பட்டை களையும் ஆடைகளாக அணிந்தனர். பெண்கள் காதில் நீண்ட துளை செய்து பனை ஓலை வைத்துக் கொள்கின்றனர். ஆண்கள் அனைவரும் சீக்கியர்கள் போன்று முடியை நடுவில் முடிச்சுப்போட்டு தலைமுன் பகுதியை மட்டும் சிரைத்துக் கொள்கின்றனர். தற்பொழுது மற்ற மக்களைப் போன்று முடிதிருத்தம் செய்ய ஆரம்பித்துவிட்டனர். ஆண்கள் இடையில் ஒரு துண்டும் தலைப்பாகையும் அணிகின்றனர்.

தற்போது சட்டையும் வேட்டியும் அணிகின்றனர். பெண்கள் கூட சேலைகட்ட ஆரம்பித்துவிட்டனர். பெண்கள் மார்பகத்தை மறைத்துக்கொள்ள துணி அணிந்து கொள்கின்றனர். பெண்கள் மூக்குத்தியும் கையில் பித்தளைக் காப்பும் அணிகின்றனர். காடர்கள் திருமணத்தின்போது மணப்பெண்ணுக்கு மிகவும் நுண்ணிய வேலைப்பாடமைந்த மூங்கில் சீப்பை தாங்களே தயாரித்து அளிக்கின்றனர்.

### வீடு அமைப்பு

இம்மக்கள் மலைச்சரிவுகளில் குடிசைகள் அமைத்துள்ளனர். இக்குடிசைகள் பெரும்பாலும் மூங்கிலாலேயே அமைக்கப்படுகின்றன. குடிசையின் உள்ளும் வெளியும் திண்ணை போன்று மேடுகள் இருக்கும். இக்குடிசைகள் நீண்ட சதுரமாக இருக்கும். வீட்டில் மண்பாண்டங்களும் மூங்கிலால் ஆன சாமான்களும் வைத்துள்ளனர். காடர்கள் உணவு சேகரிக்கும் பழங்குடி மக்களாவர். பெரும்பாலும் இவர்கள் காட்டுப்பொருட்களை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றனர்.

### உணவு முறை

கிழங்கு, தேன், காய், கனி முதலியவற்றை முக்கிய உணவாக உட்கொள்கின்றனர், தற்போது காப்பி, தேயிலை தோட்டங்களில் பணியாற்றி வருகின்றனர். இதனால் அடிக்கடி அரிசி உணவும் உண்ணுகின்றனர். மேலும், ஆடு, மாடு, மான் முதலியவற்றையும் உணவாக உண்ணுகின்றனர்.

பெண்கள் எப்பொழுதும் புகையிலையைப் போட்டுக் கொள்கின்றனர். ஆண்கள் புகையிலையைச் சுருட்டிச் சுருட்டு குடிக்கின்றனர். இவர்கள் மரம் ஏறுவதிலும், தேன் எடுப்பதிலும், யானையைப் பிடிப்பதிலும் வல்லவர்கள் ஆவார்கள். ஒவ்வொரு காடர் குடியிருப்புக்கும் மூப்பன் என்றொரு பெருந்தனக்காரர் உண்டு. இவர் வயதில் பெரியவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். திருமணம் போன்ற சடங்குகளுக்கு இவரே தலைமை வகிப்பார். மதுரை வீரன், மாரியம்மாள், வனதேவதை முதலிய தெய்வங்களை வணங்குகின்றனர்.

**காடர் மொழி**

இவர்கள் பேசும் மொழிக்கு இலக்கண, இலக்கியம் என்பது கிடையாது. கொச்சைத் தமிழும் மலையாளமும் கலந்த மொழியினையே பேசுகின்றனர். இவர்கள் கல்வி அறிவில் இன்றளவும் பின்தங்கிய நிலையில் தான் உள்ளனர் தற்காலச் சூழலில் இவர்களின் குழந்தைகள் ஒரு சிலர் மட்டுமே பள்ளியில் படிக்க முன் வருகின்றனர்.

**தொகுப்புரை**

பழங்குடிகள் அறிமுகம் என்ற இந்த இயலில் ஆய்வுக்குரிய பழங்குடி இனங்கள் வாழும் பகுதிகள். இவர்களின் உணவு, உடை, கலாச்சாரம், பொருளாதார நிலைகள் பற்றி விவரமாகவும், உரிய நோக்கீட்டுக் குறிப்புகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

இப்பழங்குடி இன மாணவர்களை ஆய்வின் மையப் பொருண்மையாக தெரிவு செய்திருப்பதால் அவர்களைப் பற்றிய விபரக் குறிப்பினைத் தெரிவிக்கும் பொருட்டு உணவு, உடை, இருப்பிடம் பொருளாதாரம் மொழி ஆகிய வாழ்வு சார் செய்திகளை சுருக்கமாக, தக்க துணை ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது.

இவ்வியலில் கூறப்பட்டுள்ள செய்திகளைப் பார்க்கும் போது, சமநிலப் பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையில் வேரூன்றிக் கிடக்கும் முரண்பாடுகளைக் களைவதில் இன்னும் முடிவு எட்டாத நிலையில் உள்ளது. நமது நாட்டின் அரசியல் போக்கில் மலைப் பகுதிகளைச் சார்ந்து வாழ்க்கை நடத்தும் இம்மக்களின் சிக்கல்களைப் போக்குவதற்கு அரசு தனிக் கவனம் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கருதத் தோன்றுகிறது.

இச்சூழலைக் கடந்து மீண்டு வரும் மாணவர்களுக்குக் கல்வித் தரத்தை மேம்படுத்தத் தேவைப்படும் அளவு கோலின் நீளம் அரசுச் சிந்தனைக்குப் பெரும் சுமையாகக் கூட அமையலாம்.

உலகமயமாக்கலினால் மாறிவரும் இன்றைய கால கட்டத்திலும்கூட மலைசார்ந்த கிராமங்கள் அதாவது ‘செட்டில்மென்ட்’ என்பனவற்றில் பழமையான கலாச்சார முறையில் வாழ்ந்து வருகின்றனர் என்பதனை இதன் மூலம் தெளிவாக விளக்கத் தூண்டுகிறோம்.

இவர்களைப் பற்றி கூறப்பட்ட தகவல்கள் என்பன நேரடியாக அவர்கள் தங்கியுள்ள இடங்களுக்குச் சென்றும் இம்மக்கள் குறித்த புத்தக வழிச் செய்தியினைக் கொண்டும், இப்பழங்குடிகள் குறித்த பல்வேறு தகவல்களைச் சேகரித்தும் இவ்வியல் அமைக்கப்பட்டுள்ளது.

# ஆய்வு நெறிமுறை

ஆய்வு நெறிமுறை என்பது ஆய்வாளர் தாம் ஆய்வுப் பொருண்மைக்கு ஏற்ற தகவல்களைத் திட்டமிட்டு ஆய்வுக் கலத்திற்கு நேரடியாகச் சென்று தகவலாளியிடம் தேவையான தரவுகளைச் சேகரிப்பதாகும் (வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-6,1988) "பழங்குடி மாணவர்களுக்கான தமிழ் மொழிப்பாடநூல் ஒரு மதிப்பீட்டாய்வு" என்ற தலைப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை நெறிமுறைப்படுத்தி ஆய்வை நிகழ்த்தப்பட்டுள்ளது. கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் 9 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு பழங்குடி மாணவர்களை இவ்வாய்வுக்கான தரவுப் பொருளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பள்ளிகளில் பயிலும் இருளர், குறும்பர், பணியர், காடர் ஆகிய நான்கு இனத்தைச் சார்ந்த 120 மாணவர்களையும், கற்பிக்கும் 10 ஆசிரியர்களையும் இவ்வாய்விற்கு மாதிரியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளரால் உருவாக்கப் பட்ட தரப்படுத்தப்பட்ட மொழிச் சோதனைகள்; பாடநூல் தன்மைகள் மாணவர்களின் படித்தல் திறன்; ஆசிரியர்களின் கற்பித்தல் திறன் என பல்வேறு நிலைகளில் உரிய விளக்கத்துடன் விளக்கப்பட்டுள்ளது.

## கள ஆய்வுத் திட்டம்

பொதுவாக கள ஆய்விற்குத் திட்டமிடும்போது ஆய்வுக் குறிக்கோள் என்ன என்பதையும் அதற்கான கால அளவினையும் உறுதிசெய்து கொண்டு ஆய்வினைத் தொடங்கவேண்டும். பொதுவாகப் பள்ளியில் பயிலும் பழங்குடி மாணவர்களின் மொழித்திறன் குறித்தோ பாடநூல் குறித்தோ பாடத்திட்டத்தின் குறைபாடு குறித்தோ ஆராயும்போது கீழ்க்காணும் நிலைகளில் கவனம் கொள்ளுதல் வேண்டும்.

மொழிப்பாடம் குறித்து ஆய்வு மேற்கொள்வதால் பொருண்மையின் பாற்தேடுதல் பொருட்டு பின்வரும் நிலைகளைக் காரணிகளாகக் கருதப்பட்டது.

1. கல்வி மாவட்டம்
2. கல்வி வட்டாரங்கள்
3. பழங்குடி மாணவ, மாணவியரின் எண்ணிக்கை
4. உயர்நிலைக்கல்வி / மேல்நிலைக்கல்வி
5. அரசுப்பள்ளி / அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகள்

களப்பணியில் தகவலாளியைப் பேட்டி காணுகின்ற பொழுத பயன்படுத்தப்பட்ட வினாநிரலும், வினாப்பட்டியலும் இன்றியமையாத தாகின்றன. வினா நிரல் அல்லது வினாப்பட்டியல் என்பது சேகரிக்க வேண்டிய செய்திகளைக் கண்டறிய உதவுவதாகும். ஆய்வாளர் எடுத்துக் கொண்ட தலைப்பிற்கேற்ப வினாவை நன்கு சிந்தித்துச் சேர்க்கப்பட்டன. தேர்வு செய்வதோடு அல்லாமல் ஒவ்வொரு வினாவும் மற்றொரு வினாவுடன் தொடர்புடையதாக, முரண்பாடில்லாமல் அமைக்கப்பட்டன. களப்பணிக்குரிய கருவிகள் மற்றும் ஆய்வாளரின் தேவைக்குரியப் பொருட்களை முன் ஏற்பாடுகளுடன் எடுத்துச் செல்லப்பட்டன. இன்றைய ஆய்வு முறைகளில் கள ஆய்வு என்பது பெரிதும் வலியுறுத்தப்படுகின்றன. கள ஆய்வின் மூலம் பல்வேறு செய்திகளைக் கேட்டறிந்து மொழியின் தன்மைக்கு ஏற்ப அறிந்து கொள்ள முடிகின்றன.

இதன் அடிப்படையில் உயர்நிலைப்பள்ளி மற்றும் அரசு பழங் குடியினர் உண்டு உறைவிடப்பள்ளியில் பயிற்று விக்கும் தமிழ்ப்பாட நூல்களை மதிப்பீடு செய்யும் பொருட்டு தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் பழங்குடி மாணவர்களையும் கருத்து நிலையில் அறியக் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

### முன்னோடிக் கள ஆய்வு

மையக் களஆய்வினை நடத்தத் திட்டமிடுகையில் முன்னோடிக் களஆய்வின் மூலமாகக் கிடைக்கப்பெறும் அனுபவத்தைக் கொண்டு மொழிக் களஆய்வினை மேலும் திட்டமிட்டுச் செம்மையாகச் செய்யலாம். முன்னோடிக் களஆய்வில் நேர்ந்த சிக்கல்கள், குழப்பங்கள், தவறுகள் குறைபாடுகள் ஆகியவற்றைத் தவிர்த்து மேலும் திட்டங்களை முறையாக வகுத்துக் கொண்டு ஆய்வு களத்தில் இறங்கலாம். இதனால் கால விரயம். வீண் பொருட் செலவு அலைச்சல்கள் போன்றவற்றை தவிர்க்கலாம். இவ்வாறு முன்னோடிக் களஆய்வு மேற்கொண்ட பிறகு மொழிக் களஆய்வினை மேற் கொண்டதால் எதிர்பார்த்தத் தரவுகளை எளிதாகப் பெறமுடிந்தது.

### மொழிக்கள ஆய்வு

மொழிக்கள ஆய்வு என்பது திட்டமிட்டுள்ள மொழி ஆய்வுப் பொருண்மையை நேரடியாகக் களத்திற்கேசென்று தகவல் தருவோரையோ அல்லது ஆராய வேண்டிய சூழலையோ சந்தித்து, உரையாடித் தகுந்த தரவினைச் சேகரித்து ஆராய்தலே ஆகும். இவை இருவகைப்படும். 1. நேர்முகக் களஆய்வுமுறை. 2. மறைமுகக் களஆய்வுமுறை ஆகும். அவற்றுள் மறைமுகக் களஆய்வு தகவலாளியை நேரடியாகச் சந்திக்காது அஞ்சல்வழி மற்றும் ஊடகங்கள்வழி, வேண்டிய தரவுகளைத் திரட்டி ஆய்வு மேற்கொள்வதாகும். நேர்முகக் களஆய்வில் ஆய்வுக் களத்திற்கே சென்று தகவல்களைச் சேகரிக்கும் போது வினாநிரல், வினாப்பட்டியல்

போன்றவற்றைக் கொண்டு ஆய்வு நடைபெறும் மறைமுகக் களஆய்வில் இவ்ஆய்வு பழங்குடி மாணவர்களின் கற்றல் கற்பித்தல் தொடர்பானது. ஆசிரியர்களையும், மாணவர்களையும் நேரில் கண்டு பெற வேண்டிய தரவுகளை மையப் படுத்தியமைவதால் நேர்முகக் களஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தகவலாளிகள்

அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் 9ஆம், 10 ஆம் வகுப்பு பயிலும் இருளர், குறும்பர், பணியர், காடர் ஆகிய நான்கு இனத்தைச் சார்ந்த 120 மாணவர்களும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் தகவலாளிகளாவர்.

## தகவலாளியைத் தேர்ந்தெடுத்த முறை

ஆய்வின் நோக்கத்திற்கேற்ப தகவலாளியைத் தேர்ந்தெடுக்கப் பட்டது. பழங்குடி மாணவர்கள் வசிக்கும் சூழல், கிராமம், மலைவாழ் இடங்கள், பெற்றோர்களின் தொழில், கல்வி போன்ற விவரங்களையும் அதற்குரிய தகவல்களையும், மாணவர்களின் கல்வித் தகுதியினையும் உயர்நிலைப் பள்ளியான 9 ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு எனத் தனியே தெரிவு செய்யப்பட்டது.

பொதுவாகக் கல்வி கற்கின்ற பழங்குடி மாணவர்களும், தங் களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களும் தகவலாளிகளாகச் செயல்படத் தகுதி படைத்தவர்களே. பழங்குடி மாணவர்களுக்கான வினா நிரலைத் தயாரிக்கும் போதும் அவர்களுடைய கருத்துக்கள் அனைத்தும் மற்றவர்கள் அறியாது இரகசியமாகக் காக்கப்படும் என்ற உறுதிமொழியோடு திரட்டப்பட்டது. அதேபோல் ஆசிரியர்கள் கூறும் கருத்துக்களையும் மற்ற ஆசிரியர்களுக்கோ, தலைமை மற்றும் பள்ளிக்காப்பாளருக்கோ தெரியாத வகையில் காக்கப்படும் என்ற உறுதியுடன் களப்பணியாற்றப்பட்டது.

## மாதிரித் தேர்வுகள்

ஓர் ஆய்வு என்பது எவற்றையெல்லாம் பற்றி அமையுமோ அவையெல்லாம் சேர்த்து அமைந்த குழுவே அந்த ஆய்வுக்கான மொத்த மக்கட்குழு ஆவர். ஆய்வாளருக்கு வேண்டிய விவரங்களைப் பெறுவதற்கு இம்மொத்த மக்கட் குழுவிலிருந்து ஒரு சிறு குழுவை ஆய்வாளர் தேர்ந்தெடுப்பர். இச்சிறு குழு மொத்த குழுவின் மாதிரியாய் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமாய் அமைவது போல பிரதிநிதியாய் இருக்கும். இக்குழுவில் உள்ளவர்களிடமிருந்து மட்டுமே நமக்கு வேண்டிய விவரங்களை ஆய்வாளர் திரட்டிக் கொள்வார். மாதிரிக் குழுவைத் தேர்ந்தெடுக்க பல வழிகள் உள்ளன. அவை பொதுவாக சரிசம வாய்ப்புள்ள மாதிரிகள் மற்றும் சரிசம வாய்ப்பற்ற மாதிரிகள் என்று இருவகைப்படும். இவற்றில் சரிசம வாய்ப்புள்ள கூறிலிருந்து பெறப்படும் முடிவுகள் முழுத்தொகுதியின் தன்மையைப் பெற்றிருக்கும் என்பது புள்ளியியல் மூலமாக

நிருபிக்கப்பட்ட உண்மையாகும். ஆதலால் இவ்வாய்வு சரிசம வாய்ப்புள்ள மாதிரிகளைத் (Random sampling) தேர்ந்தெடுத்து மேற்கொள்ளப்பட்டதாகும். ஆய்விற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகள் சார்ந்திருக்கும் இடத்தின் அடிப்படையில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு பழங் குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் என்று பிரிக்கப்பட்டு பள்ளியில் பயிலும் பழங்குடி மாணவர்கள் சமவாய்ப்பு பிரிதிநிதித்துவம் பெறுமாறு ஓரடுக்கு முறை கடைபிடிக்கப பட்டது.

### ஆய்வுக்கருவிகள்

ஓர் ஆய்விற்குத் தேவையான விவரங்களைச் சோதிக்கப் பயன்படுபவை ஆய்வுக்கருவிகள் எனப்படும். ஆய்வுக்கருவி என்பது ஆய்வு நோக்கத்தை மையமாக வைத்துத் தயாரிக்கப்படும் வினாநிரல்களின் தொகுப்பாகும். ஆய்வுகள் என்பன சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். சிக்கல்களின் தீர்வுகள் தொடர்பான செய்திகள் அடிப்படை விவரங்களின் மூலம் கிடைக்கின்றன. இத்தகைய அடிப்படை விவரங்களை ஆய்வுக் கருவிகள் மூலம் பெறவேண்டி இருக்கின்றது. எனவே ஆய்வுகளைச் செய்து முடிக்க ஆய்வுக்கருவிகள் முக்கியமானதாகும். தமிழ்மொழிப் பாடம் குறித்த இவ்ஆய்வில் வினாநிரல் என்ற ஆய்வுக் கருவியே தரவுகளைத் திரட்டப் பயன்படுத்தப்பட்டது. அதன் போக்கை கீழ்காணும் வரைபடம் மூலம் அறியலாம்.



இவற்றுள் நேர்காணல், சமூக உறவு, அளவு உற்று நோக்கல் ஆகியவை தரவுகளைச் சேகரிக்கும் முறைகளாகும். தேர்வுத்தாள் இருப்புப் பட்டியல் போன்றவை தரவுச் சேகரிக்கப் பயன்படும் ஆய்வுக்கருவிகளாகும். இதன் அடிப்படையில் ஆசிரியர்களும், பழங் குடி மாணவர்களும் கொடுக்கப்பட்ட தரவுகள் வினாநிரல் மூலம் ஆய்வாளரால் சேகரிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன.

## ஐந்து புள்ளியுடையவை

இவ்வாய்விற்கான வினாநிரல் ஐந்து புள்ளியுடைய வினாக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாக்களுக்குக்கீழும் இவற்றைத் தெளிவாக விழுக்காட்டுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

| புள்ளிகள் | விடைகள் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | ---- | 1. |
| 2. | --- | 2. |
| 3. | --- | 3. |
| 4. | --- | 4. |
| 5. | --- | 5. |

## எடுத்துக்காட்டாக

தமிழ் கற்பதற்கு எளிமையாக உள்ள பகுதி எவை?

அ. செய்யுள் பகுதி
ஆ. உரைநடைப் பகுதி
இ. இலக்கணப் பகுதி
ஈ. மனப்பாடப் பகுதி
உ. எல்லாப் பகுதிகளும்

என்ற அடிப்படையில் வினா அமைக்கப்பட்டது.

## தரவு சேகரித்த முறை

தரவுகளைத் திரட்டி மேற்கொள்ளப்படும் ஆய்வுகளில் முதன்மை இடத்தை வகிக்கும் ஆய்வுக்கருவி வினாநிரல் ஆகும். ஆய்வுத் தலைப்பிற்கு ஏற்ற வினா நிரல் கருவியினைத் தேர்வு செய்து அதன் மூலம் ஆய்விற்கான தரவுகளைப் பெறப்பட்டன. தனிநபரின் கருத்துக்கள், நம்பிக்கைகள், இயல்புகள், விருப்பங்கள், விமர்சனங்கள், பழக்க வழக்கங்கள் போன்ற பல்வேறு தரவுகளைத் திரட்டுவதற்கு வினா நிரல் பயன்படுகின்றன. திரட்டப்படுகின்ற தரவுகளின் தரம் சிறந்ததாக அமைய வினாநிரல் அமைப்பு என்பது சிறந்து அமையவேண்டும். ஆய்வாளர் தகவலாளரிடம் இருந்து தம் ஆய்விற்குத் தேவையானத் தகுந்த தரவுகளைப் பெறும் நோக்கில் வினாக்களைத் தெளிவாக அச்சிட்டு தகவலாளியிடம் கொடுத்து நேரடியாகத் தகவல்கள் பெறப்பட்டன. வினாநிரலில் தகவலாளி, ஆய்வாளரின் துணை கொண்டு வினாக்களைப் படித்து விளங்கிக் கொண்டு பின்பு விடைகளைப் பூர்த்தி செய்து பெறப்பட்டன. வினாப்பட்டியலில் ஆய்வாளர் தகவலாளியின் அருகில்

இருந்து கொண்டே தரவுகள் பெறப்பட்டன. வினாப்பட்டியலில் தகவலாளியோடு நேரடித் தொடர்பு என்பது உள்ளன. ஒரே நேரத்தில் 50க்கும் மேற்பட்ட பழங்குடி மாணவர்களிடம் இருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

தமிழ்மொழித் திறன்களில் பழங்குடி மாணவர்கள் எட்டியிருக்கும் அடைவினையும் இன்னும் பல்வேறு செய்திகளையும், சேகரிக்க பள்ளிக்கே நேரடியாகச் சென்று பழங்குடி மாணவர்களைச் சந்தித்துத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. தமிழ்மொழி கற்கும் பழங்குடி மாணவர் களிடமிருந்து பல்வேறு தகவல்களைப் பெற இந்த ஆய்வுக் கருவியானது பயன்படுத்தப்பட்டன. மேலும் திட்டமிட்டு முன்கூட்டியே செய்வதால்தான் கூடுதலான தரவுகளைப் பழங்குடி மாணவர்களிடமிருந்து பெற முடிந்தது.

## வினாநிரல் அமைப்பு

வினா நிரல்கள் இரு பெறும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. அவை, பாடநூலின் தன்மையை மதிப்பீடு செய்வதற்காக ஆசிரியர்களிடம் எழுப்பக்கூடிய வினா நிரல்கள் ஒரு பகுதியாகவும்; கற்றல் செய்திகள் வழி புலப்படும் பாடநூல் மீதான மதிப்பீட்டு ஆய்விற்கு மாணவர்களிடம் கேட்கப்படும் வினா நிரல்கள் மற்றொரு பகுதியாகவும் பிரிக்கப்பட்டு களஆய்வில் பயன்படுத்தப்பட்டன.

## ஆசிரியர்களுக்கான வினா நிரல்

அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் உண்டு உறைவிடப் பள்ளியைச் சார்ந்த பழங்குடி மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வினாநிரலில் 16 வினாக்கள் தரப்பட்டன. அவை ஐந்து காரணிகளைக் கொண்டு அமைந்ததாகும்.

ஆசிரியர்களின் கற்பித்தல் அனுபவம் மற்றும் கற்பிக்கப்படும் மாணவர்களின் வரல் நிலை, பாடநூலின் அமைப்பு முறை, மாணவர்களின் கற்றல் திறன் குறித்து மதிப்பிடல் போன்ற பல்வேறு நிலைகளில் முன்னோடிக் கள ஆய்விற்குச் சென்ற போது, பழங்குடி மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் அனைவரிடமும் தனித் தனியாக வினாநிரல் கொடுத்து ஆசிரியர்களுக்கான வினாநிரல் பூர்த்தி செய்யப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன.

**எடுத்துக்காட்டாக,**

தமிழ் பாடநூல் குறித்த சிறப்புப் பயிற்சி வகுப்பு நடத்தப் படுகின்றதா?

அ. தினமும் ஒரு முறை
ஆ. வாரம் ஒரு முறை
இ. மாதம் ஒரு முறை

என்ற அடிப்படையில் ஆசிரியர்களுக்கான வினாநிரல் தயாரிக்கப்பட்டது.

### பழங்குடி மாணவர்களுக்கான வினாநிரல்

உயர்நிலைப்பள்ளியில் தமிழ் கற்கும் பழங்குடி மாணவர் களிடையே படித்தல் திறன் அடைவினை சோதிக்கும் பொருட்டு பழங்குடி மாணவர்களுக்கான வினாநிரல் உருவாக்கப்பட்டது.

1. பழங்குடி மாணவர்களின் பாலினம், பெற்றோர் கல்வி, பொருளாதாரம், சமூகம் பற்றிய விவரம் குறித்தத் தகவல் திரட்டும் பொருட்டு வினாநிரல் உருவாக்கப்பட்டது.
2. பழங்குடி மாணவர்களுக்குக் கிடைத்துள்ள பொது அறிவு குறித்தும், ஊடக வழியாகக் கிடைக்கப் பெறும் மொழி அறிவு வளர்ச்சி குறித்தும் தகவலைப் பெறும் பொருட்டுத் தகவல் பொழுதுபோக்கு, வீடுகளில் உள்ள செய்தி வழிச்சாதனங்கள், தொலைக்காட்சிநிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு செலவிடும் நேரம், செய்தித்தாள்களைப் படிக்கும் பழக்கம் ஆகியன குறித்த வினாக்கள் இடம்பெற்றன.
3. வினாநிரலில் தெரிவு செய்த அனைத்து வினாக்களையும் முன்னோடி ஆய்வின் மூலமும் சோதனை ஆய்வும் மேற்கொண்டு அதன் வழித் தரப்படுத்தப்பட்டும் நிலைப்படுத்தப்பட்டும் கள ஆய்வில் பயன்படுத்தப்பட்டன.

### எடுத்துக்காட்டாக

தமிழ் கற்கும் போது பிழை எற்படும் நிலை?

அ. பேச்சு வழக்கில்
ஆ. எழுத்து வழக்கில்
இ. உச்சரிப்பு வழக்கில்
ஈ. எதுவுமில்லை

என்ற அடிப்படையில் மாணவர்களுக்கான வினாநிரல் தயாரிக்கப்பட்டது.

### வினாநிரலின் கூறுகள்

வினாக்களுக்கான விடைகள் என்பவை அதன் கூறுகளாகிய முழுமை, தெளிவு, சிக்கலின்மை, சந்தர்ப்பம் ஆகியவற்றைச் சார்ந்தே இருக்கவேண்டும். எனவே ஆய்விற்கான வினாநிரல் உருவாக்குவதில் மிகுந்த கவனம் தேவை.

- தகவலாளியின் கல்வித்தரத்தையும் அறிவு நிலையையும் மனதில் கொண்டு வினாநிரல் அமைக்கப்பட்டது.
- எளிமையான அடிப்படைத் தரவுகளைத் தரக்கூடிய வினாக்களும் அதன் பின்பு துணை வினாக்களும் வரிசையாக அமைக்கப்பட்டது.

- நேரடியாகக் கேட்கப்படும் வினாக்கள் அமைக்கப்பட்டது. இதனால் விடைகள் தெளிவாகவும் அதிகம் பயன்பாடு உடையதாகவும் காணப்படும்.
- ஆம் அல்லது இல்லை என்ற விடைகளைத் தரக்கூடிய வினாக்கள் ஆய்வின் போது பிரித்தரிய எளிதாயிருக்கும். எனவே அவ்வகையான வினாக்கள் சில இடங்களில் கேட்கப்பட்டது. எல்லா நிலைகளிலும் இத்தகைய வினாக்கள் இடம் பெறவில்லை.
- வினாக்களில் சிக்கலும், தெளிவின்மையும் இரட்டைப்பொருளும் இல்லாது தவிர்க்கப்பட்டது.
- வினாக்களுக்கு விடைதரும் முறையைக் கொண்டு வகைப்படுத்தித் தொடர்புடைய கூறுகளுக்கேற்பத் தொகுத்து அளிக்கப்பட்டிருக்கிறது.
- தகவலாளியைச் சங்கடப்படுத்தும்படியான வினாக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.
- தவலாளியின் அறிவின் எல்லைக்கேற்றவாறு வினாக்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- தகவலாளி குறைவாக எழுதும் வண்ணம் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டன.

### வினாநிரல் குறித்து தகவலாளிக்கான குறிப்புகள்

வினாநிரலை எப்படி நிரப்புவது, விடைகளை எந்தப் பகுதியில் குறிப்பிடுவது என்று தகவலாளிக்கு ஆய்வாளர் தரவிரும்புகின்ற இன்னும் சில குறிப்புகள் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது. தனக்குத் தெரிந்த உண்மையான கருத்துக்களை மட்டுமே எழுதவேண்டும் என்று தகவலாளிக்கு தெரிவிக்கப்பட்டது.

ஆய்வாளர் எதிர்பார்க்கும் தரவுகளைத் தகவலாளியிடமிருந்து பெறவேண்டும் என்றால் ஆய்வாளரும் தகவலாளிக்குத் தேவையான விபரங்களைக் கொடுக்கவேண்டும். தேவையான விபரங்கள் அளிக்கப் படாதிருந்தால் தகவலாளி வினா நிரலை நிரப்ப இயலாமல் குழப்பத்தினாலோ அல்லது சலிப்பினாலோ வினாநிரலை நிரப்பாமல் விட்டுவிடுவார். இத்தகைய இடர்பாடுகளைத் தவிர்க்க வினா நிரலை நிரப்புவது குறித்த அனைத்து விபரங்களையும் தகவலாளிக்குக் கொடுக்கப்பட்டது.

### தர அளவுகோல்

பழங்குடி மாணவர்களின் படித்தல் திறன், விடாமுயற்சி, ஒத்துழைப்பு, நேர்மை, கவலையின்மை போன்ற பண்புக்கூறுகள் ஆய்வுகளில் தர அளவு கோலாகப் பயன்படுகின்றன. எழுத்துப்பணிகள்,

துணைக்கருவிகள், கற்றல் திறன், கற்பித்தல் திறன் போன்ற மதிப்புகளின் மூலமும் தகவல்கள் பெறப்பட்டன.

ஒவ்வொரு பண்புக்கூறுகளும் அவற்றின் அளவைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கும் முறையில் எண்கள் / பண்புச்சொற்கள் / சொல்விளக்கங் கள் போன்றவைகளால் வரையறுக்கப்பட்டன. அவ்வாறு நிகழ்வது மதிப்புகளடங்கிய அளவுகோலின் அடிப்படையில் கூறப்படும்.

பொதுவாகப் பண்பின் அளவு 4 புள்ளிகள் அல்லது 5 புள்ளிகள் கொண்ட அளவுகோலில் (4 poin or 5 point scale) குறிப்பிடப்படும். இவை நுட்பமான தர ஆய்வு அளவுகோல் ஆகும். இப்புள்ளிகள் என்பவை பண்பின் நிலைகளை அல்லது எல்லைகளைக் குறிப்பிடும் புள்ளிகள் ஆகும்.

## நான்கு புள்ளியுடையவை

நான்கு புள்ளிகள் உடையவற்றில் பள்ளியின் பெயர் / தன்மை / குறித்த வினா, அரசுப் பள்ளி, தனியார் அரசு பழங் குடியினர் உண்டு உறைவிடம் போன்ற எல்லைகள் இருக்கும். கற்பித்தல் நிலை, கையெழுத்து போன்ற நிலையில் தரஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஐந்து புள்ளியுடையவை

ஐந்து புள்ளியுடைய வினா நிரலில் மதிப்பீடு ஐந்து நிலைகளில அமையும். இது ஆய்வின் தன்மையைப் பொறுத்து பயன்படுத்தப்படும். இம்முறையில் குறைந்த காலத்தில் விவரங்களைப் பெறலாம்.

## தமிழ் மொழிப் பாடநூல்களில் பயிற்சிகள்

தமிழ் மொழிப் பாடநூலில் மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாததாகக் கருதப்படுபவை செய்யுள், உரைநடை, இலக்கணம் போன்றவைகள் ஆகும். பழந்தமிழ் இலக்கியங்கள் என்பன பெரும்பாலும் இலக்கண வரையறைக்குட்பட்டதாகும். இதன் முறையான இலக்கணப் பயிற்சியை மேற்கொண்டு இலக்கியங்களை உணர வேண்டி உள்ளது. மொழிப் பாடநூலில் செய்யுள் உரைநடை பகுதிகளில் தொடர்ந்து பயிற்சிகள் தரப்படுகின்றன. இந்தப் பயிற்சிகள் மாணவர்களின் பல்திறன் அறிவு வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது. உயர்நிலைப் பள்ளியில் 9-ஆம் வகுப்பு மற்றும் 10-ஆம் வகுப்பு மொழிப் பாடநூல்களில் கொடுக்கப்பட்ட பயிற்சிகளான அருஞ்சொற்பொருள் சேர்த்து எழுதுதல், பிரித்தெழுதுதல், இலக்கணக் குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சி விதி போன்றவை முக்கியப் பகுதிகளாக செய்யுள் பகுதிகளில் கருதப்படுகின்றன. இது போன்றே உரைநடைப் பகுதிகளிலும் சில பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி எழுதுதல், பேசுதல், கேட்டல், படித்தல் போன்ற பயிற்சிகளும் மாணவர்களின் மொழி வளர்ச்சிக்கு வழி வகுப்பனவாக உள்ளன.

### பயிற்சி விளக்கம்

பயிற்சி என்பது ஒரு மாணவனை வளப்படுத்தக் கூடிய வழிமுறை என்று கருதலாம். முறையான பயிற்சி மட்டுமே ஒருவனை மேம்படுத்துவதற்கான சிறந்த வழியாகும். எனவே எல்லா நிலைகளிலும் பயிற்சிகள் அமைவதுண்டு. கற்றல் மற்றும் கற்பித்தல் சூழலில் மாணவர்களின் மொழி சார்ந்த வளர்ச்சிக்கும், ஆளுமைக்கும் அடிப்படையாக அமைகின்றன. மொழிப் பாடநூல் ஒவ்வொன்றிலும் தொடர்ந்து பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன.

### சிறந்த பாடத்திட்டத்தின் தன்மைகள்

1. திட்டமிட்ட கற்றலுக்கு அடிப்படையாக அமைய வேண்டும்.
2. பாடத் திட்டம் என்பன கற்கின்ற மாணவனை சாதிப்பதற்கு தூண்டும் வகையில் அமைய வேண்டும்.
3. நவீன காலத்திற்கு ஏற்ற வகையில் மாற்றம் கொண்டிருக்க வேண்டும்.
4. சிறந்த பயன்பாடுகள் உடையதாக இருக்க வேண்டும்.
5. தனியாள் வேற்றுமையை கவனிக்கத்தக்க வகையில் அமைய வேண்டும்.
6. பாடத் திட்டத்தில் செயல்பாடுகள் அதிகம் இருக்க வேண்டும்.
7. பாடத் திட்டம் மாணவர்களின் தரத்திற்கு ஏற்ற வகையில் அமைந்திருக்க வேண்டும்.
8. உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமைந்து இருத்தல் வேண்டும்.
9. பாட நூல் சிறந்த சிந்தனைகளைத் தூண்டுவதாக அமைய வேண்டும்.
10. சிறந்த ஒழுக்கத்தை வளர்ப்பதாக இருக்க வேண்டும். (ஆரம்பக் கல்வி திட்ட மேலாண்மை N.C.E.R.T, ப.163)

### 9-ஆம் வகுப்பு தமிழ் மொழிப் பாட நூல் அமைப்பு முறை

பொருளடக்கம்

| செய்யுள் | மனப்பாடப் பகுதி | உரைநடை |
| --- | --- | --- |
| 1. வாழ்த்து | 1. வாழ்த்து | 1. தமிழ் மொழி வளர்ச்சி பற்றிய பாடம் |
| 2. அறவுரை | 2. அறவுரை | 2. கடிதம் குறித்த பாடம் |
| 3. தொடர்நிலைச் செய்யுள் | 3. தொடர் நிலைச் செய்யுள் | 3. மாநகரம் குறித்த பாடம் |

| | | |
|---|---|---|
| 4. மொழி பெயர்ப்புப் பாடல் | 4. பல்சுவைப் பாடல்கள | 4. உடல் நலம் குறித்த பாடம் |
| 5. மறுமலர்ச்சிப் பாடல்கள் | | 5. அறிவியல் சார்ந்த பாடம் |
| 6. வழிப்பாட்டுப் பாடல்கள் | | 6. தலைவர்கள் பாடம் |
| | | 7. நடைமுறை அரங் கம் |
| | | 8. மனிதநேயம் சார்ந்த பாடம் |
| | | 9. இலக்கிய நாடகம் சார்ந்த பாடம் |

9-ஆம் வகுப்பு பாடநூலின் செய்யுள் பயிற்சிகள்

1. நூற் குறிப்பு
2. ஆசிரியர் குறிப்பு
3. அருஞ்சொற்பொருள்
4. தொடர்களைப் பிரித்தறிதல்
5. இலக்கணக் குறிப்பு
6. பகுபத உறுப்பிலக்கணம் தருக
7. பொருளுணர் பயிற்சி
8. மொழித்திறன் பயிற்சி
   அ. பொருளுணர்ந்து பொருத்துக
   ஆ. மோனைச்சீர்களை அறிதல்
   இ. கோடிட்ட இடங்களை நிரப்புக
   ஈ. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக

9-ஆம் வகுப்பு பாடநூலின் உரைநடைப் பயிற்சிகள்

1. ஆசிரியர் குறிப்பு
2. அருஞ்சொற்பொருள்
3. பொருளுணர் பயிற்சி
   அ. கோடிட்ட இடங்களை நிரப்புக
   ஆ. பொருத்துக
   இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளி
   ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளி
   உ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடையளி
4. மொழித்திறன் பயிற்சி
   அ. சந்திப்பிழையின்றி எழுதுக
   ஆ. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக
   இ. வாக்கிய வகை சுட்டுக
   ஈ. விடை அமையுமாறு வினா அமைக்க
   உ. நிறுத்தக் குறிகளை இட்டு எழுதுக
   ஊ. சொற்களுக்கு அகராதியைப் பயன்படுத்தி ஏற்ற பொருள் எழுதுக

3.

## 10-ஆம் வகுப்பு தமிழ் மொழிப் பாட நூல் அமைப்பு முறை

பொருளடக்கம்

| செய்யுள் | உரைநடை | மனப் பாடப் பகுதி |
| --- | --- | --- |
| 1. வாழ்த்துப் பகுதி | 1. அறிவியல் குறித்த பாடம் | 1. இறை வாழ்த்து |
| 2. அறவுரைப் பகுதி | 2. புலவர்கள் குறித்த பாடம் | 2. மொழி வாழ்த்து |
| 3. தொடர்நிலைச் செய்யுள் | 3. ஒழுக்கம் சார்ந்த பாடம் | 3. திருக்குறள் |
| 4. மொழிபெயர்ப்புப் பாடல் | 4. தலைவர்கள் குறித்த பாடம் | 4. திரிகடுகம் |
| 5. பல்சுவைப் பாடல்கள் | 5. நாடகம் குறித்த பாடம் | 5. சிலப்பதிகாரம் |
| 6. மறுமலர்ச்சிப்பாடல்கள் | | 6. கம்பராமாயணம் |
| 7. வழிப்பாட்டுப் பாடல்கள் | | 7. இரட்சணிய யாத்திரிகம் |
| | | 8. புறநானூறு |
| | | 9. உலக ஒற்றுமை |
| | | 10. விண்மீன் கூட்டம் |

## 10-ஆம் வகுப்பு பாடநூலின் செய்யுள் பயிற்சிகள்

1. நூற்குறிப்பு
2. ஆசிரியர் குறிப்பு
3. அருஞ்சொற்பொருள்

அ. தொடர்களைப் பிரித்தறிதல்
ஆ. இலக்கணக் குறிப்பு
இ. பகுபத உறுப்பிலக்கணம்
ஈ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளி
உ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளி
ஊ. புறவய வினா

4. மொழித்திறன் பயிற்சி

அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

## 10-ஆம் வகுப்பு பாடநூலின் உரைநடைப் பயிற்சிகள்

1. அருஞ்சொற்பொருள்
2. பயிற்சி வினா

அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளி
ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளி
இ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடையளி
ஈ. புறவய வினா

3. மொழித்திறன் வளர் பயிற்சி
   - அ. விடை வருமாறு ஏற்ற வினா அமைத்திடுக
   - ஆ. சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக
   - இ. பிற மொழிச் சொற்களுக்கு கேற்ற தமிழ்ச் சொற்களை எடுத்தெழுதுக
   - ஈ. தொடர்கள் எவ்வகை சார்ந்தவை
   - உ. வாக்கியங்களில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக
   - ஊ. வாக்கியத்தில் அமைத்து எழுதுக

4. மொழித்திறன் வளர் தொடர் பயிற்சி
   - அ. அறிவியல் கலைச் சொற்களைப் போல மேலும் புதுப் புது கலைச் சொற்களைத் தொகுத்து எழுதுக.

இவ்வாறு 9-ஆம் வகுப்பு, 10-ஆம் வகுப்பு பாடநூலில் பயிற்சி முறைகள் குறித்து விளக்கப்படுகின்றன.

## பாடநூல் பற்றிய ஆசிரியர் கருத்துக்கள் - மதிப்பீட்டு அட்டவணை

பழங் குடி மாணவர்களின் கல்வி நிலையைப் பற்றியும், பாடநூல் கற்றல் சூழல், மொழி அறிவு, இலக்கிய வகை முறைமையில் அமையப் பெறும் பாடநூல் பங்களிப்பு முறை, பயிற்சிகள் மற்றும் இதன் தொடர்பான கூறுகளை மையப்படுத்திய வினாக்களுக்கானக் கருத்துக்களைத் திரட்டி மதிப்பீட்டு அட்டவணையில் விழுக்காடுகளாகப் பிரித்துத் தரவுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இவ் ஆய்வில் கருதுதலுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மலையினப் பழங்குடி மாணவர்கள் பயிலும் உயர்நிலைப்பள்ளிகளும், அப்பள்ளிகளில் மொழிப்பாடம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் கணக்கிட்டுக் களப்பணி மேற்கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. அதன் படி மதிப்பீட்டிற்கு உட்படுத்தியத் தரவுகளை விகிதச்சார அடிப்படையில் அட்டவணைப்படுத்தப்பட்டு இயல்களின் இறுதியில் விளக்க முறையாகத் தரப்பட்டுள்ளன.

## தொகுப்புரை

ஆய்வு நெறிமுறைகள் என்ற இந்த இயல் ஒட்டுமொத்த ஆய்விற்கும் முன் வரைவாக அமையும். ஆய்வு நெறிகளின் பகுப்புக் கூறுகளான கள ஆய்வு, முன்னோடி ஆய்வு, அதற்கான களங்கள், தகவலாளிகள், அவர்களைத் தெரிவு செய்த விபரம், களஆய்வுப் பணியைத் திட்டமிட்டுச் செய்தது. வினா நிரல் தயாரித்தது 9-ஆம் வகுப்பு, 10-ஆம் வகுப்பு பாடநூல் அமைப்பு முறைகள் போன்ற பல்வேறு நிலைகள் பற்றி விளக்குகிறது.

# கற்பித்தல் வழி பழங்குடி மாணவர்களின் மொழித் திறன் மதிப்பீடு

பள்ளிக் காலத்திட்டத்தில் பழங்குடி மாணவர்களுக்குத் தமிழே முதல் மொழியாக உள்ளது. ஆனால் சமூகச்சூழலில் எழுத்து வழக்கற்ற தங் கள் தாய்மொழிகளிலேயே பேசிப்பழகிய பழங் குடி மாணவர்களுக்கு இரண்டாம் மொழியாக உள்ளது. இந்நிலையில் பழங்குடி மாணவர்களுக்குத் தமிழை முதல்மொழியாகப் பள்ளியில் கற்பிக்கும் போது சிக்கல் ஏற்படுகிறது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு, ஒரு மொழி வழக்குச் சூழலில் தமிழைக் கற்பதில் ஏற்படும் சிக்கல் என்பது; இருமொழி மற்றும் பன்மொழி வழக்குச் சூழலில் தமிழைக் கற்பதில் ஏற்படும் சிக்கல்களிலிருந்து வேறுபட்டதாகும். இதனடிப்படையில் நோக்கும் போது மொழிப்பாடம் மட்டுமல்லாது; மொழி சாராத பிற பாடங்களைக் கற்பதிலும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் கற்பித்தல் நிலையில் நெகிழ்வுத் தன்மை இருப்பது ஓரளவிற்கு இச்சிக்கல்களைத் தீர்க்கும். எனவே மொழி ஆசிரியர் பழங்குடி மாணவனின் புரிதல் திறனை அறிந்து அதற்கு இனக்கமாகவும், பாடத்தின் ஒழுங்கு குறையாமலும் ஒரு நடுநிலைமையிலிருந்து தன் கடமை யாற்றுபவராக இருப்பார்களேயானால் பழங்குடி மாணவர்களின் கல்வியறிவு உயர்நிலையை எட்டலாம். அதோடு பள்ளியின் மீது விருப்பமும் கல்வியின் மீது ஆர்வமும் வந்து ஓரளவிற்கு இடைவிலகலி லிருந்து பழங்குடி மாணவர்களை மீட்கலாம்.

பழங்குடி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை அல்லது கற்றல் ஆர்வத்தைக் குறைக்கும் காரணிகளைக் கண்டறிந்து அவற்றைத் தீர்க்க முற்படாமல் கல்வியறிவு குறித்துப் பேசிப்பயனில்லை. பழங்குடி மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் பழகியதிலிருந்தும் அதோடு பல பள்ளிகளைப் பார்வையிட்ட அனுபவங் களிலிருந்தும் கற்றல் ஆர்வத்தைக் குறைக்கும் காரணிகளாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்

1. பழங்குடி மாணவர்களின் உடற்கூற்றுகள்
2. பழங்குடி மாணவர்களின் மொழிச்சிக்கல்
3. பழங்குடி மாணவர்களின் குடும்பச்சூழல்
4. பழங்குடி மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் மனப்பாங்கு
5. பழங்குடி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பிக்கும் முறை
6. பாடநூல் வரையறை

இவை போன்ற காரணிகளை எவ்விதத்தில் நீக்குவது என்பதையும், எவ்வித மாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டால் பழங்குடி மாணவர்கள் கல்வியில் மேம்பாடு அடைவர் என்பதையும் மொழியியலாரும், கல்வியியலாரும் எண்ணிப் பார்க்க வேண்டியது இன்றைய உடனடித் தேவையாகும். குறிப்பாக, மொழி கற்பிப்பதில் உள்ள சிக்கல்களை நீக்குவது அவசரத்தேவையாகும். மேலும், மொழிப் பாடமில்லாத பிற பாடங்களைக் கற்பதற்கு அடிப்படையாக இருப்பது மொழித்திறனே என்பதை மொழியாசிரியர்கள் உணர்ந்து தாங்கள் கற்பிக்கும் மொழிப் பாடத்தின் மூலம் பிற பாடங்களில் தேர்ச்சி பெறுவதற்கு பழங்குடி மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். பழங்குடி மாணவனின் தாய்மொழிக் குறிக்கீடும், கற்பித்தலில் பயிற்று முறையும், தம் மொழியில் சிந்தித்தாலும் கற்றல் நிகழ்வு வேறு மொழியில் (தமிழ் மொழியில்) இருப்பதாலும் இவ்விருநிலைகளுக்கிடையே ஆசிரியரின் மனப்பாங்கும் முக்கியபங்கு வகிப்பதை உணரலாம். மேற்குறித்துள்ள ஏழு காரணிகளுள் பழங்குடி மாணவனின் மொழிச்சிக்கலும், ஆசிரியரின் பயிற்று முறைச்சிக்கலுமே ஆய்வுப்பொருளாக எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. (கருணாகரன், 1986).

## மொழியின் இயல்பு

"ஒரு மொழியின் இலக்கணம் என்பது பேசுபவர் அல்லது கேட்பவரின் மூளையில் தன்னகப்படுத்திக் கொள்ளப்பட்ட மொழித் திறனின் விளக்கம் மொழியைப் பேசுகின்ற ஒவ்வொருவருக்கும் தம்மொழியறிவை வெளியிடுகின்ற இலக்கணத்தைத் தன்னகப்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்று சோம்ஸ்கி (1965:4-8) கூறுகிறார். இது எண்ணற்ற வாக்கியங் களைப் புரிந்து கொள்ளும் ஆற்றலையும் உருவாக்கும். இவ்விலக்கணம், மொழியைக் கற்பிக்கப்பட வேண்டுமானால் இந்தத்திறன்களை மொழி கற்பவர்களிடம் உருவாக்க முயல வேண்டும். ஆகையால், மொழிச்செயல் செம்மைாக இருக்க மொழித்திறன் தேவையாகும்.

## மொழிக்கல்வி

பொதுவாக இன்று பெரிதும் வளர்ந்து வருகின்ற மொழிக்கல்வி பற்றிய ஆய்வுகள் மொழிக்கற்றலை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. புதிது, புதிதாக எழுகின்ற கோட்பாடுகள் அப்படியே பழைய கோட்பாடுகளையும் பதிலீடு செய்வதில்லை. மாறாக அவற்றின் போதாமையும் குறைபாடுகளையும் புதிய கோணத்தில் ஆய்வு செய்து விளக்க முற்படுகின்றன. எனவே மொழிக்கல்விக்கு அடிப்படையாக அமைகின்ற மொழியியல் விளக்கங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. மொழியியலின் இலக்கண விளக்கங் கள் மொழி கற்பதற்கு எந்த அளவு உதவ முடியும் எனபதில் ஐயம் ஏற்பட்டது. இரண்டாம் மொழியாகப் பயில்கின்றவர்களின் மொழித்திறன் தாய்மொழித்திறனிலிருந்து வேறுபட்டது. ஒரு குழந்தை ஒரு

மொழியைக் கற்பதற்கு உதவும் பொறியமைப்பு ஓர் உள்ளுணர்வாகவே இருக்கின்றது" என சோம்ஸ்கி (1965) கூறுகிறார். மொழி கற்பது என்பது மொழியின் அடிப்படை விதிகளைத் தன்னகப்படுத்திக் கொள்வது எனலாம். தாய்மொழியைக் கற்கத் துணைபுரிகின்ற அந்த மொழி யமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி இரண்டாம் மொழியைக் கற்கத் துணை செய்வதே இரண்டாம் மொழிக்கல்வியின் நோக்கம்.

### பழங்குடி மாணவனின் மொழிச்சிக்கல்

தமிழைத் தாய்மொழியாக அல்லது முதல் மொழியாகக் கொண்டுள்ள ஒரு மாணவன் முதன்முதலாகப் பள்ளிக்குச் செல்லும் போது அவன் இதுவரை தெரிந்துள்ள பேச்சு மொழிக்கும் பள்ளியில் கற்றுத்தரும் எழுத்து மொழிக்கும் உள்ள வேறுபாட்டைக் காண்பான். இதுவும், கற்றலில் மாணவனுக்கு ஏற்படும் மொழிச்சிக்கல்தான். அதாவது பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் அல்லது வீட்டு மொழிக்கும் பள்ளியில் பயிற்றுவிக்கும் மொழிக்கும் உள்ள வேறுபாடு கற்றலில் சிக்கலை ஏற்படுத்துகிறது. கூடுதலான ஒரு சிக்கலாக பழங்குடி மாணவன் எதிர்கொள்கிறான். தனது தாய்மொழியிலிருந்து கற்கும் வழி மொழி முற்றிலும் வேறாக இருப்பதுதான். எனவே பழங்குடி மாணவர்கள் இருநிலைச் சிக்கலையும் எதிர்கொள்கின்றனர். ஏனென்றால் இதுவரை பழகிய மொழியைப் புறக்கணித்து விட்டு புதிய, தெரியாத மொழியைக் கற்க நேரும்போது உள்ள இடர்பாடு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

பழங்குடி மாணவர்கள் தமிழ் கற்றலில் உள்ள குறைவான ஊக்கம், அதிக அளவில் தாய்மொழிக் குறுக்கீடு, பேச்சு வழக்கில் கூட தமிழ்ச் சொற்களைக் கையாளத் தெரியாத நிலை அல்லது மிகக் குறைந்த அளவே தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்திப் பேசுதல், ஆசிரியர்கள் மேல் உள்ள மனப்பாங்கு, புலனறிவுத் திறன் ஆகிய வேறுபாடுகள் குறித்து ஆராயும் போதுதான் பழங்குடி மாணவர்கள் தமிழ் கற்கும்போது அதிகச் சிக்கலை எதிர்கொள்வது தெரியும். பொதுவாக, தமிழ் கற்றலில் பிற மொழிச் சிறுபான்மையினரும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் எதிர் கொள்ளும் சிக்கல்களிலிருந்து பழங் குடி மாணவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் வேறுபடுகின்றன. இவற்றிற்குச் சான்றாகச் சில காரணங்களைக் குறிப்பிடலாம்.

1) பழங்குடி மாணவர்கள் தமிழில் பேசும் திறன் குறைந்த அளவே பெற்றிருக்கின்றனர்.

2) பல மாணவர்கள் தமிழில் பேசத் தெரிந்திருந்தாலும் பழங்குடி மாணவர்களின் பேச்சுத்தமிழுக்கும், எழுத்துத் தமிழுக்கும் உள்ள இடைவெளி அதிகம்.

3) அதிக நேரமும், திறனும் செலுத்தித்தான் பழங்குடி மாணவர்கள் எழுத்து மொழியைக் கற்கமுடிகிறது.

4) கருத்தை வெளிப்படுத்தும் சொற்களைப் புரிந்து கொள்வதில் பழங்குடி மாணவர்களுக்குச் சிக்கல் அதிகம் ஏற்படுகிறது.

5) ஆசிரியர்கள் மொழிப்பாடம் கற்றுத்தரும்போது பழங்குடி மாணவர்கள் கவனித்தல், பேசுதல், எழுதுதல், வாசித்தல் ஆகிய நான்கு மொழித்திறன்களிலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிககவனம் செலுத்த வேண்டியுள்ளது.

6) வகுப்பறைச் சூழலில் மாணவர்களைக் கட்டுப்படுத்தி பாடக்கருத்துக்கு அழைத்துச் செல்வது என்பது பழங்குடி மாணவர்களின் வகுப்பறையைப் பொறுத்தவரை அதிகமுயற்சி செய்தால்தான் இயலும்.

ஆசிரியரின் பயிற்றுமுறைச்சிக்கல்

வகுப்பறை நிர்வாகத்தில் ஆசிரியர் முக்கிய இடத்தைப் பெறுகிறார். மாணவன் அடைய வேண்டிய இலக்கினை அடையாளம் காட்டுதல், அதற்கேற்ப பாடப்பொருளையும் பயிற்று முறையையும் அமைத்துக் கொள்ளுதல், ஆகியன ஆசிரியரின் முக்கிய பணிகளாகும். ஏனென்றால் எப்படிக் கற்பிப்பது; எதனைக் கற்பிப்பது; எந்த அளவிற்குக் கற்பிப்பது என்ற முடிவினைச் செய்ய வேண்டியது ஆசிரியரே. இந்நிலையில், கற்றலை மையமிட்ட கல்வியையே அனைவரும் வற்புறுத்திவரும் இன்றைய நிலையில் கற்றலுக்குத் துணைபுரியும் ஆசிரியருக்கும் சில சிக்கல்கள் எழுகின்றன. பழங்குடியினருக்குத் தமிழ் கற்பித்தலில்

1) மாணவர்களுக்கு ஆசிரியரே சிக்கலாகக் காட்சியளிக்கிறார்.

2) ஆசிரியர் தாமாகவே எதிர்கொள்ளும் சில சிக்கல்களும் உள்ளன.

பொதுவாக, பழங்குடி இன மாணவர்களுக்குப் பயிற்று விக்கும் ஆசிரியர்களை அம்மாணவர்கள் அந்நியர்களாகவே கருதுகின்றனர். ஏனென்றால், ஆசிரியர்கள் பழங்குடி இன மொழிகளைப் பேசுபவரல்லர், ஆதலால் தம்மொழியோடு உறவில்லாத நிலையில் ஆசிரியர்களுடன் மாணவர்கள் இனக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. புதிய மொழியில் (பள்ளி மொழியில்) பாடம் கற்பிக்கப்படும் வகுப்பறைச்சூழல் பழங்குடி மாணவர்களுக்கு ஒருவிதத் தாழ்வு மனப்பாங்கை ஏற்படுத்துவதோடு அம்மாணவர்களும் ஆசிரியர்களும் ஒருவருக்கொருவர் எதிர்மறை மனப்பாங் கினை வளர்த்துக்கொள்ள இடமளிக்கிறது. இந்நிலையில் ஆசிரியரையே ஒரு சிக்கலாக பழங்குடி மாணவர்கள் எண்ணுகின்றனர். இதனால் வகுப்பறைச் சூழலுக்கு அவர்களை ஈர்த்து கற்பித்தலை ஊக்கப்படுத்துவதில் ஆசிரியர் தடுமாறுகிறார். இப்படியொரு சிக்கலை வேறு எங்கும் (பழங்குடியினர் பள்ளிகள் தவிர) அவர் எதிர் கொண்டதில்லை. இச்சூழலுக்கு ஏற்ற பயிற்று முறையையும் அவர் பயிற்சிப் பள்ளியில் கற்றதில்லை. பணிக்கு வந்த பிறகும் இச்சூழலுக்கு ஏற்ற புதிய பயிற்சிகளை அரசும் அளிக்கவில்லை. எனவே பழங்குடி மாணவர்களுக்கு எந்த முறையில் கற்பிப்பது என்பது ஆசிரியர்களுக்குச் சிக்கலை ஏற்படுத்துகிறது.

குறிப்பாக, புதிதாகப் பணிக்கு வந்துள்ள ஆசிரியர்களுக்குச் சிக்கல்கள் அதிகம் எனலாம். இதனால் வகுப்பறை நிர்வாகத்தின் முக்கிய செயல்பாடுகளான திட்டமிடுதல், ஒன்று சேர்த்தல், கட்டுப்படுத்துதல் முதலியவற்றைச் செம்மையாக நடத்துவதில் ஆசிரியர்கள் பின்தங்கி விடுகின்றனர். இதன் காரணமாகப் பழங்குடி மாணவர்களுக்குத் தரப்பட வேண்டிய புரிதல் அளவும் குறைகிறது. நாம் எதிர்பார்க்கும் விளைவளவும் குறைகிறது. வேறு வகையில் கூறினால் மொழிக் கற்பித்தல் செயலில் தூண்டல் குறைவதனால் மொழிச்செயலில் நாம் எதிர்பார்க்கும் அளவு வகுப்பின் தரத்திற்கு ஏற்றவாறும் பழங்குடி மாணவனின் வயதுக்கு ஏற்றவாறும் இருப்பதில்லை.

மொழிச்சிக்கலும் அதனால் ஏற்படும் பயிற்றுமுறைச்சிக்கலும் வகுப்பறை நிர்வாகத்தைச் செம்மையாகச் செயல்படுத்த முடியாத நிலைக்கு மாற்றிவிடுகிறது என்பதைக் கல்வியியலார் எண்ணிப்பார்க்க வேண்டும். அப்போதுதான் மொழியியலார் துணையுடன் மொழிச் சிக்கலைச் செம்மைப்படுத்த இயலும்.

### மொழி கற்கும் நிலை

மொழி கற்கும்பொழுது பல சிக்கல்களும் சங்கடங்களும் எதிர்ப்படுகின்றன. அவற்றுடன் பல வினாக்கணைகளும் தொடுக்கப் படுகின்றன. முதலாவதாக முன்மொழி கற்க வேண்டும்? என்னும் வினா எழுகின்றது. இங்கே இலக்கணமா? அல்லது இலக்கியமா? இல்லை யென்றால் செய்தித்தொடர்புத்திறமையா? எதை அடிப்படையாக அடையவேண்டும் என்ற சிக்கல் எழுகின்றது. இதனைத் தொடர்ந்து கற்பவர் யார்? எப்படிக் கற்கிறார்? எந்த நிலையை அடைந்திருக்கின்றார்? என்ற வினாக்கள் எழுகின்றன. இவ் அளவுகோல் பழங்குடி மாணவர்களின் கற்றல் நிலைக்குப் பொறுத்தி, அதனைப் புரிந்து மதிப்பிடுதல் தேவையாகிறது. இத்தகைய மதிப்பீடுகளைக் கொண்டு ஓரளவிற்கு பழங்குடி மாணவர்களின் பல்வேறு திறன்களை அறிந்து கொள்ள முடியும்.

### மொழி கற்பித்தல் முறைகள்

மனிதன் தனது கருத்தைப் பிறருக்கு உணர்த்தவும் பிற கருத்தைத் தான் உணரவும் பயன்படுவது மொழி. கருத்தைப் பேசியோ, எழுதியோ, உணர்த்தலாம். கேட்டோ, படித்தோ உணரலாம். எனவே கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியன அடிப்படைத் திறன்களாக அமைக்கின்றன. ஒரு மொழியில் இந்நான்கு திறன்களையும், மாணவன் அடைந்தால்தான் அவன் அம்மொழியை முழுமையாகக் கற்றவனாவான். ஆனால் இன்று தமிழ் கற்றலில் பேசுதல், கேட்டல் திறன்களுக்கு உரிய இடம் தரப்படவில்லை. மேலும் பயிற்று முறை பற்றிச் சிந்திக்கும்பொழுது முதலில் ஆசிரியராகப் பயிற்சி பெறுபவருக்குத் தமிழ் கற்பித்தல் பற்றிய சரியான அறிவூட்டப்பட்டிருக்கிறதா என்பது ஆய்வுக்குரியதாகும். ஆக, மொழி கற்பித்தல் என்பது இலக்கியம் கற்பித்தல் போன்றதன்று.

பொதுவாகக் கற்பித்தலுக்குத் துணை செய்யும் விதத்தில் வில்லியம் மோல்டன் (1961) மொழி ஆய்வு பற்றி பின்வரும் கருத்துக்களை எடுத்துரைக்கின்றார்.

i) மொழி என்பது பேச்சு, எழுத்து அன்று
ii) மொழி என்பது ஒரு பழக்க வழக்கமாகும்
iii) மொழியைக் கற்க வேண்டும். மொழியைப்பற்றி அல்ல
iv) மொழி பேசுகின்றவர்கள் எது சரி என்கிறார்களோ அதுதான் மொழியே அன்றி, இப்படித்தான் இருக்கவேண்டும் என்று சொல்வது அல்ல,
v) மொழிகள் வெவ்வேறானவை. இவற்றை அடிப்படையாகக் கொண்டே கேட்டுப்பேசுதல் முறை தோன்றியது.

## உயர்நிலைப் பள்ளிக் கல்வி

கற்பித்தல் என்பது மனித வாழ்க்கையின் அறிவு வளத்தோடும், பொருள் வளத்தோடும் இணைந்து காணப்படுகின்றது. அரசாங் கம் கல்வி கற்பித்தலை அடிப்படைக் கடமையாக எண்ணி செயல்படுகின்றது. இதன் அடிப்படையில் கல்விக் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. மேலும் இக்கொள்கைகள் அனைத்தும் தனிமனித மற்றும் சமுதாய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. ஒரு மனிதன் மனப்பான்மைகளும், குணநலன்களும் அவன் பெறும் பள்ளிக்கல்வியைச் சார்ந்தே அமைகின்றது. பள்ளிக் கல்வி என்பது வாழ்க்கைப் பருவங்கள் அனைத்திலும் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது.

"பள்ளிக் கல்வி சமுதாயச் சார்புடையதாக மாறும்பொழுது பாடத்திட்டம், மற்றும் கல்வியம்சம் அனைத்தும் மாற்றம் பெறுகின்றது" இதன் அடிப்படையில் பள்ளிக்கல்வி என்பது ஆய்ந்து மதிப்பிட வேண்டியுள்ளது. திட்டமிட்டு செயல்படுத்தப்பட்ட ஒரு கொள்கையை மதிப்பீடு செய்வதென்பது அக்கொள்கையை மேலும் தரப்படுத்த உதவுகிறது. கல்வி நிலையில் அரசின் கொள்கைகள் வழி அமையும் பாடநூல் நோக்கங்களை மதிப்பீடு செய்வதென்பது அக்கொள்கை வழி அமையும். கல்வித் துறையையும், கல்விக் கொள்கையைக் கொண்டு செலுத்தும் மொழியையும் அதன் மூலம் கல்வி குறித்த சமுதாயக் கூறுகளையும் செம்மையாக்கம் செய்ய இயலும்.

இன்றைய கல்வி முறை என்பது 1986 ஆம் ஆண்டு இந்திய அரசால் வெளியிடப்பட்ட புதிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. கொள்கையின் வழி அமையும் பாடத்திட்ட நோக்கங்களின் சில பதிவுகள் வினா நிரல்கள் வழி தகவல்களாகப் பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

## பாரம்பரியக் கற்றல் முறை

பெரும்பாலான பழங்குடிப் பிரிவினர் தங்கள் அறிவை வாய்மொழியாகவே பெற்று வருகின்றனர். கற்பிக்கும் உத்திகளில்

வாய்மொழியாகக் கற்பித்தல் வலுவான ஒரு உத்தியாக உள்ளது. வானொலி போன்ற இரண்டாவது நிலை வாய்மொழி மூலமும் கற்பித்தலில் முன்னேற்றத்தைக் காணமுடிகிறது. வாய்மொழியாகக் கற்றுக்கொள்வது நமது கல்வித்திட்டத்தில் முழுமையாக இல்லா திருந்தாலும் பழங்குடிமாணவர்கள் பாடத்திட்டத்தின் உட்பொருள்களை எளிதில் கற்றுக்கொள்வதற்கு இம்முறை பெரிதும் உதவும். மேலும் முறையான கற்றலுக்கும், பாராம்பரிய வாய்மொழிக் கற்றலுக்கும் இடையிலான தொடர்புகளைக் கண்டறிவதன் மூலம் பழங்குடி மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான கற்பிக்கும் உத்திகளை உருவாக்கலாம்.

பழங்குடி மாணவர்களுக்குக் கற்பிக்கும் திட்ட வரைவினைத் தயாரிக்கும் போது அவர்கள் தங்கள் நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள் போன்றவற்றைக் கற்றுக்கொள்வதில் கையாளும் கற்றல் விதிமுறைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். அத்தகைய விதிமுறைகளை இப்போதைய கல்வித்திட்ட வரைவுக்குள் கொண்டு வந்து அவற்றையும் பயன்படுத்தலாம். பழங்குடி மக்களில் சில பண்பாட்டு நிகழ்ச்சிகளில் குழுச் செயல்பாட்டின் மூலம் மாணவர்களுக்குத் தங் கள் திறமைகளையும் அறிவையும் கற்பிக்கும் முறை நடைமுறையில் உள்ளது. இது ஒவ்வொரு மாணவனையும் பங்கேற்கச் செய்கிறது. பயிலரங்குகள் மற்றும் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் பகுதி ஆகியவை பொதுவாக வகுப்பறைக் கற்பித்தலை விட ஆழமான பதிவினை ஏற்படுத்துகிறது. பழங்குடி மக்களிடையே காணப்படும். வேட்டை, நடனங்கள், மூலிகைமருத்துவம் போன்றவற்றைக் கற்றுக்கொள்வதில் குழுச்செயல்பாடு, பங்கேற்றுக் கற்றுக்கொள்ளுதல் போன்ற கற்றல் உத்திகள் செயல்படுகின்றன. மேலும் கற்றல் முறையின் அடிப்படை நடைமுறைகளான உற்றுநோக்கல், இனங்காணுதல், பங்கேற்றல், ஆரம்பித்துச் செயல்படுதல் ஆகியவையும் நிகழ்கின்றன. எனவே பழங்குடி மாணவர்களின் கல்வித்திட்டத்தில் பொதுவான வகுப்பறைக் கற்பித்தலோடு குழுச்செயல்பாடுகள் மற்றும் பங் கேற்றுக்கற்றுக் கொள்ளும் முறைகளையும் இணைத்துக் கற்பிப்பது உகந்ததாக அமையும்.

### பழங்குடி மொழியும் பாடநூல் மொழியும்

பாடநூல் மொழிக்கும் தாய்மொழிக்கும் இடையே வேறுபாடுகள் மொழி கற்றலில் இடையூறுகளை விளைவிக்கின்றன. பழங்குடி மாணவர்களின் தாய்மொழியையும், பாடநூல் மொழியையும் ஒப்பாய்வு செய்து இருமொழிகளுக்கிடையிலான வேறுபாடுகளை இனங்காணலாம். இதனால் பழங்குடி மாணவர்கள் பாடநூல் மொழியைக் கற்கும் போது ஒலியனியல், உருபனியல் மற்றும் சொல்நிலைகளில் இடையூறுகள்

ஏற்படக்கூடிய பகுதிகளைக் கண்டறிய இயலும். இதனால் மாணவர்கள் தவறு இழைப்பதற்கு அதிக வாய்ப்புள்ள பகுதிகளை ஆசிரியர்கள் கண்டறிந்து அப்பகுதிகளில் அதிகக்கவனம் செலுத்திப் பயிற்றுவிக்கலாம்.

## ஆசிரியர் வினா நிரல் மதிப்பீடு

ஆசிரியர் வினா நிரல் மதிப்பீடு என்பதில் மொழிசார் நோக்கமும், மொழிசாரா நோக்கமும் கலந்து இரண்டு கூறுகளில் அடங்குகின்றது.

## மொழிசார் நோக்கம்

மொழி வழிக்கல்வியின் வழியாகப் பெறும் புரிதலினால் சமுதாயம் உயர்வடைகிறது. எனவே கல்வி நிலைகளில் மொழி சார்ந்த நோக்கங் களைக் கொண்டு ஆராய்வது மொழியின் வளர்ச்சிக்கும் அதன் வழி கல்வி மற்றும் சமூக வளர்ச்சிக்கும் உதவிபுரியும் என்பதனை இலக்காகக் கொண்டு அமைவதாகும். அதன் படி ஆசிரியர்களின் கல்விசார் கருத்துக்களின் மதிப்பீட்டையும் பாடநூல்களைக் கற்பித்தல் குறித்த மாணவர்களின் கருத்தின் மதிப்பீட்டையும் ஒருங்கிணைத்து மொழிசார் நோக்க வினா நிரல்களின் தரவுகளை ஆய்வுக்குக் கொடுக்கப்பட்டது.

## மொழி சாரா நோக்கம்

கல்வி கற்பித்தலில் மொழிக்கு அப்பாற்பட்டு உதவும் புறக்காரணிகளை மதிப்பிடுவதென்பது மொழி வளர்ச்சிக்குப் புறமுகமாக உதவும். எனவே மொழிசாராக் கூறுகள் என்பதைக் கீழ்காணும் மதிப்பீடுகளைக் கொண்டு வினாநிரல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. தமிழ் வழிக்கல்வி பெறும் பழங்குடி மாணவர்களின் சமுதாயம் மற்றும் மொழிநிலை குறித்த மதிப்பீடுகள்.
2. கற்றலில் பழங்குடி மாணவர்களின் குடும்பம், பள்ளி மற்றும் மாணவர்களுக்குக் கல்வி பெறுவதற்கு உகந்த சூழல் குறித்த மதிப்பீடுகள்
3. பழங்குடி மாணவர்கள் பாடத்திற்கும் அப்பாற்பட்டு அறிந்துள்ள செய்திகளின் மதிப்பீடுகள் என்பன மொழி சாரா நோக்கத்தில் இடம் பெற்றுள்ளன.

திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் கற்பித்தல் அனுபவம் மொழிப் பாடம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் பயிற்று அனுபவமும் எண்ணிக்கையையும் கீழ்க்காணும் கருதுதலுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## அட்டவணை

| | ஆசிரியர் அனுபவம் (ஆண்டு) | பயிற்றுவிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அ. ம. உ., வா.பா | 22 | 282 |
| அ. ம. உ., வா.பா | 24 | 133 |
| அ. உ., கை | 17 | 150 |
| அ. ம. உ., வா.பா | 13 | 103 |
| அ. மே., க | 3 | 171 |
| அ. மே., வா.பா | 3 | 152 |
| அ. மே., எ | 21 | 191 |
| அ. உ., தே | 15 | 165 |
| அ. ப. ந. உ., ஆ | 10 | 130 |
| அ. ப. உ., கு | 17 | 142 |
| மொத்தம் | 145 | 1619 |

### விளக்க வரைபடம்




### மதிப்பீட்டுக் கருத்து

அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளி, அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளி என மூன்று விதமான பள்ளிகளை முறையே, வால்பாறை, கையுண்ணி, கற்கியூர், எருமாடு, தேவாலா, ஆனைக்கட்டி, குஞ்சப்பானை ஆகிய பழங்குடி இன வாழ் இடங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டன. ஒவ்வொரு பள்ளிகளிலும் போதுமான ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதைக்

காட்டிலும் அவர்களின் பயிற்று அனுபவம் குறிப்பிட்டு பார்க்க வேண்டிய ஒன்றாயிருக்கிறது. ஏனெனில், பணிக்காலம், பயிற்று அனுபவம் தேவைக்கேற்பப் பெற்றிருப்பாராயின் அவர் பழங்குடி மாணவர்களின் கற்கும் தன்மையை அறிந்திட முடியும். அதோடு அவர்களின் தகுதி நிலையைப் புரிந்து அதற்குத்தக்கவாறு பயிற்று முறையையும் பயிற்சி முறையையும் மாற்றிக் கொள்ள ஏதுவாக இருக்கும். எனவே ஆசிரியர்களின் பயிற்று அனுபவத்தைக் கணக்கிட்டுப் பார்ப்பதும் ஒரு அளவுகோலாகும்.

பல்வேறு சூழல்களின் தாக்கத்தைக் கடந்து பழங்குடி மாணவன் பள்ளிக்குச் செல்ல வேண்டியுள்ளது. அதனால் அவர்களின் வருகைப் பதிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதும் தேவையே. இடை விலகல் பொதுவாக பழங்குடி மாணவர்களிடையே பெரும்பாலும் காணப்படுகிறது. இதற்குச் சமூகப் பொருளாதாரம் மட்டும் காரணிகளாக இல்லை. வினா நிரலில் தன் விபரப்பட்டியலில் இடம்பெற்றுள்ள சில வினாக்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ காரணங்களாக உள்ளன. இவை உயர்நிலைப் பள்ளியிலும் ஆங்காங்கே இருக்கத் தான் செய்கிறது. எனவே அவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்ளும் பொருட்டு கீழ்க்காணும் அட்டவணை விளக்கிக் காட்டுகிறது. மாணவர்களின் சராசரி வீதமும், வருகைப் பதிவு வீதமும் நிகராக உள்ளது.

கல்வித் தகுதி அடிப்படையில் பி.எட் முடித்தவர்களை ஆசிரியர்களாக நியமிக்கின்றனர். பயிற்று அனுபவத்தில் முதிர்ச்சி யில்லாத காரணத்தால் மாணவர்கள் எதிர்கொள்ளும் கற்றல் வழிச் சிக்கல்களை இனம் கண்டு தீர்க்க முடியாத நிலை ஏற்படுகிறது. மொழிப் பாடத்தில் நெகிழ்வுத் தன்மையோடு பாடத்திட்டத்தை உறுவாக்கி அதை சரிவரத் திட்டமிட்டு பயிற்றுவிப்பதில்லை. பழங்குடி மாணவர்களின் கற்றல் தரம் உயரும். எனவே முதிர்ந்த அனுபவமும் எளிமையான பாடத்திட்டமும் கூடிய முறை பழங்குடிப் பள்ளிகளில் இடைவிலகல் நிலையை மாற்றியமைக்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

**பழங்குடி மாணவர்களின் வருகைப்பதிவு**

**அட்டவணை**

| | படிக்கும் வகுப்பு | இருளர் | குரும்பர் | பணியர் | காடர் |
|---|---|---|---|---|---|
| அரசு பள்ளி | 9 | 1 | 9 | 30 | 13 |
| | 10 | 0 | 7 | 6 | 4 |
| அரசுப் பழங்குடியினர் உண்டுஉறைவிடப்பள்ளி | 9 | 37 | 0 | 0 | 0 |
| | 10 | 13 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 51 | 16 | 36 | 17 | |

**விளக்க வரைபடம்**




**மதிப்பீட்டுக் கருத்து**

பழங்குடிகளுக்கான பள்ளிகளின் வருகைப்பதிவு என்பது மற்ற பள்ளிகளின் வருகைப் பதிவுகளின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாத ஒன்று. பொருளாதாரம், தட்ப வெப்பம், உளவியல் என்ற காரணிகளில் சிக்கிக் கிடக்கின்ற பழங்குடி மாணவர்கள் மீண்டெழுந்து வந்து தனது வருகைகளைப் பதிவுசெய்ய வேண்டிய நெருக்கடி உள்ளது. கீழ்க்காணும் அட்டவணையில் காட்டியுள்ள தரவு விபரத்தின் படி அரசுப் பள்ளியில் பயிலும் பழங்குடி மாணவர்களின் எண்ணிக்கை மொத்தத்தில் கணக்கிட்டுப் பார்க்கையில், இருளர் இனப் பழங்குடி மாணவர்களின் வருகைப் பதிவு அதிக அளவில் காணப்படுகிறது. அடுத்த நிலையில் பனியர் இனப் பழங்குடி மாணவர்களின் எண்ணிக்கையும், மூன்றாவதாக, காடர் இனப் பழங்குடி மாணவர்களின் எண்ணிக்கையும் பதிவில் காணலாம். குரும்பர் இனப் பழங்குடி மாணவர்களின் வருகைப் பதிவு மற்ற பழங்குடி மாணவர்களைக் காட்டிலும் குறைந்தே காணப்படுகிறது. இந்நிலை அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் வருகைப்பதிவு நிலை மட்டுமே. ஆனால் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியின் வருகைப்பதிவு நிலையில் இருளர் பழங்குடி மாணவர்களைத் தவிர வேறுஎந்த பழங்குடி மாணவர்களின் வருகையும் காணப்படவில்லை.

வகுப்பளவிலான வருகைப் பதிவைப் பார்க்கும் போது அரசுப் பள்ளியின் மாணவர்களின் வருகை ஒன்பதாம் வகுப்பில் மட்டும் இருளர், குரும்பர், பனியர், காடர் அனைத்து இனப் பழங்குடி மாணவர்களின் வருகைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் படியாகக் காணப்படுகிறது. பத்தாம் வகுப்பில் இருளர் பழங்குடி மாணவர்களின் வருகை இல்லை. குரும்பர் இனப் பழங்குடி மாணவர்களின் வருகை இரண்டாம் நிலையில் உள்ளது. காடர் இனப் பழங்குடி மாணவர்கள் அதையடுத்த நிலையிலும் பணியர் இனப் பழங்குடி மாணவர்கள் இறுதி நிலையிலும் உள்ளனர்.

அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியில் கணக்கிட்டுப் பார்க்கையில் இருளப்பழங்குடி மாணவர்களின் வருகை மட்டும் பதிவாகியிருப்பதைக் காணலாம். மற்ற பழங்குடி இன மாணவர்களின் சேர்க்கை அரசு உண்டு உறைவிடப் பள்ளியை விட அரசுப் பள்ளியின் சேர்க்கையே அதிக அளவில் காணப்படுகிறது. இதனால் பழங்குடி மாணவர்களுக்கென உருவாக்கப்பட்டிருக்கிற பள்ளிக் கூடங்களின் மேல் பழங்குடிகளுக்கு கல்வி பற்றியும் கட்டமைப்பு வசதி பற்றியும் மாறுபட்ட கருத்து ஏற்பட்டிருக்கலாம்.

பழங்குடி மாணவர்களுள் பாலின வருகைப்பதிவு

அட்டவணை

| | இருளர் | குரும்பர் | பணியர் | காடர் |
|---|---|---|---|---|
| ஆண் | 21 | 16 | 23 | 7 |
| பெண் | 30 | 0 | 13 | 10 |
| மொத்தம் | 51 | 16 | 36 | 17 |

விளக்க வரைபடம்




மதிப்பீட்டுக் கருத்து

பழங்குடி இன மாணவர்களின் வருகைப் பதிவு அட்டவணையில் பாலின அடிப்படையில் பெண்களைவிட ஆண்களே அதிகம் இருப்பதாகத் தரவு விகிதம் காட்டுகிறது. சமூகப் பண்பாட்டைக் காரணமாகச் சொல்லப்படுகிறது. பெண்களைச் சிறு வயதிலேயே பாலியல் விவாகம் செய்துவிடுவதினால் பெரும்பாலும் அவர்கள் பள்ளிக்கு வர இயலாமல் போகிறது. அதோடு அவர்களுக்குக் கல்வி குறித்த விழிப்புணர்வை ஊட்டாததும் முக்கியக் காரணங்களில் ஒன்றாகும். இருளப் பழங்குடி மாணவிகளும் காடர்ப் பழங்குடி மாணவிகளும் வருகைப்பதிவில் நிகராக இருப்பதாகத் தெரிகிறது. பணியர் இனப் பழங்குடி மாணவிகள் அடுத்த

நிலையில் தனது வருகைப் பதிவில் காணப்படுகின்றனர். குரும்பர் இன மாணவிகளின் வருகைப் பதிவாகவில்லை.

பாடப் பகுதியில் தேவையான பாடப் பொருண்மையைப் பற்றி ஆசிரியர்களின் கருத்து வினா நிரலின் வழி பெறப்பட்ட ஆசிரியர் சார்ந்த கருத்துத் தரவுகளைக் கணக்கிட்டு விகிதாச் சாரத்தில் கீழ்க்காணும் படி விளக்கப்பட்டுள்ளன.

அட்டவணை

| | இலக்கணப் பகுதி | செய்யுள்,உரைநடை இலக்கணப் பகுதி |
|---|---|---|
| அ. ப. ந. உ., ஆ | 24 | 76 |
| அ. ப. ந. உ., ஆ | 27 | 73 |
| அ. மே., வா.பா | 57 | 43 |
| அ. ம. உ., வா.பா | 27 | 73 |
| அ. ம. உ., வா.பா | 31 | 69 |
| அ. ம. உ., வா.பா | 45 | 55 |
| அ. உ., தே | 16 | 84 |
| அ. மே., க | 42 | 58 |
| அ. மே., எ | 38 | 62 |
| அ. உ., கை | 29 | 71 |
| மொத்தம் | 336 | 664 |

விளக்க வரைபடம்



## மதிப்பீட்டுக் கருத்து

பாடநூலில் தேவையான பகுதித் தேவையற்ற பகுதி என்று மாணவர்கள் பிரித்துப் பயில்வது முறையாகாது. ஆனால் அவர்களின் விருப்பு வெறுப்பிற்கு உட்பட்ட சில பகுதிகள் பாட நூலில் இருப்பதை அவர்களின் தனிப்பட்ட முறையில் உருவாகும் கருத்தடிப்படையில் கணிக்கலாம். மொழிப் பாடநூல் விதி விலக்கல்ல. மொழிப் பாடநூலில் சில பகுதிகள் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும். மாணவர்களும் விரும்பிப் பயில்வர், அப்பகுதிகளில் அதிக மதிப்பெண் பெறுவர். பழங் குடி மாணவர்களின் வருகைப்பதிவும், இடை விலகலுக்கும் பாடப்பகுதியும் ஒரு காரணியாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆய்வுப் பொருளான தமிழ் மொழிப் பாடநூலைக் கற்பிக்கும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களிடையே கற்றல் விருப்பத்தின் மீதான கருத்தைப் பெறும் பொருட்டு வினவியதில் கிடைக்கப் பெற்ற தரவுகளை மையப்படுத்தி கீழ்க்காணும் விளக்கங்கள் தகுந்த அட்டவணையுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.ஆசிரியர்களின் கருத்து ஆய்விற்குத் தேவையானதாகும். கற்பிக்கப்படும் போது ஏற்படுகின்ற இடர்பாடுகளையும் வசதிகளையும் பற்றி அவர்களின் அனுபவத்தைக் கொண்டு தீர்மானிக்கலாம். பழங்குடி மாணவர்களின் கல்வி நிலையைப் பற்றி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் நன்கு உணர்ந்து அதற்கேற்றாற் போல் நெறிமுறைகளை வகுத்துக் கொள்வர். மாணவர்களின் கற்றல் நிலையில் மாறுபாடு ஏற்படுவதற்கு அவர்களின் புறச் சூழல் மட்டும் காரணிகளாக அமைவதில்லை. பாடநூலில் இடம்பெறும் பொருண்மைகளும் முதன்மைக் காரணிகளாக அமைவதுண்டு. இதனடிப்படையில் பாடநூலில் இடம்பெறும் பகுதிகளில் மூன்றாகப் பிரித்து இலக்கணப் பகுதி ஒன்றாகவும், செய்யுள், உரைநடை இவ்விரண்டும் சேர்ந்து ஒரு பகுதியாகவும் கொடுக்க வேண்டிய பொருண்மைகளில் ஆசிரியர்களின் கருத்தைப் பதிவு செய்ததன் விபரம் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம் இவற்றுள் பெரும்பாலும் இலக்கணப் பகுதி தவிர்த்து மற்ற பகுதிகளை விருப்பமாகத் தெரிவு செய்கின்றனர்.

### மனப்பாடபகுதி

அட்டவணை

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| அ. ப. ந. உ., ஆ | 45 | 65 |
| அ. ப. ந. உ., ஆ | 35 | 65 |
| அ. மே., வா.பா | 51 | 49 |
| அ. ம. உ., வா.பா | 87 | 13 |
| அ. ம. உ., வா.பா | 85 | 15 |
| அ. ம. உ., வா.பா | 21 | 69 |
| அ. உ., தே | 73 | 77 |

| | | |
|---|---|---|
| அ. மே., க | 47 | 53 |
| அ. மே., எ | 68 | 32 |
| அ. உ., கை | 43 | 57 |
| மொத்தம் | 555 | 495 |

## விளக்க வரைபடம்




## மதிப்பீட்டுக் கருத்து

பழங்குடி மாணவர்கள் பல்வேறு காரணிகளால் பாடங்களைச் சரிவரக் கற்க இயலாத நிலையில் உள்ளனர். இம்மாணவர்களுக்குப் புரியும் நிலையில் கற்றுத் தருவதற்கு முயற்சிகள் பலவாக மேற்கொண்ட போதிலும், அவர்களின் கவனத்தைத் திசை திருப்பி அவர்களின் கற்றலுக்குத் தடையாக இருக்கும் காரணிகளைக் கலைந்து அவர்களை மனதளவில் ஒருநிலைப்படுத்திப் புரிய வைக்க வேண்டும். மனப்பாடப் பகுதியாகத் தமிழ்ப் பாடநூலில் இடம் பெற்றிருக்கும் பகுதிகள் கற்பிப்பதற்கு எளிமையான பகுதியாக இருக்குமா என்பதன் விளைவைப் பார்க்கும்போது, வால்பாறை மற்றும் கர்க்கியூர் அரசு பழங்குடியின மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் மட்டும் கற்பிப்பதற்குக் கடினம் என்று அதன் மீதான கருத்தைப் பதிவு செய்திருக்கின்றனர். மற்றைய பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் மனப்பாடம் செய்வதற்குரிய பாடப் பகுதிகள் கடினமாக இல்லை என்றே பதிவு செய்திருக்கின்றனர். எனவே மனப்பாடப் பகுதிகளை மேலும் சீரமைக்கத் தேவையில்லை என்ற கருத்திற்கு வரலாம். இதன் பொருட்டு பழங்குடி மாணவனின் கற்றலில் மனப்பாடம் செய்வதற்கான பகுதிகளில் சிரமம் இருப்புதாகத் தெரியவில்லை.

## பாடப்பொருள் கருத்து

**அட்டவணை**

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| அ. ப. ந. உ., ஆ | 74 | 26 |
| அ. ப. ந. உ., ஆ | 63 | 37 |
| அ. மே., வா.பா | 82 | 18 |
| அ. ம. உ., வா.பா | 71 | 29 |
| அ. ம. உ., வா.பா | 86 | 14 |
| அ. ம. உ., வா.பா | 49 | 51 |
| அ. உ., தே | 92 | 8 |
| அ. மே., க | 67 | 33 |
| அ. மே., எ | 78 | 22 |
| அ. உ., கை | 83 | 17 |
| மொத்தம் | 745 | 255 |

## விளக்க வரைபடம்




## மதிப்பீட்டுக் கருத்து

ஆசிரியர் கற்பிக்கப்படும் பாடக் கருத்துக்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கை வரையறைப்படுத்தி அமையப் பெறாது. பொதுவாக, மாணவர்களின் பொது அறிவு, சிறப்பு அறிவென்று இரண்டு நிலைகளையும் சமன் செய்வதாக அமைய வேண்டும். கற்பித்தலில் ஒரு கருத்தைச் சொல்லத் தேவையான முயற்சிகளோடு அக்கருத்தை மாணவன் எளிதில் புரியும் வகை செய்யத் தேவையான கூறுகள் அமைந்திருத்தல் பழங்குடி மாணவனின் கல்விக்குத் துணை சேர்க்கும். அவ்வகையில் தமிழ்ப்பாடப் பகுதியில் கற்பிக்கப்படும் மொழிப்பாடக் கருத்துக்கள் பழங்குடி மாணவனின் புரிதல் திறனுக்குட்பட்டு இருக்கிறதா என்பதைத் தெளிவாக்கிக் கொள்ளுமாறு இந்த வினா நிரல் அட்டவணை விளக்குகின்றது.

## கற்பித்தல் முறையில் கரும்பலகை பயன்பாடு

அட்டவணை

| | தினமும் | பயன்படுத்துவதில்லை |
|---|---|---|
| அ. ப. ந. உ., ஆ | 61 | 39 |
| அ. ப. ந. உ., ஆ | 53 | 47 |
| அ. மே., வா.பா | 64 | 36 |
| அ. ம. உ., வா.பா | 76 | 24 |
| அ. ம. உ., வா.பா | 87 | 13 |
| அ. ம. உ., வா.பா | 67 | 33 |
| அ. உ., தே | 41 | 59 |
| அ. மே., க | 37 | 63 |
| அ. மே., எ | 72 | 28 |
| அ. உ., கை | 29 | 71 |
| மொத்தம் | 587 | 413 |

### விளக்க வரைபடம்




### மதிப்பீட்டுக் கருத்து

பாடநூல் கற்பித்தலில் ஆசிரியர் ஒரு முதல் காரணியாகத் திகழ்கின்றார். ஆசிரியர் கற்பித்தல் திறன்களை அவ்வப்போது தெளிவுபட மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுடன் சொல்லி விளக்குவதற்குக் கரும்பலகை சிறந்த ஒரு கற்பித்தல் கருவியாக உள்ளது. கரும்பலகை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே கற்றல் கற்பித்தலில் உறவுப் பாலமாக இருக்கிறது. வகுப்பறையில் கரும்பலகையின் தேவையை அவசியம் ஆசிரியர்களும் மாணவர்களும் புரிந்து செயல்பட வேண்டும். எடுத்துக்காட்டுகள் வரைபட விளக்கங்கள், கரும்பலகையின் வழியே கற்றுத் தருவனவாகும். எனவே கற்பித்தலில் மிக முக்கிய பங்கு வகிப்பது கரும்பலகை உபயோகம்

பழங்குடி மாணவனுக்குத் தேவையான அளவிற்கு விளக்கம் கிடைக்கிறதா என்பதை ஆசிரியர் கரும்பலகையைப் பயன்படுத்தும் வகையில் கண்டறியலாம். ஆசிரியர்களிடையே தாங்கள் கற்பிக்கும் போது கரும்பலகையைப் பயன்படுத்தும் முறை குறித்து கருத்து கேட்கப்பட்டது. அவ்வாறு கருத்துக் கேட்டலில் அரசுப் பள்ளி மற்றும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் தங்களது பாடவேளைகளில் தினமும் கரும்பலகையைப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கின்றார்கள்.

தமிழ் எழுத்துமுறை கற்பித்தலுக்கான கால அளவு

அட்டவணை

| | ஒரு மணி நேரம் | முக்கால்மணி நேரம் |
|---|---|---|
| அ. ப. ந. உ., ஆ | 47 | 53 |
| அ. ப. ந. உ., ஆ | 29 | 71 |
| அ. மே., வா.பா | 67 | 33 |
| அ. ம. உ., வா.பா | 48 | 52 |
| அ. ம. உ., வா.பா | 57 | 43 |
| அ. ம. உ., வா.பா | 49 | 51 |
| அ. உ., தே | 25 | 75 |
| அ. மே., க | 61 | 39 |
| அ. மே., எ | 44 | 56 |
| அ. உ., கை | 46 | 54 |
| மொத்தம் | 473 | 527 |

விளக்க வரைபடம்



**மதிப்பீட்டுக் கருத்து**

கற்பித்தலில் கால அளவு முறை என்பது மிக முக்கியமான ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட கால அளவினைத் தேர்வு செய்து, ஆசிரியர்கள் பழங்குடி மாணவர்களின் நிலையையும் புரிந்து கொண்டு, தமிழ்ப்பாடநூலைக் கற்பித்தால்தான் அவர்களும் ஆர்வமுடன் கற்பார்கள். தமிழ்ப்பாடநூலில் உள்ள எழுத்து முறைகளைக் கற்பிப்பதற்கான கால அளவு குறித்த கருத்துக் கேட்டலில் அரசுப் பள்ளி மற்றும் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் 45 நிமிட நேரம் என்று குறிப்பிடுகின்றனர். எனவே கற்பித்தலில் காலஅளவு முறை கொண்டு கற்பித்து மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டுவது ஆசிரியரின் கையில்தான் உள்ளது என்பதனை இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது.

கற்பிக்கப்படும் பாடக் கருத்திற்கேற்ப கால அளவை நிர்ணயம் செய்வது பாடத்திட்டமாகும். பழங்குடி மாணவர்களுக்குப் பாடத்திட்டத்தில் கால அளவை நீட்டிக்க வேண்டிய அவசியமுள்ளது. பழங்குடிப் பள்ளிகளில் தமிழ்மொழியில் எழுத்துமுறைகளைக் கற்பிப்பதற்காகச் செலவிடும் காலத்தினை அளவிட்டுப் பார்க்கையில் கீழ்க்காணும் அட்டவணையில் தெளிவுறலாம்.

மாதிரித் தேர்வு

அட்டவணை

| | வாரம் தோறும் | மாதம் ஒருமுறை |
|---|---|---|
| அ. ப. ந. உ., ஆ | 71 | 29 |
| அ. ப. ந. உ., ஆ | 52 | 48 |
| அ. மே., வா.பா | 73 | 27 |
| அ. ம. உ., வா.பா | 57 | 43 |
| அ. ம. உ., வா.பா | 67 | 33 |
| அ. ம. உ., வா.பா | 74 | 26 |
| அ. உ., தே | 36 | 64 |
| அ. மே., க | 75 | 25 |
| அ. மே., எ | 55 | 45 |
| அ. உ., கை | 62 | 38 |
| மொத்தம் | 622 | 378 |

**விளக்க வரைபடம்**




## மதிப்பீட்டுக் கருத்து

பொதுவாக மாணவர்கள் தாங்கள் பயின்றவற்றை ஒருமுறை நினைவு படுத்திப் பார்ப்பதற்கு இத்தகைய் தேர்வு முறை அவசியமாகும். இதன் மூலம் மாணவர்களின் கற்றல் திறனை ஆசிரியர்கள் எளிதில் மதிப்பிட முடியும். இங்கு மாதிரித் தேர்வு முறை குறித்து ஆசிரியர்களிடையே நிலவும் கருத்தானது கற்பிக்கும் ஆசிரியர் வாரம் ஒருமுறை நடத்துவதாகவும், சில ஆசிரியர்கள் மாதம் ஒரு முறை நடத்துவதாகவும் குறிப்பிடுகின்றனர். மாணவர்களின் கற்றல் திறனை அறிய அவ்வப்போது மாதிரித் தேர்வு என்பதனை நடத்தி இவர்கள் கற்றல் திறனை மேம்படச் செய்யலாம்.

## சிறப்புப் பயிற்சி

அட்டவணை

| | தினமும் ஒருமுறை | வாரம் ஒருமுறை |
|---|---|---|
| அ. ப. ந. உ., ஆ | 62 | 38 |
| அ. ப. ந. உ., ஆ | 37 | 63 |
| அ. மே., வா.பா | 44 | 56 |
| அ. ம. உ., வா.பா | 61 | 39 |
| அ. ம. உ., வா.பா | 52 | 48 |
| அ. ம. உ., வா.பா | 41 | 59 |
| அ. உ., தே | 73 | 27 |
| அ. மே., க | 7 | 33 |
| அ. மே., எ | 58 | 42 |
| அ. உ., கை | 71 | 29 |
| மொத்தம் | 566 | 434 |

**விளக்க வரைபடம்**




## மதிப்பீட்டுக் கருத்து

கற்றல் நிலையில் பின்தங்கியுள்ள பழங்குடி மாணவர்களை மற்ற மாணவர்களைப் போல சிறந்த மாணவர்களாக உருவாக்க சிறப்புப் பயிற்சி அவசியமானதாகும். ஆசிரியர்கள் இந்த மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தலின் போது சிறப்புப் பயிற்சியினைக் கொடுத்தால் இவர்களிடையே கற்றலில் ஆர்வம் அதிகமாகும். சிறப்புப் பயிற்சி குறித்து ஆசிரியர்களிடையே கருத்து கோரப்பட்டது. அவ்வகையில் அரசு பழங் குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தினமும் ஒருமுறை சிறப்புப் பயிற்சிகள் மேற்கொள்வதாகவும் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் வாரம் ஒருமுறை சிறப்புப் பயிற்சி நடத்துவதாகவும் தங்களின் கருத்தைப் பதிவு செய்கின்றனர் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தை மேம்படுத்தும் சிறப்பு பயிற்சியினைச் சில பள்ளிகள் நடைமுறைப்படுத்தி வருவதைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்குகிறது.

**தமிழ் கற்பித்தலின் போது மேற்கொள்ளப்படும் பயிற்சி**

**அட்டவணை**

| | எழுத்துப் பயிற்சி முறை | வாசிப்புப் பயிற்சி முறை |
|---|---|---|
| அ. ப. ந. உ.., ஆ | 53 | 47 |
| அ. ப. ந. உ.., ஆ | 34 | 66 |
| அ. மே., வா.பா | 76 | 74 |
| அ. ம. உ.., வா.பா | 67 | 33 |
| அ. ம. உ.., வா.பா | 82 | 18 |

| | | |
|---|---|---|
| அ. ம. உ.., வா.பா | 46 | 54 |
| அ. உ.., தே | 55 | 45 |
| அ. மே., க | 72 | 28 |
| அ. மே., எ | 31 | 69 |
| அ. உ.., கை | 57 | 43 |
| மொத்தம் | 573 | 477 |

## விளக்க வரைபடம்




## மதிப்பீட்டுக் கருத்து

மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பாடநூலில் உள்ள பாடப் பொருள்களை கற்பித்த பிறகு தாங்கள் கற்பித்தவற்றைத் திரும்ப அம்மாணவர்களின் வழி கேட்டு புரிதல் நிலையை அறிய முடியும். ஆசிரியர்கள் கற்பித்தலின் போது அதாவது பாட வேலையின் போது சில பாடக்கருத்துக்களை மாணவர்களிடையே கொடுத்து அவர்களை வாசிக்கச் சொல்லியும் அதே போல் எழுதச் சொல்லியும் கேட்பதன் மூலம் மாணவர்கள் வாசித்தலிலும், எழுதுதலிலும் எத்தன்மையினை அறிய முடியும். இங்கு ஆசிரியர்களிடையே கற்பித்தலின்போது மேற்கொள்ளப்படும் பயிற்சி தொடர்பான கருத்துக் கேட்டலில் வாசிப்புப் பயிற்சியிலும், எழுத்துப் பயிற்சி முறையிலும் அரசு பழங்குடியினர். பள்ளியில் ஆசிரியர்களின் கருத்து மேலோங்கியும் அரசுப் பள்ளியில் ஆசிரியர்களின் கருத்து பின்தங்கியும் உள்ளதைக் காணமுடிகின்றது. இரண்டு பள்ளிகளிலும் கற்பிக்கும் ஆசிரியர்கள் பழங்குடி மாணவர்களின் கற்றல் தன்மையை மனதில் கொண்டு வாசிப்பிலும் எழுதுதலிலும் அதிக அளவில் நெகிழ்வான பயிற்சி அளித்தல் வேண்டும் என்பதை இவ்அட்டவணை நமக்குத் தெளிவுப்படுத்துகிறது.

**தமிழ்ப்பாடம் கற்றலில் ஆர்வம் மிகுந்த பழங்குடி மாணவர்கள்**

**அட்டவணை**

| | இருளர் | பணியர் | குறும்பர் | காடர் |
|---|---|---|---|---|
| அ. ப. ந. உ., ஆ | 20 | 0 | 17 | 0 |
| அ. ப. ந. உ., ஆ | 20 | 0 | 0 | 25 |
| அ. மே., வா.பா | 0 | 20 | 0 | 25 |
| அ. ம. உ., வா.பா | 20 | 0 | 17 | 0 |
| அ. ம. உ., வா.பா | 0 | 20 | 17 | 0 |
| அ. ம. உ., வா.பா | 0 | 20 | 16 | 0 |
| அ. உ., தே | 20 | 0 | 17 | 0 |
| அ. மே., க | 0 | 20 | 16 | 0 |
| அ. மே., எ | 20 | 0 | 0 | 25 |
| அ. உ., கை | 0 | 20 | 0 | 25 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 |

விளக்க வரைபடம்




## மதிப்பீட்டுக் கருத்து

மொழிப் பாடத்தில் பழங்குடி மாணவர்களுக்குக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுவது ஆசிரியர்களின் கற்பித்தல் ஆர்வத்தையும், கற்பிக்கப்படும் பாடப் பொருளையும் பொறுத்து அமைவனவாகும். இயல்பாகச் சில மாணவர்களுக்கு ஆர்வமிருக்கும் அதே நேரத்தில் அநேக மாணவர்களுக்குக் கற்பித்தல் கலையின் பாற் உந்தப்பட்டு ஆர்வத்தைத் தூண்டப் பெறுவதும் உண்டு. இதனடிப்படையில் ஆர்வமிகுந்த மாணவர்களைக் கண்டறியும் பொருட்டு வினவியதன் வகையில் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் கற்றலில் ஆர்வம் குறைந்த, காடர், பணியர் மாணவர்களை மற்ற மாணவர்களைப் போல்

ஆர்வ மிக்கவர்களாக மாற்றுவது கடினமாக உள்ளது. ஆசிரியர் பாடப் பொருளை எளிமைப்படுத்தும் முயற்சியினையே முழுக்க முழுக்க இது சார்ந்ததாகும். இம்மாணவர்களுக்குக் கற்பதில் அதிக ஆர்வத்தைத் தூண்டுவதற்குத் தேவைப்படும் பயிற்சியினைச் சீரமைத்து அளிக்க வேண்டும். சமூகப் பொருளாதாரம் பெரும்பான்மையான காரணியாக இருப்பினும் பாடப் பொருளைப் பற்றியும், கற்றலின் முக்கியத்துவம் பற்றியும் விழிப்புணர்வு இல்லாததைப் பிறகாரணியாகச் சொல்லலாம்.

**மாணவர்கள் விரும்பிப் படிக்கும் பாடப்பகுதி**

**அட்டவணை**

| | உரைநடைப் பகுதி | அனைத்துப் பகுதியும் |
|---|---|---|
| அ. ப. ந. உ., ஆ | 46 | 54 |
| அ. ப. ந. உ., ஆ | 31 | 69 |
| அ. மே., வா.பா | 28 | 72 |
| அ. ம. உ., வா.பா | 53 | 47 |
| அ. ம. உ., வா.பா | 37 | 63 |
| அ. ம. உ., வா.பா | 62 | 48 |
| அ. உ., தே | 26 | 24 |
| அ. மே., க | 39 | 61 |
| அ. மே., எ | 57 | 43 |
| அ. உ., கை | 41 | 59 |
| மொத்தம் | 420 | 540 |

**விளக்க வரைபடம்**




**மதிப்பீட்டுக் கருத்து**

பாடப் பொருளில் உள்ள அனைத்துப் பகுதிகளையும் படிக்கும் போது மாணவர்களின் கற்றல் ஆர்வம் என்பதும், விரும்பிப் படிக்கும் தன்மை என்பதும் ஒவ்வொரு மாணவர்களிடையே வேறுபடும். இது அவரவர் விருப்பத்தைச் சார்ந்ததாகும். பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில்

பெரும்பாலான மாணவர்கள் பாடநூலின் அனைத்துப் பகுதிகளையும் விரும்பிப் படிக்கின்றனர். குறிப்பிட்ட சிலபகுதிகளை மட்டும் படிக்கின்ற மாணவர்கள் சிலரே. ஆசிரியர்கள் தங்களின் கருத்தை இவ்வாறு பதிவு செய்கின்றனர். கற்றலில் அனைத்து மாணவர்களையும், அனைத்துப் பாடப் பகுதிகளையும் விரும்பிப் படிக்கச் செய்தல் என்பது ஆசிரியரின் கற்பித்தலின்பால் கொண்ட ஈடுபாட்டில் தான் உள்ளது. எனவே ஆசிரியர்கள் அதிக முயற்சி மேற்கொண்டு மாணவர்களை பாடப்பகுதியின் அனைத்து பகுதிகளையும் விரும்பிப் படிக்கச் செய்ய வேண்டும்.

கற்பதற்குக் கடினமான பகுதி

| | செய்யுள் பகுதி | உரைநடைப் பகுதி | இலக்கணப் பகுதி |
|---|---|---|---|
| அ. ப. ந. உ.., ஆ | 27 | 36 | 47 |
| அ. ப. ந. உ.., ஆ | 31 | 26 | 43 |
| அ. மே., வா.பா | 17 | 34 | 49 |
| அ. ம. உ.., வா.பா | 29 | 37 | 34 |
| அ. ம. உ.., வா.பா | 14 | 21 | 65 |
| அ. ம. உ.., வா.பா | 42 | 25 | 33 |
| அ. உ.., தே | 41 | 24 | 35 |
| அ. மே., க | 35 | 18 | 47 |
| அ. மே., எ | 37 | 22 | 41 |
| அ. உ.., கை | 45 | 16 | 39 |
| மொத்தம் | 318 | 259 | 433 |

விளக்க வரைபடம்




மதிப்பீட்டு விளக்கம்

செய்யுள், உரைநடை, மனப்பாடப்பகுதிகளைப் பொருத்த வரை மாணவர்கள் எளிதாகக் கற்கின்றனர். இலக்கணப் பகுதிகளைக் கற்கும் போது கடினமாக இருப்பதாக எண்ணுகின்றனர். ஆசிரியர்கள் கற்பித்தலில் ஆற்றல் பெற்றிருப்பினும், மாணவர்கள் கற்கும் ஆர்வம்

இருப்பினும் பாடப் பொருள் கடினமாக இருந்தால் இவர்களின் சிறப்பிற்குப் பயனில்லை. பாடப் பொருள் எளிமையாக்கம் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுது மாணவர்களிடத்தும், ஆசிரியர்களிடத்தும் ஆர்வம் உண்டாகும். ஆசிரியர்கள் பாடநூலில் உள்ள மற்ற பகுதிகளைப் போல இலக்கணப் பகுதியையும் எளிமையாகக் கற்க வகை செய்ய வேண்டும். இங்கே இலக்கணப் பகுதித் தெளிவுற, எளிமையுடன் கற்பிக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர் கையில் உள்ளது அப்போதுதான் அதிக ஆர்வமுடன் செயல்பட்டு மாணவர்கள் எளிமையாகப் படிப்பார்கள். இத்தகைய கடின முறையை போக்குவது ஆசிரியர்களைச் சார்ந்ததாகும்.

**பாடநூல் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வது அட்டவணை**

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| அ. ப. ந. உ.., ஆ | 64 | 36 |
| அ. ப. ந. உ.., ஆ | 55 | 45 |
| அ. மே., வா.பா | 69 | 31 |
| அ. ம. உ.., வா.பா | 47 | 53 |
| அ. ம. உ.., வா.பா | 71 | 29 |
| அ. ம. உ.., வா.பா | 82 | 18 |
| அ. உ.., தே | 74 | 26 |
| அ. மே., க | 59 | 41 |
| அ. மே., எ | 76 | 24 |
| அ. உ.., கை | 67 | 33 |
| மொத்தம் | 664 | 336 |

**விளக்க வரைபடம்**




**மதிப்பீட்டுக் கருத்து**

பாடப்பொருள் மாணவனின் தேவையைப் பூர்த்தி செய்வதை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தால் அது பயன் தரும். அதனடிப்படையில் பாடப் பொருளனைத்தும் தேவைக்கு உகந்ததாகவே அனைத்து மாணவர்களும் கருதுகின்றனர்.

பாடப்பகுதியில் வரும் கதைமாந்தர்கள் அட்டவணை

| | தலைவர்கள்குறித்து (தனித்த) | அனைவரும் குறித்து (பொதுவான) |
|---|---|---|
| அ. ப. ந. உ.., ஆ | 36 | 64 |
| அ. ப. ந. உ.., ஆ | 72 | 28 |
| அ. மே., வா.பா | 47 | 53 |
| அ. ம. உ.., வா.பா | 59 | 41 |
| அ. ம. உ.., வா.பா | 39 | 61 |
| அ. ம. உ.., வா.பா | 52 | 48 |
| அ. உ.., தே | 22 | 78 |
| அ. மே., க | 49 | 51 |
| அ. மே., எ | 28 | 72 |
| அ. உ.., கை | 31 | 61 |
| மொத்தம் | 435 | 557 |

விளக்க வரைபடம்




மதிப்பீட்டுக் கருத்து

பாடப்பகுதிகளில் பொருண்மையாகச் சேர்க்கப்பட்டிருக்கும் அரசியல் பற்றிய செய்திகள், தேசத் தலைவர்கள் பற்றிய செய்திகள் மேலும் பிரபலங்களையெல்லாம் பற்றித் தெரிந்திருப்பது பொது அறிவாகும். அதன் வகையில் பழங்குடி மாணவர்கள் பெற்றிருக்கிற பொது அறிவைக் கண்டறிய வேண்டும். பெரும்பாலான மாணவர்கள் சிலருக்கு மட்டும் அப்பகுதிகளை அறிமுகம் செய்ய வேண்டியுள்ளது. இப்பொருண்மையில் உடன்பட்டுக் காணப்படுகின்றனர்.

## அருஞ் சொற்பகுதி

### அட்டவணை

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| அ. ப. ந. உ.., ஆ | 61 | 39 |
| அ. ப. ந. உ.., ஆ | 58 | 42 |
| அ. மே., வா.பா | 72 | 28 |
| அ. ம. உ.., வா.பா | 41 | 59 |
| அ. ம. உ.., வா.பா | 65 | 35 |
| அ. ம. உ.., வா.பா | 49 | 51 |
| அ. உ.., தே | 63 | 37 |
| அ. மே., க | 56 | 44 |
| அ. மே., எ | 74 | 26 |
| அ. உ.., கை | 67 | 33 |
| மொத்தம் | 606 | 394 |

## விளக்க வரைபடம்




## மதிப்பீட்டுக் கருத்து

பாடப்பகுதிகளில் இடம்பெறும் கலைச் சொற்களைப் பற்றி கவனம் கொள்ள வேண்டியுள்ளது. சொற்பொருள் விளக்கத்தினால் சொற்களின் வழி பாடப் பொருளை உணரமுடியும். இது குறித்த வினாவில் கிடைத்த கருத்தின் படி சில ஆசிரியர்கள் அருஞ் சொற்பொருள் விளக்கத்தைக் கற்பதில் மாணவர்கள் சிரமப்படுவதாகக் கூறுகின்றனர். மேலும் இப்பகுதியினை எளிமைப்படுத்தினால் நலம் பயப்பதாகவும் எண்ணுகின்றனர்.

**தொகுப்புரை**

கற்பித்தலின் வழியாக பழங்குடி மாணவர்களின் மொழி அறிவுத் திறனைக் கண்டறிந்து மதிப்பிடுவதற்காக ஆசிரியர்களிடம் வினாநிரல் கொடுக்கப்பட்டு அதன்வழி பெறப்பட்ட கருத்தில் மேற்கொண்ட ஆய்வினை இதன் வழி தக்கத் தரவுகளுடன் எடுத்துரைக்கின்றது.

கற்பிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை கற்கும் ஆர்வம் மிகுந்த, ஆர்வம் குறைந்த நிலை, பாடப் பொருள், பயிற்று வித்தல் காலம், கவனம் கொள்ள வேண்டிய பகுதிகள், மொழிநடை அமைப்பு போன்ற இயலின் பொருண்மைக்குத் தொடர்பான செய்திகளைத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

# பழங்குடி மாணவர்களின் தமிழும் மொழிப்பிழை ஆய்வு மதிப்பீடு

தமிழ் மொழியில் எழுதும்போது இலக்கணம் பின்பற்றப்படாமல் எழுதப்படுவதால் எழுத்துப்பிழைகள் ஏற்படுகின்றன. கற்பிக்கும் ஆசிரியர்களும் தமிழ்ப்பற்றை உருவாக்கத் தவறுகின்றனர். இதனால் பழங்குடி மாணவர்களின் எழுத்துத்தமிழில் பிழைகள் மிகுந்து காணப்படுகின்றன. மொழியின் இலக்கணம் பின்பற்றப்படாமல் எழுதப்படுவதால் எழுத்துப்பிழை, சொற்பிழை, புணர்ச்சிப்பிழை, தொடர்பிழை, பொருட்பிழை ஆகியன ஏற்படுகின்றன.

"எல்லோரும் பின்பற்றும் வழக்கத்திலிருந்து பிறழ்வது பிழையாகும். பிழையென்று சொல்லப்படுவன இலக்கண விதிகளுக்கும் மொழி நிலைக்கும் ஏற்பக் கையாளப்படாதவை" என்று குறிப்பிடுகின்றார் இராமச்சந்திரன் (2002).

மாணவரின் பேச்சிலோ, அல்லது எழுத்திலோ சில வழு ஒழுங் கில்லாமல் இருக்கும். ஒரே சொல் அல்லது ஒரே சொல்லின் அமைப்பு சில இடத்தில் சரியாகவும் சில இடத்தில் தவறாகவும் அமையலாம். எனவே ஒழுங்கற்ற வழு 'தவறு' என்றும் ஒழுங்கான வழு பிழை என்றும் புரிந்துகொள்ளலாம் என்று பிழை ஆய்வு நூல் கூறுகிறது. ஒரு மாணவன் மொழியின் அமைப்பைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் அல்லது தவறாகப் புரிந்து கொண்டு மொழியைப் பயன்படுத்தும்போது தோன்றும் தவறுகளே பிழைகளாகும்" என் று இலக்கணச் சிந்தனை நூல் கூறுகிறது. பிழை என்பது மாணவர்களின் கவனக்குறைவு, மனஉளைச்சல், சரியாகக் கற்றுக்கொள்ளாத காரணத்தால் தோன்றுவது ஆகும். பரசுராமன் (1987). தவறு என்பது பழங்குடி மாணவர்கள் மொழியை வெளிப்படுத்துவதில் ஏற்படும் முறை தவறுக்கு கல்வியில் காரணம் ஏதும் இல்லாததால் எப்பொழுதாவது ஏற்படுகின்றது. மாணவர்கள் கற்றலில் ஏற்பட்ட குறை காரணமாகத் தோன்றுவதால் பிழை என்பது எல்லா இடங் களிலும் தோன்றுகின்றது என்று சொல்லப்படுகிறது. இதன் அடிப்படையில் மாணவர்கள் தமிழ் என்று பலஇடங்களில் எழுதியிருந்தால் இத்தகைய ஒழுங்கான வழுக்களே பிழையாகக் கருதப்படுகின்றன. எனவே அறிஞர்கள் கருத்துக்கள் மூலம் மாணவரின் தேர்வுத்தாளில் காணப்படும். ஒழுங்கான வழுவே 'பிழை' என்று எடுத்துக் கொள்ளப்படுகின்றது. 'பிழை என்பது ஒன்றுக்குப் பதிலாக வேறொன்றைத் தவறாகப் பயன்படுத்துவதாகும். அதாவது முறையான வழக்கத்திலிருந்து பிறழ்வது பிழையாகும். பிழைபட எழுதினால் மொழியின் ஒழுங்கு என்பது சிதைந்துவிடும். எனவே மொழியைப்

பாதுகாக்க இலக்கணம் என்பது தேவைப் படுகின்றது. எழுத்துத்தமிழில் பிழைகள் நேராமல் இருப்பதற்கு மொழியின் இலக்கணத்தைப் பின்பற்றப்பட வேண்டும். இலக்கணத்தைப் பின்பற்றாமல் எழுதுவதால் தமிழில் எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்பிழை, புணர்ச்சிப்பிழை என்பன ஏற்படுகின்றன. இதன் மூலம் மாணவர்களின் தேர்வுத்தாளில் காணப்படுகின்ற ஒழுங்கான வழுக்களே பிழையாகக் கருதப்பட்டு அப்பிழை எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்பிழை, புணர்ச்சிப்பிழை என பாகுபடுத்தப்பட்டு விளக்கப்படுகின்றன.

## இரண்டாம் மொழிப் பிழைகள்

பழங் குடி மாணவர்கள் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் போது அவர்கள் செய்கின்ற பிழைகள் அந்த மாணவர்களுடைய மொழித்திறனில் அளவு கோலாகவும் அவருடைய மொழியறிவின் தன்மையின் இயல்புகளாகவும் எடுத்துக்காட்டி அமைகின்றன. இதற்குக் காரணம் ஒவ்வொரு பழங்குடி மாணவர்களும் வெவ்வேறு தாய்மொழியினைப் பேசுகின்றனர். இப்பிழைகளிலிருந்து அவர்கள் பயில வேண்டியவை மட்டுமின்றி பயிலும் முறையையும் அறிந்து கொள்ளலாம். இரண்டாம் மொழி கற்றலின் போது பழங்குடி மாணவர்களுக்கு மொழியியல் பிரிவுகளை ஒலியனியல் உருபனியல் தொடரியல், சொற்பொருளியல் போன்றவற்றில் உச்சரிப்பு, இலக்கணக் கூறுகள், சந்திப்பிழைகள், சொற்களைச் சேர்த்து எழுதுதல் போன்றவற்றோடு வாக்கிய அமைப்பிலும் பிழைகள் ஏற்படுகின்றன. இரண்டாம் மொழியை மாணவர்கள் கற்கும்போது கேட்டல் மற்றும் வாசித்தல் திறன்களான பேசுதல், எழுதுதல் ஆகிய இரண்டு திறன்களாலும் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

## பிழை ஏற்படுவதற்கான காரணங்கள்

பொதுவாகப் பிழைகள் எட்டு வகையின் அடிப்படையில் ஏற்படுகின்றன. அவைகள்

1. ஒப்புமையாக்கம்
2. பயில் மொழி விதிகளைத் தவறாகப் பயன்படுத்துதல்.
3. வளர்மொழி இடையீடு
4. தாய்மொழி இடையீடு
5. இரண்டாம் மொழி இடையீடு
6. எளிதாக்கப் பிழைகள்
7. சூழல் தூண்டு பிழைகள்
8. பயிலாமை

என எட்டு வகையின் அடிப்படையில் ஏற்படுகின்றது என்கிறார் நடராசப் பிள்ளை (1981, ப. 47)

## பிழை ஆய்வு

மாணவன் மொழிகற்கும் நிலையில் அவனின் உள்மன நிகழ்வுகளை ஆராய்ந்த போது மொழி கற்றலில் பல புதிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அந்த மாற்றங்களில் ஒன்றுதான் பிழை ஆய்வு ஆகும்.

அதே போல் ஒரு மொழியினைக் கற்கும் போது அம்மொழியில் செய்கின்ற பல்வேறு வகையான பிழைகளைத் தொகுத்து கண்டறிந்து அவற்றைக் களைவதற்குரிய ஒரு சிறந்த வழி வகைகளைக் கூறுவதே பிழை ஆகும். இராமையா 1995 பொதுவாகப் பிழை ஆய்வு என்பது மாணவர்கள் மொழிக் கற்றலில் ஏற்படும். மொழி குறித்த சிக்கல்களை அறிந்து அதற்கென வழி வகைகளைச் செய்யவும். மொழி கற்க மாணவர்கள் மேற்கொள்கிற அணுகு முறைகள், உத்திகள் முதலானவற்றை அறியவும் மொழி கற்கும் மாணவனின் மொழி வளர்ச்சியினை மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.

## மொழியியலார் கருத்து

தமிழில் ஒவ்வொரு ஒலியனுக்கும் ஒரு எழுத்து உள்ளது என்று புகழ்ந்துள்ளனர். பிற மேலை நாட்டு மொழிகளில் சொல்லெழுத்தும் உச்சரிப்பும் வேறுபட்டவை. ஆனால் தமிழில் அப்படி வேறுபாடு இல்லை. சொல்லெழுத்தில் உள்ளது போன்று உச்சரிக்கின்றோம். நாம் உச்சரிப்பதுபோல எழுதுகின்றோம் என்று செ.வை சண்முகம் 1969, ப.43 அவர்கள் கூறுகின்றார். ஒலி நுட்பம், சொல் நுட்பம், தொடர் நுட்பம், பொருள் நுட்பம் போன்ற தன்மைகளைக் கொண்டு தமிழ் மொழி சிறப்புடன் இயங்குகின்றது என்கின்றனர். இத்தன்மையை உடைய மொழியை உள்ளவாறே உணர்ந்து பேசுவதும், எழுதுவதும் இன்றியமையாதது ஆகும். வேறு சில மொழிகளைப்போன்று அல்லாமல் தமிழில் ஒலிச்சேர்க்கையில் உருவாகும் சொற்கள் எழுதப்படும் போதும். உச்சரிக்கப்படும் போதும் ஒரே மாதிரியாக அமைந்திருப்பது தமிழின் சிறப்புகளில் ஒன்றாகும்.

ஒருவர் இரண்டாம் மொழியைக் கற்கும் போது செய்கின்ற பிழைகள் அவரின் மொழித்திறனின் அளவு கோலாகவும் மொழியறிவின் தன்மையையும் எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. இரண்டாம் மொழி பயில்பவர்கள் முதன் மொழியினைப் பயிலும் மாணவர்கள் எந்த அணுகுமுறையைப் பயன்படுத்தினார்களோ. அதே அணுகுமுறையைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிகிறோம். மொழி வளர்ச்சியின் அளவைப் பற்றிச் செலிங்கர் (1972) ஒவ்வாரு நிலையிலும் பயில் மொழியின் வளர்ச்சி அளவை 'வளர்மொழி' என்று அழைக்கிறார். மொழியினைக் கற்பவர்கள் ஒரு நிலையில் செய்த

பிழையை மனதில் புதைத்து நீண்ட கால அளவிற்குப் பிறகும் செய்வதாக இருப்பதை புதைவடிவமாகிட்ட பிழை என்றும் கூறுகின்றார். அதே போல் இரண்டாம் மொழி இடையீட்டில் உண்டான பிழைகளை இரண்டாம் மொழியிடையீட்டுப் பிழைகள் என்றும் கூறலாம். இவ்விரண்டும் மொழியிடையீடே ஆங்கிலத்தில் ‘Fitter Language Intersrece’ எனப்படுகிறது. பிழைக்கு காரணமாகின்ற மற்ற மொழிகள் ‘Base Language’ என்று சொல்வார்கள் என்று சந்திரசேகர் (1978) கூறுகின்றார். பிழை என்பது எல்லோரும் பின்பற்றக் கூடிய வழக்கு முறைகளிலிருந்து மாறுபட்டு பேசுவதோ, எழுதுவதோ அல்லது வாசிப்பதோ பிழை எனப்படும். பொதுவாக மாணவர்கள் செய்கின்ற பிழைகள் அவர்கள் ஒரு மொழியைக் கற்பதற்கு தங்களுக்குள் உருவாக்கிக் கொள்கின்ற அணுகு முறைகளையும் அவர்கள் மனதில் பதியவைக்கின்ற பயிற்று மொழி அறிவின் அளவினையும் கண்டு கொள்ள உதவுகின்றது என்று கார்டர் (1967) கூறுகின்றார். அதே போல் பிழை குறித்து வில்கின்ஸ் (1968), துஸ்கோவா (1969) போன்றோரின் ஆய்வுமுறைகளும் இதே கருத்தையே விளக்குகின்றன.

## மொழிப் பிழை

மொழிப் பிழை மாணவனின் கற்றல் நிலையைச் சோதிக்கும் போது எழுத்தளவிலும், சொல்லளவிலும், பேச்சளவிலும் காணப்படும் பிழையை மொழிப் பிழை என்கிறோம். இப்பிழையை நீக்குவதன் மூலம் மொழியின் கட்டமைப்பை சரி செய்து சீரமைக்கலாம். இலக்கண விதிக்கு உட்பாடாது எழுதுவதால் ஏற்படுகின்ற பிழை என்ற அடிப்படையில் மொழிப் பிழை விளக்கப்படுகின்றது. ஆய்வாளரால் பழங்குடி மாணவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மொழிப்பிழை என்பது இங்கு மூன்று நிலைகளில் விரிவாக விளக்கப்படுகின்றது. அவைகள்,

மொழிப்பிழை எனப்படுவது பொதுவாகப் பின்வரும் மூன்று நிலைகளில் விளக்கப்படுகின்றது.

1. எழுத்து நிலையில் காணப்படும் பிழை
2. சொல்நிலையில் காணப்படும் பிழை
3. உச்சரிப்பு நிலையில் காணப்படும் பிழை

## எழுத்து நிலையில் காணப்படும் பிழை

“மொழியியலார் பொருள் வேறுபாட்டிற்குக் காரணமான ஓசையை ஒலிகள் என்றழைக்கின்றனர். இதன் மூலம் எழுத்து என்பது மிகச்சிறிய ஒலியாகவும், மொழிக்கு முதற்காரணமாகவும் பொருள் வேறுபாட்டை உணர்த்துவதாகவும் வரிவடிவமாகவும் அமைகிறது

என்பது தெளிவாகிறது. எழுத்திற்கு இருவடிவங்கள் உள்ளன. அவை வரிவடிவம், ஒலிவடிவம் என்பன. இதில் ஒலிவடிவம்தான் முதன்மையானது. எழுத்து என்பது வாயால் எழுப்பும் ஒலியையும், எழுதுகோலால் எழுதும் வரியையும் குறிக்கின்றது. ஒலிவடிவம், வரிவடிவம் கொண்ட ஓசையே எழுத்து எனப்படும்.

மொழியியலார் ஓரெழுத்து ஒருமொழியும், தன்னை உணர்த்தும் பிற ஒலிகளும் தவிரப் பிற ஒலிகள் எழுத்தாகும் என்று குறிப்பிடுகின்றனர். எனவே எழுத்து நிலையில் காணப்படும் பிழைகளை அறிவதற்கு நேரடியாகச் சென்று தலைமை ஆசிரியிரின் உதவியுடன் 9-ஆம் வகுப்பு, 10-ஆம் வகுப்புகளில் பயிலும் பழங்குடி மாணவர்களின் காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுத் தாள்கள் பெறப்பட்டு அவற்றுள் மாணவர்கள் செய்துள்ள எழுத்துப் பிழையினை எடுத்துக்காட்டுடன் விளக்கப்பட்டுள்ளது.

## எழுத்துப்பிழை வகைகள்

பழங்குடி மாணவர்கள் செய்த எழுத்துப்பிழைகளை ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

குறில் நெடில் மாறுபாட்டுப்பிழை
மெய்யெழுத்து மாறுபாட்டுப்பிழை
மெய் மயக்கப்பிழை
போலி மாறுபாட்டுப்பிழை
எழுத்து வரிவடிவம் மாற்றுப்பிழை.

## குறில் நெடில் மாறுபாட்டுப்பிழை

பழங்குடி மாணவர்களின் தேர்வுத்தாளில் உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில், உயிர்நெடில், உயிர்மெய் நெடில் எழுத்துக்களை ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை இட்டு எழுதுவதைக் காணமுடிகிறது. இப்பிழைகள் என்பது 7 நிலைகளாகப் பகுக்கப்படுகின்றன.

1. உயிர்குறிலுக்குப்பதிலாக உயிர் நெடிலை எழுதும் பிழை
2. உயிர் நெடிலுக்குப் பதிலாக உயிர்க்குறிலை எழுதும் பிழை
3. உயிர்மெய்க் குறிலுக்குப் பதிலாக உயிர்மெய் நெடிலை எழுதும் பிழை
4. உயிர்மெய் நெடிலுக்குப் பதிலாக உயிர் மெய்குறிலை எழுதும் பிழை
5. உயிர்மெய் இனக்குறிலுக்குப் பதில்ாக பிற உயிர்மெய்க் குறிலை எழுதும் பிழை

6. உயிர் மெய் இன நெடிலுக்குப் பதிலாகப் பிற உயிர்மெய் இன நெடிலை எழுதும்பிழை
7. உயிர் நெடில் எழுத்துக்கு அருகில் துணைக்கால் போட்டு எழுதும் பிழை என்பனவாகும்.

**உயிர்க் குறிலுக்குப் பதிலாக உயிர்நெடிலை எழுதும் பிழை**

பழங்குடி மாணவர்கள் உயிர்க்குறிலுக்குப் பதிலாக உயிர் நெடிலை எழுதிப் பிழை செய்கின்றனர்.

எடுத்துக்காட்டாக,

1. வாழ்ந்திட ஊதவும் (உதவும்)
2. மாடசாமியின் மகான் (மகன்)
3. பாசு (பசு)
4. தண்ணீரை ஆள்ளி ஆள்ளி (அள்ளி அள்ளி)
5. இவற்றை மெய்யெழுத்துக்கள் ஏன்று (என்று) அழைப்பர்.

உயிரெழுத்தில் குறில் நெடில் வேறுபாட்டை அறியாத காரணத்தினாலும், சொல்லைக் கற்பிக்கும் போது உச்சரிப்பைச் சரிவரக் கற்றுத் தராத காரணத்தினாலும் இவ்வாறு பிழையாக எழுதுகின்றனர் என்பது உணரப்படுகிறது. குறில், நெடில் வேறுபாட்டை அறியும் வாய்மொழிப் பயிற்சியையும் எழுத்துப் பயிற்சியையும் அளித்தால் பழங்குடி மாணவர்களிடையே காணப்படும் பிழைகளைத் திருந்தச் செய்யலாம்.

**உயிர் நெடிலுக்குப் பதிலாக உயிர்குறிலை எழுதும் பிழை**

எடுத்துக்காட்டாக,

1. அணுக்குப் (ஆணுக்குப்) பெண் இளைப்பில்லைதான்!
2. பாரதியார் தம் பாடல் மூலம் தேசப்பற்றை ஊட்டினர் (ஊட்டினார்)
3. இக்கருத்தை எற்றுக் (ஏற்றுக்) கொள்ளப்பட்டது.
4. ஒரு ஊரில் மடசாமி (மாடசாமி) இருந்தான்.
5. இரண்டவது (இரண்டாவது)

எழுத்தில் இவ்வகையான பிழைகளைச் செய்ய நேரிடுவதால் பழங்குடி மாணவர்களிடையே நீட்டல் குறுக்கல் ஒலி இலக்கண விதிகளைத் தெளிவுறக் கற்பித்தல் அவசியமாகும்.

**உயிர்மெய்க் குறிலுக்குப் பதிலாக உயிர்மெய் நெடிலை எழுதும் பிழை**

உயிர்மெய்க்குறிலுக்குப் பதிலாக உயிர்மெய் நெடிலை மாற்றி எழுதும் பிழையைக் காணமுடிகிறது.

**எடுத்துக்காட்டாக,**

1. மாடசாமியின் மகான் (மகன்)
2. கன்று குட்டியின் வாயிறு (வயிறு)
3. அவர் பாசியால் (பசியால்)
4. பாத்திரிக்கை (பத்திரிக்கை)
5. சீப்பாய் (சிப்பாய்)

க, ச, ந, ப, ம என்னும் உயிர் மெய்க்குறிலுக்குப் பதிலாக அவற்றின் உயிர் மெய் நெடில் எழுத்தை மாற்றி எழுதுவதால் சொல்லின் பொருள் மாறுபடுகின்றது.

**உயிர்மெய் நெடிலுக்குப்பதிலாக உயிர்மெய்க்குறிலை எழுதும் பிழை**

உயிர்மெய்க் குறிலுக்குப் பதிலாக உயிர்மெய் நெடிலைப் பிழையாக எழுதுவதைப் போன்று, உயிர்மெய் நெடிலுக்குப் பதிலாக உயிர் மெய்க்குறிலை பிழையாக எழுதும் போக்கு பழங்குடி மாணவர்களிடையே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

1. முட்காடக (முட்காடாக) இருந்தது இப்போது முல்லைக் கடகிறது (காடாகிறது).
2. பால் குடிக்கமல் (குடிக்காமல்)
3. அரக்கோடு கிரமம் (கிராமம்)
4. காரணத்தல் (காரணத்தால்)
5. தட்டிக்கெட்டால் (கேட்டால்) தவறா?

இவ்வாறு உயிர்மெய் நெடில் எழுத்துக்குப்பதிலாக அவற்றின் குற்றெழுத்துக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன. இங்ஙனம் உயிர்மெய் நெடிலுக்குப் பதிலாக உயிர்மெய் குறிலை மாற்றி எழுதுவதால் பொருள் மாற்றம் பெறாவிட்டாலும் சொற்கள் பொருளற்றதாகிவிடுகின்றது.

**உயிர் மெய் இனக்குறிலுக்குப் பதிலாகப் பிற உயிர் மெய்யின் குறிலை எழுதும் பிழை**

**எடுத்துக்காட்டாக,**

1. மெத்த பக்கம் (மொத்த பக்கம்)
2. செல்வருநிலையனி) (சொல்வரு)
3. பொட்டியில் (பெட்டியில்) பாண்டியன் பரிசு இருந்தது.

எகரத்தின் இனவெழுத்து ஏகாரம். ஒகரத்தின் இனவெழுத்து ஓகாரம் இவ்வாறு அந்தந்த இனவெழுத்தை எழுதாமல் பிற இனவெழுத்துக்குறிய எழுத்தை மாற்றி எழுதுவதால் பொருளற்ற சொற்களும். பொருள் மாறுபாடான சொற்களும் உருவாகி மொழியைச் சிதைக்கின்றன.

**உயிர் மெய் நெடிலுக்குப் பதிலாகப் பிற உயிர்மெய் நெடிலை எழுதும் பிழை**

பழங்குடி மாணவர்கள் உயிர்மெய் எழுத்துக்குப் பதிலாக, உயிர்மெய் ஓகாரத்தை எழுதும் பிழையைக் காணமுடிகிறது.

**எடுத்துக்காட்டாக,**

1. பசுவின் வாய்க்கு பூட்டு பேடப்பட்டது (போடப்பட்டது)
2. அந்த அரசன் மக்களுக்கு அதிக வரி வாங் கிக் கோடு (கேடு) செய்தான்.
3. க் + ஓ - கொ
4. க் + ஏ - கெ
5. ப் + ஓ - பொ

இரட்டைக் கொம்பிட்டு எழுதப்படும் உயிர்மெய் எழுத்து, உயிர்மெய் நெடில் வகையைச் சார்ந்தது. உயிர்மெய் எழுத்தின் சேர்க்கை வடிவத்தைப் புரியாமல் எழுதுவதால் சொற்களின் பொருள் மாறுபடுகின்றது.

**மெய்யெழுத்து மாறுபாட்டுப்பிழை**

எழுத்துக்களில் ஒன்றுக்குப் பதிலாக வேறொன்றை மாற்றி எழுதுவதால் ஏற்படும் பிழை விளக்கப்படுகிறது.

**எடுத்துக்காட்டாக,**

1. ணகர, நகர, னகர வேறுபாட்டுப்பிழை
2. ரகர, றகர வேறுபாட்டுப்பிழை
3. லகர, ழகர, ளகர வேறுபாட்டுப்பிழை

என்று மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன.

**ணகரத்துக்குப் பதிலாக னகரத்தைப் பயன்படுத்தும் பிழை**

பழங்குடி மாணவர்கள் ணகரத்துக்குப் பதிலாக னகர மெய்யை மாற்றி எழுதும் பிழையைக் காணமுடிகிறது.

**எடுத்துக்காட்டாக,**

1) மனக்கோயில் (மணக்கோயில்)
2) நல்ல நன்பன் (நண்பன்)
3) மானவனுக்கு (மாணவனுக்கு) ஒழுக்கம் அவசியம்
4) வனிகர் (வணிகர்) குலம்
5) அந்தனர் (அந்தணர்) என்போர் அறவோர்

இவ்வாறான பிழைக்குக் காரணம் பேச்சுத்தமிழில், இவ்விரண்டு ஒலிப்பு முறைகளில் வேறுபாடு இன்றி உச்சரிப்பதும், பொருள் வேறுபாட்டை உணராமல் எழுதுவதும் ஆகும். இப்பிழையைப் போக்க

னகரம் இடம் பெறுகின்ற சொற்களின் பொருளையும் கூறி விளக்க வேண்டும்.

### னகரத்திற்குப் பதிலாக ணகரத்தைப் பயன்படுத்தும் பிழை

பழங்குடி மாணவர்கள் எழுதும் போது தேர்வுத்தாளில் னகரத்துக்குப் பதிலாக ணகரத்தை மாற்றி எழுதும் பிழையைக் காணமுடிகின்றது.

எடுத்துக்காட்டாக,

1. விணையெச்சம் (வினையெச்சம்)
2. திருநின்றவூர் நாண்கு வேதங்களுக்கும் சிறந்தது (நான்கு)
3. முனிவர் கணியைத் (கனியைத்) தேடி வந்தார்.
4. அணைத்துப் (அனைத்துப்) பள்ளிகளுக்கும் விடுமுறை விடப்பட்டது.

பேச்சு வழக்கில் னகரம், ணகரம் இரண்டையும் ஒலிப்பு வேறுபாடு இல்லாமல் ஒலிக்கக் கற்றதினாலாகும். னகர, ணகர எழுத்துக்கள் பயிற்று வரக்கூடிய சொற்களை வகுப்பில் எழுதவும். உச்சரிக்கவும். பழங்குடி மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம் இப்பிழையைத் தவிர்க்கலாம்.

### நகரத்துக்குப் பதிலாக னகரத்தைப் பயன்படுத்தும் பிழை

எடுத்துக்காட்டாக,

1. அனுப்புனர் - அனுப்புநர்
2. பெறுனர் - பெறுநர்
3. விடுனர் - விடுநர்

நகரம் என்பது பெயரிடை நிலை எழுத்தாகும். இந்நகரத்தைப் பிழையாகப் பயன்படுத்தும் போக்கு மிகுதியாக உள்ளது. இப்பிழையைப் போக்க பழங்குடி மாணவர்களுக்கு நகர, னகர வேறுபாட்டினை நன்கு உணர்த்த வேண்டும்.

### ரகரத்துக்குப் பதிலாக றகரத்தைப் பயன்படுத்தும் பிழை

பழங்குடி மாணவர்கள் எழுதும் போது ரகத்திற்குப் பதிலாக வல்லின றகரத்தைப் பயன்படுத்தும் பிழை அதிகமாக உள்ளது.

1. திருநாவுக்கரசை அறவு (அரவு) தீண்டியதால் உயிர் பிறிந்தது (பிரிந்தது)
2. உண்பதற்குறிய (உண்பதற்குரிய) உணவைப் பெற உடலை வறுத்தி(வருத்தி) உழைக்கவேண்டும்.

3. எறிமலை (எரிமலை)
4. உடலை வறுத்தி (வருத்தி) உழைக்க வேண்டும்.

**றகரத்துக்குப் பதிலாக ரகரத்தைப் பயன்படுத்தும் பிழை**

1. குருக்கு வழியில் (குறுக்கு)
2. பரவையைப் (பறவையைப்) பார்த்து விமானங்களைத் தயாரித்தான்.
3. அவர்கள் கூரினார்கள் (கூறினார்கள்)
4. பிளாஸ்டிக் பொருளை எரிப்பதற்கு(எறிப்பதற்கு) தடைவிதிக்க வேண்டும்.
5. அரம் தாழ்ந்த (அறம் தாழ்ந்த)

**லகர, ழகரம், ளகரம் பிறக்குமிடம் குறித்து மொழியியலார் கருத்து**

மொழியியலார் லகரத்தை நுனிநாவும், நுனியண்ணமும், குறையும்போது பிறக்கும் நுனியண்ண ஒலி (alveolar) என்றும் "முன் மருங்கொலி" என்றும் குறிப்பிடுகின்றனர். எழுத்தின் உச்சரிப்பைக் கொண்டே மாணவர் அவ்வெழுத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

மொழியியலார் ளகரத்தை "நாவளை மருங்கொலி" என்றும் "நுனிநாவும் நுனியண்ணமும் இணையும் நுனியண்ண ஒலிக்குச் சற்றுப் பின்னால் பிறக்கும். பின் நுனியண்ண ஒலி என்றும் அழைப்பர். அகத்தியலிங்கம் (1976) ழகரத்தை "நுனிநாவும், நுனியண்ணமும் இணையும் போது பிறக்கும் நுனியண்ண ஒலிக்குச் சற்றுப் பின்னால் பிறக்கும் ஒலி பின் நுனியண்ண ஒலி என்கிறார்.

"தமிழில் ல், ள், ழ் ஆகிய மூன்றும் மருங்கொலிகள். இவற்றுள் லகரம், நுனிநா, நுனியண்ண மருங்கொலி ளகரம் நாவளை மருங்கொலி ழகரம் நாவனா மருங்கு தொடரொலி" என்று குறிப்பிடுகிறார் கு. பரமசிவன் (1983).

**லகரத்துக்குப் பதிலாக ளகரத்தைப் பயன்படுத்தும் பிழை**

பழங்குடி மாணவர்கள் எழுதும்போது லகரத்திற்குப் பதிலாக ளகரத்தைப் பயன்படுத்தும் பிழைகள் காணப்படுகின்றன.

1. வானம் நீளநிறமாக (நீலநிறமாக) உள்ளது.
2. தெருவெள்ளாம் (தெருவெல்லாம்) மரம் வளர்ப்போம்
3. கூளவாணிகன் (கூலவாணிகன்)
4. பசுவிற்குப் பொங்கள் (பொங்கல்) வைத்தனர்
5. ஆண்டாள் கோயிளுக்குள் (கோயிலுக்குள்) சென்று இறைவனிடம் களந்து விட்டால் (கலந்துவிட்டாள்).

லகரத்தை பதிலாக ளகரத்தை எழுதும் போது இப்பிழையால் பெரும்பாலும் பொருளற்ற சொற்கள் உருவாகின்றன. எனவே எழுத்துப் பயிற்சியும், உச்சரிப்புப் பயிற்சியும் பழங்குடி மாணவர்களுக்கு அளிப்பதன் மூலம் இப்பிழையைப் போக்க முடியும்.

**லகரத்துக்குப் பதிலாக ழகரத்தைப் பயன்படுத்தும் பிழை**

அநேக சூழலில்லகரம் வரும் இடங் களில் சிறப்பு 'ழ' கரகம் பயன்பாட்டுக்கு வருவதையும் பார்க்கலாம்.

1. தாயின் மடியில் தழை (தலை) சாய்ந்தாள்
2. மேற்கிழிருந்து (மேற்கிலிருந்து) நாழாவது (நாலாவது) படை கிளம்பியது.
3. மாழையில் விளையாடிகளின் (மாலை)
4. பழம் வாய்ந்த மனிதன் (பலம்)
5. தழைவர்கள் வந்தார்கள் (தலைவர்கள்)

இவற்றில் லகரத்துக்குப் பதிலாக ழகரம் பயன்படுத்தப் பட்டமையால் பொருளற்ற சொற்களாகிப் பிழையாகின்றன.

**ழகரத்துக்குப் பதிலாக லகரத்தைப் பயன்படுத்தும் பிழை**

'ழ'கரம் வருமிடத்தில் 'ல' கரம் வருவதையும் காணலாம்.

1. கௌரவர்கள் பாண்டவர்களை இகல்ந்து (இகழ்ந்து) உரைத்தனர்.
2. தமிழ்மொலி (தமிழ்மொழி) மிகப் பலமையான (பழமையான) மொலி (மொழி)
3. சங்ககால மக்கள் காதணியைக் கலற்றி (கழற்றி) எறிந்து கோலியை (கோழியை) விரட்டினர்.
4. மாம்பலம் (மாம்பழம்) வாங்கி வந்தேன்.

இது போன்ற பயன்பாட்டால் சில இடங்களில் பொருள் வேறுபடும். பல இடங்களில் பொருளற்ற சொற்கள் உருவாகின்றன.

**ழகரத்துக்குப் பதிலாக ளகரத்தைப் பயன்படுத்தும் பிழை**

மேற்கண்டது போல் 'ழ' கரத்தை 'ள' கரம் வருமிடத்தில் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம்.

1. இச்சிறுகதை நமக்கு விளிப்புணர்வு (விழிப்புணர்வு) தருகிறது.
2. ஒளிந்த (ஒழிந்த) ஊரில் சேவல் கூவட்டும்.
3. விளிமேல் (விழி)
4. பளங் கள் (பழங்கள்)
5. பளங் கால (பழங்கால) மனிதன்

லகர, ழகர, ளகர எழுத்துக்களின் உச்சரிப்பில் உள்ள வேறுபாட்டை உணராததும், பொருள் வேறுபாட்டை அறியாததும் மாற்றி ஒலிப்பதற்கும் எழுதுவதற்கும் காரணமாகும்.

**ளகரத்துக்குப் பதிலாக லகரத்தைப் பயன்படுத்தும் பிழை**

ஒரு அண்ண மருங்கொலியான 'ள' சில சூழலில் 'ல' கரமாகவும் பயன்பாட்டிற்கு வருகிறது.

1. தமிழில் தோன்றிய முதல் கதை குலத்தங்கரை (குளத்தங்கரை) அரசமரம் சொன்ன கதையாகும்.
2. மிலகுச் (மிளகு) செடி வளர்ந்தது
3. மத்தலம் (மத்தளம்) கொட்டியது.
4. பல்லம் (பள்ளம்) விழுந்தது
5. பல்லிக் (பள்ளி) கூடம்

**ளகரத்துக்குப் பதிலாக ழகரத்தைப் பயன்படுத்தும் பிழை**

1. மாசுடன் அனைத்தும் வழி (வளி) மண்டலத்தை அடைகின்றன.
2. மாலை முழுவதும் விழையாட்டு (விளையாட்டு)
3. வழையல் (வளையல்)
4. மிழகுச் செடி (மிளகு)
5. தேழ் (தேள்) கொட்டியது

**சொல்நிலையில் காணப்படும் பிழை**

சொல்நிலையில் காணப்படும் பிழை என்ற இந்த இயலில் சொல்லின் இலக்கணம், சொல்வகை குறித்து இலக்கண நூலார் கருத்து. மொழியியலார் நோக்கில் சொல் சொல்நிலையில் காணப்படும் பிழைகள் பழங்குடி மாணவர்கள் பேச்சுத்தமிழை எழுத்துத் தமிழில் எழுதும்போது பிழை எவ்வாறு ஏற்படுகின்றன என்பதை விளக்குகின்றது.

**சொல் என்பதன் பொருள்**

இலக்கணக் களஞ்சியம், 1997, ப. 76 என்ற நூலில் பொற்கோ அவர்கள் "ஒலியெழுத்து அல்லது வரி எழுத்துக்களைப் பெற்று ஓரெழுத்து அல்லது பல எழுத்துக்களால் அமைந்து பொருளுக்கு இருப்பிடமாகத் திகழ்வது சொல் எனப்படும் என்று சொல்லுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

**மொழியியலார் நோக்கில் சொல்**

"ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியனோ ஒரு மொழியின் ஒலியின் அமைப்புக்கேற்றவாறு இணைந்து நின்று ஒரு பொருளை உணர்த்துமாயின் அது சொற்பொருளாக இருக்கலாம். அல்லது இலக்கணப் பொருளாக இருக்கலாம். குறிக்கும் நிலையில்

அது உருபன் என்றும் அவ்வுருபன் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேலோ இணையும் நிலையில் இணைந்து ஒரு பொருளைத் தருமானால் அது சொல் என்று அழைக்கப்படும்.

**கண் ஒரு உருபன், ஒரு சொல்**

**கண்கள் இரு உருபன், ஒரு சொல்**

உருபன் என்பது மொழியில் காணப்படும். ஒரு பொருள் தரும் சிறிய அலகு ஆகும். சொல் என்பது ஒரு உருபனையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உருபன்களையோ கொண்டிருக்கும் என்கிறார் அகத்தியலிங்கம் (1976). இதன் மூலம் பொருள் தரும் மிகச்சிறிய ஒலிக்கூறு சொல் என்பதை மொழியியலார் கருதுகின்றனர்.

பொருண்மை புரியாத நிலையில் சொற்களைப் பயன்படுத்தும் பிழை

பொருண்மை புரியாத நிலையில் ஏற்படும் பிழை என்ற பகுதியைப் பொறுத்தவரை சொற்களின் பொருளை நன்கு அறியாததாலும் இதன் காரணமாக மாணவர்கள் தேர்வுத்தாள்களில் சொற்களைப் பொருள் புரியாத பிறபொருளை உணர்த்தும் சொல்லைப் பிழையாக எழுதுவதைக் காணமுடிகின்றது.

சொற்பிழைகளும், திருத்தமும் (இருளர் மாணவர் 9-ஆம் வகுப்பு)

1) எவையேனும் 7 வணக்கலுக்கு மட்டும் விடையளி
எவையேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி.

2) சரியன விடையை தேர்ந்தெடுத்து எழுதுக
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

3) செர நாட்டை சார்ந்தவர் இளங் கோ
சேர நாட்டைச் சேர்ந்தவர் இளங் கோ

4) குலவனின் சந்தனர் என்றும் பெயர் பெள்ளுர்.
கூல வாணிகண் சாத்தனார் என்னும் பெயர் பெற்றார்

5) பாரசோதி விலையடல் இயற்றியவர் திருவிளையடல் ஆகும்.
பரஞ்சோதி முனிவர் இயற்றியது திருவிளையாடற் புராணம் ஆகும்

6) தமிழ் அர்வம் படைத்தவர் பாண்டிய மன்னர்
தமிழார்வம் படைத்தவர் பாண்டிய மன்னர்

7) முன்னோர்கள் மருத்துவத்தில் கணிசமாக கணித்திறம் கண்டர்.
முன்னோர்கள் மருத்துவத்துறையில் கணிசமான முன்னேற்றம் கண்டிருந்தனர்

8) நாம் வாழ்வது அறிவியல் தெளிநுட்பயுகம்
நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பயுகம்

9) 15 வரிகளுக்கு மிகமல் விடை எழுதுக
பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக

10) அயுர்வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது
ஆயுர் வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது

இருளர் மாணவர் (10ஆம் வகுப்பு)

1. இந்தியர்களினடம் எளிதக புரிந்து கொள்ளும் உள்ளது.
இந்தியர்களிடம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் திறமை உள்ளது.

2. நான் இன்று நன்றக படம் படித்தோன்
நான் நன்றாக பாடம் படித்தேன்.

3. இந்தியா பிரத்தியா கோண்ட நாடு
இந்தியா பல்வேறு பிராந்தியங் கள் கொண்டதோர் நாடு

4. மூன்று வரிகழுக்கு மிகமல் விடை எழுதுகா
மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக

5. இளமையில் கல் ஒளவையார் மொழி
இளமையில் கல் என்பது ஒளவையார் அமுத மொழி

6. கல்வி அறிவு இல்லதா மக்கள் இல்லை
கல்வியறிவில்லாத மக்களில்லை

7. ஆங் கிலம் என்பது மொழி
ஆங் கிலம் என்பது ஒரு நாட்டின் மொழி

8. ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாடுகளை பொருத்து
ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழி நிலையைப் பொறுத்தே நிற்கும்

9. இயற்கை வாழ்வை யர்வாம் திருக்குறள்
இயற்கை வாழ்வில்லம் திருக்குறள்

10. தமிழ்க கவியங் கள் பாடியங்கள்
தமிழ்க் காவியங்களைப் படியங்கள்

குறும்பர் மாணவர் (9ஆம் வகுப்பு)

1. இந்தியர்களினடம் எளிதக புரிந்து கொள்ளும் உள்ளது.
இந்தியர்களிடம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் திறமை உள்ளது.

2. நான் இன்று நன்றக படம் படித்தோன்
நான் நன்றாகப் பாடம் படித்தேன்.
3. இந்தியா பிரத்தியா கோண்ட நாடு
இந்தியா பல்வேறு பிராந்தியங்கள் கொண்டதோர் நாடு
4. மூன்று வரிகழுக்கு மிகமல் விடை எழுதுகா
மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக
5. இளமையில் கல் ஔவையார் மொழி
இளமையில் கல் என்பது ஔவையார் அமுத மொழி
6. கல்வி அறிவு இல்லதா மக்கள் இல்லை
கல்வியறிவில்லாத மக்களில்லை
7. ஆங்கிலம் என்பது மொழி
ஆங்கிலம் என்பது ஒரு நாட்டின் மொழி
8. ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாடுகளை பொருத்து
ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழி நிலையைப் பொறுத்தே நிற்கும்
9. இயற்கை வாழ்வை யர்வாம் திருக்குறள்
இயற்கை வாழ்வில்லம் திருக்குறள்
10. தமிழ்க கவியங்கள் பாடியுங்கள்
தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்

குறும்பர் மாணவர்கள் (10ஆம் வகுப்பு)

1) எவையேனும் 7 வணக்கலுக்கு மட்டும் விடையளி
எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி.
2) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக
3) செர நாட்டை சார்ந்தவர் இளங் கோ
சேர நாட்டைச் சேர்ந்தவர் இளங்கோ
4) குலவனின் சந்தனர் என்றும் பெயர் பெள்ளுர்.
கூல வாணிகண் சாத்தனார் என்னும் பெயர் பெற்றார்
5) பாரசோதி விலையடல் இயற்றியவர் திருவிளையடல் ஆகும்.
பரஞ்சோதி முனிவர் இயற்றியது திருவிளையாடற் புராணம் ஆகும்
6) தமிழ் அர்வம் படைத்தவர் பாண்டிய மன்னர்
தமிழார்வம் படைத்தவர் பாண்டிய மன்னர்
7) முன்னோர்கள் மருத்துவத்தில் கணிசமாக கணித்திறம் கண்டர்.

முன்னோர்கள் மருத்துவத்துறையில் கணிசமான முன்னேற்றம் கண்டிருந்தனர்

8) நாம் வாழ்வது அறிவியல் தெளிநுட்பயுகம்
நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பயுகம்

9) 15 வரிகளுக்கு மிகமல் விடை எழுதுக
பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக

10) அயுர்வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது
ஆயுர் வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது

பனியர் மாணவர் (9ஆம் வகுப்பு)

1) எவையேனும் 7 வணக்கலுக்கு மட்டும் விடையளி
பின்வரும் ஏழு வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

2) சரியன விடையை தேர்ந்தெடுத்து எழுதுக
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

3) செர நாட்டை சார்ந்தவர் இளங்கோ
சேர நாட்டைச் சேர்ந்தவர் இளங்கோ

4) குலவனின் சந்தனர் என்றும் பெயர் பெள்ளுர்.
கூல வாணிகண் சாத்தனார் என்னும் பெயர் பெற்றார்

5) பாரசோதி விலையடல் இயற்றியவர் திருவிளையடல் ஆகும்.
பரஞ்சோதி முனிவர் இயற்றியது திருவிளையாடற் புராணம் ஆகும்

6) தமிழ் அர்வம் படைத்தவர் பாண்டிய மன்னர்
தமிழார்வம் படைத்தவர் பாண்டிய மன்னர்

7) முன்னோர்கள் மருத்துவத்தில் கணிசமாக கணித்திறம் கண்டர்.
முன்னோர்கள் மருத்துவத்துறையில் கணிசமான முன்னேற்றம் கண்டிருந்தனர்

8) நாம் வாழ்வது அறிவியல் தெளிநுட்பயுகம்
நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பயுகம்

9) 15 வரிகளுக்கு மிகமல் விடை எழுதுக
பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக

10) அயுர்வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது
ஆயுர் வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது

பனியர் மாணவர்கள் (10ஆம் வகுப்பு)

1) இந்தியர்களினடம் எளிதக புரிந்து கொள்ளும் உள்ளது.
இந்தியர்களிடம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் திறமை உள்ளது.

2) நான் இன்று நன்றக படம் படித்தோன்
நான் நன்றாக பாடம் படித்தேன்.

3) இந்தியா பிரத்தியா கோண்ட நாடு
இந்தியா பல்வேறு பிராந்தியங்கள் கொண்டதோர் நாடு

4) மூன்று வரிகழுக்கு மிகமல் விடை எழுதுகா
மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக

5) இளமையில் கல் ஔவையார் மொழி
இளமையில் கல் என்பது ஔவையார் அமுத மொழி

6) கல்வி அறிவு இல்லதா மக்கள் இல்லை
கல்வியறிவில்லாத மக்களில்லை

7) ஆங்கிலம் என்பது மொழி
ஆங்கிலம் என்பது ஒரு நாட்டின் மொழி

8) ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாடுகளை பொருத்து
ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழி நிலையைப் பொறுத்தே நிற்கும்

9) இயற்கை வாழ்வை யர்வாம் திருக்குறள்
இயற்கை வாழ்வில்லம் திருக்குறள்

10) தமிழ்க கவியங்கள் பாடியங்கள்
தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்

காடர் மாணவர்கள் (9ஆம் வகுப்பு)

1) எவையேனும் 7 வணக்கலுக்கு மட்டும் விடையளி
பின்வரும் ஏழு வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

2) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

3) செர நாட்டை சார்ந்தவர் இளங்கோ
சேர நாட்டைச் சேர்ந்தவர் இளங்கோ

4) குலவனின் சந்தனர் என்றும் பெயர் பெள்ளுர்.
கூல வாணிகண் சாத்தனார் என்னும் பெயர் பெற்றார்

5) பாரசோதி விலையடல் இயற்றியவர் திருவிளையடல் ஆகும்.
பரஞ்சோதி முனிவர் இயற்றியது திருவிளையாடற் புராணம் ஆகும்

6) தமிழ் அர்வம் படைத்தவர் பாண்டிய மன்னர்
தமிழார்வம் படைத்தவர் பாண்டிய மன்னர்

7) முன்னோர்கள் மருத்துவத்தில் கணிசமாக கணித்திறம் கண்டர்.

6. (

முன்னோர்கள் மருத்துவத்துறையில் கணிசமான முன்னேற்றம் கண்டிருந்தனர்

8) நாம் வாழ்வது அறிவியல் தெளிநுட்பயுகம்
நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பயுகம்

9) 15 வரிகளுக்கு மிகமல் விடை எழுதுக
பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக

10) அயுர்வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது
ஆயுர் வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது

க்ாடர் மாணவர்கள் (10ஆம் வகுப்பு)

1) இந்தியர்களினடம் எளிதக புரிந்து கொள்ளும் உள்ளது.
இந்தியர்களிடம் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் திறமை உள்ளது.

2) நான் இன்று நன்றக படம் படித்தோன்
நான் நன்றாக பாடம் படித்தேன்.

3) இந்தியா பிரத்தியா கோண்ட நாடு
இந்தியா பல்வேறு பிராந்தியங்கள் கொண்டதோர் நாடு

4) மூன்று வரிகழுக்கு மிகமல் விடை எழுதுகா
மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக

5) இளமையில் கல் ஒளவையார் மொழி
இளமையில் கல் என்பது ஒளவையார் அமுதமொழி

6) கல்வி அறிவு இல்லதா மக்கள் இல்லை
கல்வியறிவில்லாத மக்களில்லை

7) ஆங்கிலம் என்பது மொழி
ஆங்கிலம் என்பது ஒரு நாட்டின் மொழி

8) ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாடுகளை பொருத்து
ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழி நிலையைப் பொறுத்தே நிற்கும்

9) இயற்கை வாழ்வை யர்வாம் திருக்குறள்
இயற்கை வாழ்வில்லம் திருக்குறள்

10) தமிழ்க் கவியங்கள் பாடிங்கள்
தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்

### சொற்பிழையின் வகைகள்

பழங்குடி மாணவர்கள் மேற்சுட்டிக் காட்டியதன் படி சொற்களைப் பிழையோடு எழுதுவது பரவலாகக் காணப்படுகிறது. இப்பிழைகளைக் கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. ஒலி நிலையில் காணப்படுவது

அ. எழுத்துக்களை விட்டு எழுதுவது.
ஆ. எழுத்துக்களை மாற்றி எழுதுவது.
இ. ஓரின ஒலிகளுக்குள்ளே மாற்றி இடம் பெறச் செய்வது.
ஈ. துணை ஒலிகளை மாற்றுவது.
உ. ஒலிக் குறிகளை மாற்றி எழுதுவது.
ஊ. ஒற்றுப்பிழைகள் காணப்படுகின்றன.
எ. குறில் நெடில் இடமாற்றம் எழுத்து நிலையில் அதிகமாக காணப்படுகின்றன.

உச்சரிப்பு நிலையில் காணப்படும் பிழை

தமிழ் கற்கும்போது உச்சரிப்பு நிலைகளில் காணப்படும் பிழைகளை அறிவதற்கு பாடநூல்களில் உள்ள நன்கு தெரிந்த சொற்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு பின்பு அந்தச் சொற்களை அட்டவனை செய்து மொத்தம் 20 சொற்கள் கொடுக்கப்பட்டன. இச்சொற்களை ஒவ்வொரு பழங்குடி மாணவர்களையும் தனித் தனியாகப் படிக்கச் செய்து, அதாவது வாசிக்கச் சொல்லி ஒலிப்பதிவு நாடாமூலம் பதிவு செய்யப்பட்டது. இதேபோல் இருளர், குறும்பர், பனியர், காடர் ஆகிய அனைத்து மாணவர்களையும் வகுப்பு வாரியாகப் பிரித்து இவர்களின் உச்சரிப்புதிறன் அறியப்பட்டது. பின்பு ஆய்வாளர் ஒரு நாடாவில் பதிவான பழங்குடி மாணவர்களின் சொற்கள் உச்சரிப்புத்திறனை ஹெட்போன் மூலம் கேட்டு அவர்கள் எப்படித் தமிழ்ச் சொற்களை உச்சரிப்பு செய்தார்களோ அதை அப்படியே தாளில் மாறாமல் எழுத்து வடிவில் எழுதப்பட்டது. இவர்களின் உச்சரிப்பு திறன் குறித்து பின்வரும் நிலைகளில் அறியப்படுகின்றது.

இருளர் மாணவரின் உச்சரிப்புத்திறனை அறிதல் (9ஆம் வகுப்பு )

| தமிழ் | பிழையான உச்சரிப்பு |
|---|---|
| கப்பல் | கப்பலு |
| கம்பளம் | கம்பளாம் |
| காக்கை | காக்கெ |
| காயம் | காயெம் |
| கிணறு | கிணறு |
| கூட்டம் | கூட்டாம் |
| கோதுமை | கோதும |
| கோழி | கோயி |
| சங்கு | சங் கு |
| சக்கரம் | சக்கராம் |
| சாயம் | சாயமு |

**இருளர் மாணவரின் உச்சரிப்புத்திறனை அறிதல் (10ஆம் வகுப்பு)**

| தமிழ் | பிழையான உச்சரிப்பு |
|---|---|
| காக்கை | காக்கெ |
| கோதுமை | கோதும |

**குரும்பர் மாணவரின் உச்சரிப்புத்திறனை அறிதல் (9ஆம் வகுப்பு)**

| தமிழ் | பிழையான உச்சரிப்பு |
|---|---|
| கப்பல் | கப்பலு |
| காக்கை | காக்கெ |
| கிணறு | கெணறு |
| கோதுமை | கோதும |
| கோழி | கோயி |
| சக்கரம் | சக்கராம் |
| செங் கல் | செங் காள் |
| சேவல் | சேவலு |
| தங் கை | தங் கெ |
| தாழ்ப்பாள் | தாப்பாள் |
| திங் கள் | திங் களு |
| திமிரு | திமிரு |
| தூள் | தூளு |
| தெய்வம் | தெவ்வாம் |
| தெற்கு | தெக்கு |

**குரும்பர் மாணவரின் உச்சரிப்புத்திறனை அறிதல் (10ஆம் வகுப்பு)**

| தமிழ் | பிழையான உச்சரிப்பு |
|---|---|
| காயம் | காயாம் |
| கிணறு | கிணாறு |
| கோதுமை | கோதும |
| செங் கல் | செங் ளு |
| தங் கை | தங் க |
| தாய் | தாயி |
| தாழ்ப்பாள் | தாப்பாளு |
| தீய | தீயே |
| தெய்வம் | தெவ்வாம் |
| தெற்கு | தெக்கு |

பனியர் மாணவரின் உச்சரிப்புத்திறனை அறிதல் (9ஆம் வகுப்பு)

| தமிழ் | பிழையான உச்சரிப்பு |
|---|---|
| கப்பல் | கப்பலு |
| கம்பளம் | கம்பளாம் |
| காக்கை | காக்கெ |
| காயம் | காயாம் |
| கூட்டம் | கூட்டாம் |
| கோதுமை | கோதும |
| சக்கரம் | சக்கராம் |
| செங் கல் | செங் காள் |
| சேவல் | சேவலு |
| சோளம் | சோளாம் |
| தங் கம் | தங் காமு |
| தங் கை | தங் கெ |
| தாய் | தாயி |
| தாழ்ப்பாள் | தாப்பாலு |
| திங் கள் | திங் காளு |
| திமிரு | திமிரு |
| தீய | தீயே |
| தெய்வம் | தெவ்வாம் |
| தெற்கு | தெக்கு |

பனியர் மாணவரின் உச்சரிப்புத்திறனை அறிதல் (10ஆம் வகுப்பு)

| தமிழ் | பிழையான உச்சரிப்பு |
|---|---|
| காக்கை | காக்கெ |
| கூட்டம் | கூட்டாம் |
| கோதுமை | கோதும |
| தங் கை | தங் கே |
| தாய் | தாயி |
| தாழ்ப்பாள் | தாப்பால் |
| தீய | தீயே |
| தெய்வம் | தெவ்வாம் |
| தெற்கு | தெக்கு |

காடர் மாணவரின் உச்சரிப்புத்திறனை அறிதல் (9ஆம் வகுப்பு)

| தமிழ் | பிழையான உச்சரிப்பு |
|---|---|
| காக்கை | காக்கெ |
| கிணறு | கிணாறு |

| | |
|---|---|
| கோதுமை | கோதும |
| சக்கரம் | சக்கராம் |
| தங் கை | தங் கே |
| திமிரு | திமிரு |
| தீய | தீயே |
| தூள் | தூளு |
| தெற்கு | தெக்கு |

**காடர் மாணவரின் உச்சரிப்புத்திறனை அறிதல் (10ஆம் வகுப்பு)**

| தமிழ் | பிழையான உச்சரிப்பு |
|---|---|
| கிணறு | கிணாறு |
| கேள்வி | கேலி |
| கோதுமை | கோதும |
| செங்கல் | செங்காள் |
| தங்கை | தங்கே |
| தாய் | தாயி |
| தாழ்ப்பாள் | தாப்பாள் |
| தீய | தீயே |
| தெய்வம் | தெவ்வாம் |
| தெற்கு | தெக்கு |

பெரும்பாலும் இவ்வாறாக பழங்குடி மாணவர்கள் தமிழ்ச் சொற்களை உச்சரிக்கும்போது சொற்களைப் பிழையாகவே உச்சரிக்கப்படுவதை இதன் மூலம் அறிய முடிகின்றது. இந்தச் சிக்கலைப் போக்க ஒலி, சொல்லிலக்கணம், ஒற்றுவரல் நிலை, ஒலி மயக்க இலக்கணம், உருபு ஒலியனியல் போன்றவைத் தெளிவுர பின்வரும் அட்டவனை விளக்கப்படம் எழுத்து நிலை, சொல்நிலை, உச்சரிப்புநிலை குறித்து மதிப்பீட்டளவில் உதவுகிறது.

**9ஆம் வகுப்பு பழங்குடி மாணவர்கள் தமிழ் கற்கும்போது பிழை ஏற்படும் நிலை பற்றிய கருத்து குறித்த அட்டவனை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் |
|---|---|---|---|---|
| எழுத்து நிலை | 3 | 3 | 11 | 0 |
| சொல் நிலை | 19 | 1 | 9 | 6 |
| உச்சரிப்பு நிலை | 6 | 3 | 7 | 0 |
| எதுவுமில்லை | 10 | 2 | 3 | 7 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 |

**விளக்க வரைபடம்**




**மதிப்பீட்டுக் கருத்து**

காடர் மாணவர்கள் பெரும்பாலும் பிழையோடு எழுதுகின்றனர். பிழையின்றி எழுதுவதில் பின்தங் கியுள்ளனர் என்பதை இந்த அட்டவனை விளக்குகின்றது. மற்ற பழங்குடி மாணவர்களைவிட காடர் மாணவர்களுக்கு எழுத்துப் பயிற்சியினை ஆசிரியர்கள் அளிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். சொல் நிலை குறித்த மதிப்பீட்டில் இருளர், பனியர், காடர் போன்ற மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர். ஆனால் குறும்பர் மாணவர்கள் சொல்நிலையில் பிழையோடு எழுதுகின்றனர். இந்நிலை பரவலாகவே காணப்படுகிறது. இங்கு குறும்பர் இன மாணவர்களுக்கு சொல்நிலை குறித்த பயிற்சியினை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பனியர், இருளர், குறும்பர் மாணவர்கள் எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கின்றனர். பின்வரும் அட்டவனை விளக்கப்படம் 10ஆம் வகுப்பு பயிலும் பழங்குடி மாணவர்களின் எழுத்து நிலை, சொல்நிலை, உச்சரிப்புநிலை ஆகியன குறித்து விளக்குகிறது.

**10ஆம் வகுப்பு பழங்குடி மாணவர்கள் தமிழ் கற்கும்போது பிழை ஏற்படும் நிலை பற்றிய கருத்து குறித்த அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் |
|---|---|---|---|---|
| **எழுத்து நிலை** | 1 | 0 | 1 | 0 |
| **சொல் நிலை** | 6 | 6 | 3 | 2 |
| **உச்சரிப்பு நிலை** | 4 | 1 | 2 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| எதுவுமில்லை | 2 | 0 | 0 | 1 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 |

**விளக்க வரைபடம்**




மதிப்பீட்டுக் கருத்து

எழுத்து நிலை என்றளவில் பனியர், இருளர் மாணவர்கள் பிழையின்றிச் சிறப்பாக எழுதுகின்றனர். ஆனால் குறும்பர், காடர் இன மாணவர்கள் பின்தங்கியுள்ளனர். சொல் நிலை குறித்த மதிப்பீட்டில் இருளர், குறும்பர், பனியர், காடர் இன மாணவர்கள் முன்னேற்றமில்லா நிலையிலேயே உள்ளனர். மற்ற இன மாணவர்களை ஒப்பிடுகையில் காடர் இன மாணவர்களுக்குச் சொற்களைப் பிழையின்றி எழுதவும், படிக்கவும், பயிற்சி மேற்கொள்வது அவசியம். சொற்களைச் சரிவரப் பயன்படுத்தவும், சொற்களின் பல்வேறு இயக்க நிலைகளையும் புரிந்துள்ளனர். பனியர் இன மாணவர்களும் அதே அளவில் சிறப்புற்றிருக்கின்றனர்.

உச்சரிப்பு நிலையில் பனியர், இருளர், இன மாணவர்கள் சிறந்து விளங்குகின்றனர். குறும்பர், காடர் மாணவர்கள் பின்தங்கி யுள்ளனர். எனவே இந்த இரு மாணவர்களுக்கும் உச்சரிப்புப் பயிற்சி அளிப்பதில் ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். எந்தெந்தப் பகுதியில் எந்தப் பழங்குடி மாணவன் பின்னடைவாக இருக்கிறான் என்பதைப் புரிந்து அப்பாடப் பகுதியைச் சரிவரப் பயிற்சி பெறச் செய்ய வேண்டும். அவற்றோடு மாணவனின் பின்னடைவிற்குக் காரணம் என்ன என்பதையும் கண்டறிந்து அதற்குத்தக்க கற்றல் நிலையிலிருந்து தீர்வு காண வேண்டும்.

## தொகுப்புரை

பழங்குடி மாணவர்களிடையே தமிழ் கற்றலின் போது ஏற்படும் பிழைகள் என்பன எழுத்து நிலை, சொல் நிலை உச்சரிப்பு நிலை என மூன்று நிலைகளின் அடிப்படையில் ஆராய்ந்து, இப்பிழைகள் மாணவர்களிடையே ஏற்படக்காரணம் என்ன அது எதனால் ஏற்படுகின்றது என பார்த்தோம். அதனைப் போக்குவதற்கான வழி முறைகள் என்ன என்பதனை விளக்குவதாக பழங் குடி மாணவர்களின் தமிழும் மொழிப் பிழைஆய்வு மதிப்பிடலும் என்ற இந்த இயல் விளக்க முயற்சித்திருக்கிறது.

## பாடநூல் வழி பழங்குடி மாணவர்களின் மொழித்திறன் மதிப்பீடு

பாடப்பொருள் கற்போரின் அறிதிறனையும், புரிதினையும் அளவிட உதவும் முதன்மைக் காரணியாக விளங்குகிறது. வகுப்பிலுள்ள எல்லாவகை மாணவர்களும் (புரிதற்சார் திறனடிப்படையில் வகைப்பாடு) ஏற்றுக் கொள்ளும் நிலையில் அமையப் பெறுவது. சில மாணவர்களே புரியும் படியான எளிதான வாய்பொருள் என்றவாறு அமையப் பெறுகையில் கற்போரின் / மாணவர்களின் கற்கும் திறனில் வேறுபாடு காணப்படுகிறது.

மொழிப்பாடப் பொருளை மதிப்பிட அடிப்படைக் காரணிகளாக அப்பாடப் பொருளைக் கற்றுத்தரும் ஆசிரியர்களும் அப்பாடப் பொருளைக் கற்கும் மாணவர்களும் காரணிகளாகக் கருதப்படுகின்றனர். ஆசிரியர்கள் வழியே பாடநூலின் தன்மை, பயிற்றுவித்தல் நெறிமுறை போன்றவற்றைப் பற்றிய மதிப்பீட்டாய்வு செய்யலாம். பழங்குடி மாணவர்களுக்கான கற்றலில் நெறிமுறையைக் கையாள்வது என்பது ஆய்வுக்குப்படுத்த வேண்டியதாகும். அதன் பொருட்டு மேற்கண்ட இயலில் ஆசிரியர்கள் வழிப் பெறப்பட்ட கருத்துக்களை ஆய்வு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கற்றல் நிலை கருதுதலுக்குரியது. ஆகையால் மாணவர்கள் வழிப் பெறப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் மொழித் திறனை மதிப்பீடு செய்யும் வகையில் அமையப் பெற்றிருக்கின்றன.

மொழிப்பாடத்தின் வழி பல்வேறு செய்திகளை, பண்பாடு, சமூகம், கலை, அரசியல், அறிவியல், பொருளாதாரம் போன்ற பொருண்மைகளை உள்ளடக்கி அமையப் பெறுவன மொழிப் பாடப் பொருளாகும். இவற்றைக் கற்கும் பழங்குடி மாணவன் தரை நிலச் சமூகத்திலுள்ள மாணவனின் தகவிற்கு இணையானவனாக மாறும் இயல்பிற்கு வாய்ப்புள்ளது.

### பாடநூல் மதிப்பீடு

மதிப்பீடு என்பது பலமுறையில் செய்யப்படுவதாகும். இது பல படிநிலைகளில் செய்யப்படுகின்றன. நோக்கம் மற்றும் குறிக்கோள் களுக்கு ஏற்றவாறு மதிப்பீடு வேறுபடும். பொதுவாக மதிப்பீடு இரண்டு வகைப்படும்.

அவை

1) சுருக்கமாக மதிப்பிடுதல் (Brief evaluation)
2) விரிவாக மதிப்பிடுதல் (Extensive evaluation)

என்பனவாகும் (கல்வி உளவியல், 2006)

## சுருக்கமாக மதிப்பிடுதல்

பாடநூலில் ஒரு சில குறிப்பிட்ட கூறுகளை மட்டும் எடுத்துக் கொண்டு ஆராய்வது சுருக்கமாக மதிப்பிடுதலாகும். இவ்வகை மதிப்பீட்டின் முக்கிய நன்மை காலவிரயம் குறைவாக செலவிடப் படுகின்றது. இவ்வகை மதிப்பீடு புத்தகங்களை ஒப்பிட்டு ஆராய்வதற்கு மிகவும் உதவியாக அமையும். பாடநூல்கள் பற்றிய விரிவான விளக்கங்களை அறிய உதவியாக அமையும். இவ்வகையான மதிப்பீடு பரவலாகக்காணப்படும். விமர்சனத்தோடு ஒத்துபோகும் தன்மையுடைய தாகும். தகவலாளி தாம் திரட்டிய தகவல்களைத் தொகுத்து முறையான மதிப்பீடு செய்து தீர்மானிப்பார். ஆனால் விமர்சனம் என்பது பகுத்தாய்ந்து சொல்வது, மதிப்பீட்டாளர் கொடுத்த தகவல்களைத் தொகுத்தும் பார்த்தாராயலாம். இந்த மதிப்பீடு விமர்சனத்துக்கும், விரிவான மதிப்பீட்டிற்கும் இடையில் பொதுத்தன்மை கொண்டு செயல்படுகின்றது.

## விரிவான மதிப்பீடு

பாடநூலைப் பகுத்து ஆராய்வது விரிவான மதிப்பீடு ஆகும். இம்மதிப்பீட்டின் மூலம் பாடநூலின் பொதுப்பண்புகள் மற்றும் காரணப் பண்புகளை ஆராயலாம். மதிப்பீட்டாளர் பாடநூலை நன்கு ஆராய்ந்து பாடநூலின் ஒவ்வொரு பண்புகளையும் மதிப்பீடு செய்கிறார். துணைக்கூறுகளையும் மதிப்பீடு செய்கின்றார். இதனால் அந்த நூலைப்பற்றிய கருத்துக்கள் எளிதில் புலப்படும். அதோடு மாணவன் பெற்றிருக்கும் அடைவைப் பற்றிய தெளிவும் நமக்குக் கிடைக்கும். இவ்வாறு ஒரு விரிவாக மதிப்பீடு செய்யும் பொருட்டு மொழிப் பாடத்தின் மொழி வளம், மொழி நடை, பாடக் கருத்து போன்றவற்றையெல்லாம் மதிப்பீடு செய்வதற்கு அதற்குத்தகுந்த வினாக்களை மாணவர்களிடம் கொடுக்கப்பட்டு அதன் வழி பெறப்பட்ட செய்திகளை மதிப்பீடு செய்வதாக இவ்வியல் அமையப் பெறுகிறது. 9-ஆம் வகுப்பு மாணவர்களையும், 10-ஆம் மாணவர்களையும் தனித்தனியே மதிப்பீடு செய்யப்பட்டு விரிவான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்ப்பாடநூலின் மொழி நடை

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| எளிமையான மொழி நடை | 13<br>43.33 | 2<br>6.67 | 10<br>33.33 | 5<br>16.67 | 30<br>100.00 |
| எளிமையற்ற மொழி நடை | 5<br>22.73 | 2<br>9.09 | 13<br>59.09 | 2<br>9.09 | 22<br>100.00 |
| சிறப்புத் தமிழ் மொழி நடை | 14<br>58.33 | 3<br>12.50 | 3<br>12.50 | 4<br>16.67 | 24<br>100.00 |
| எதுவுமில்லை | 6<br>42.86 | 2<br>14.29 | 4<br>28.57 | 2<br>14.29 | 14<br>100.00 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 | 90 |
| சராசரி | 42.22 | 10.00 | 33.33 | 14.44 | 100.00 |

விளக்க வரைபடம்




மதிப்பீட்டுக் கருத்து

பாடக் கருத்துக்களை விளக்குவதற்காகப் பயன்படுத்திய மொழியின் நடையை ஆய்வுக்குட்படுத்தும் போது அது மாணவர்களின் கருத்தைக் கொண்டு, அதன் மொழித் தன்மையை மதிப்பிடுகையில் மேற்கண்ட புரிதலுக்கு வரலாம். அதனடிப்படையில் பார்க்கும் போது இருளர் இன மாணர்களின் கருத்து; மற்ற குறும்பர், பணியர், காடர் இன மாணவர்களின் கருத்தைக் காட்டிலும் வேறுபட்டிருப்பதைக் காணலாம்.

இருளர் இன மாணவர்களின் கருத்திற்கிணங்க ஒத்த நிலையில் பணியர் இன மாணவர்கள் பாடக்கருத்தும் மொழி நடையும் எளிமையாக இருப்பதாகத் தமது கருத்தைப் பதிவு செய்கின்றனர். அதனையொட்டி காடர் இன மக்களுக்குக் கருத்தைப் புரிவதில் சங்கடம் இருப்பதாக அவர்களிடமிருந்து 5 சதவீதம் மட்டுமே பதிவாகியுள்ளதை அட்டவணை மூலம் காணலாம். இவையனைத்திலும் வேறுபட்டு தனித்திருப்பது குறும்பர் இன மக்களின் மொழிப் புரிதிறன் பற்றிய கருத்தாகும். இவர்கள் மற்ற பழங்குடி இன மாணவர்களைக் காட்டிலும் பின்தங்கியுள்ளனர் என்பது நமக்கு விளங்குகிறது. ஆகவே, பாடக்கருத்தைப் புரிந்து கொள்ளும் வகையில் இருளர், காடர், பணியர் இன மக்களின் புரிதிறனைக் காட்டிலும் குறும்பர் மாணவனின் புரிதிறன் ஈடுகொடுக்க முடியாமல் இருக்கும் நிலையில் ஆசிரியருக்கான பொறுப்பு அதிகமாகக் குறும்பர் இன மாணவர்களிடம் இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதே நேரத்தில் சிறப்பான நடையில் பாடப் பொருள் அமைந்திருப்பதாக இருளர் இன மாணவர்கள் கூறுகின்றனர். மற்றவர்கள் அனைவரும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் பாடக் கருத்தைத் தெளிவுபடுத்தும் பொருட்டு அதன் வெற்றி ஆசிரியர் கையாளும் மொழியின் நடையை ஒட்டியே கணிக்கப்படுகிறதே தவிர பழங்குடி மாணவர்களின் புரிதலில் ஏற்படும் சவாலில் அல்ல என்ற முடிவுக்கு வரலாம்.

தமிழில் மொழிவளப் பயிற்சி

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வாசித்தல் பயிற்சி | 8 | 1 | 7 | 4 | 20 |
| | 40.00 | 5.00 | 35.00 | 20.00 | 100.00 |
| எழுதுதல் பயிற்சி | 5 | 0 | 7 | 1 | 13 |
| | 38.46 | 0.00 | 53.85 | 7.69 | 100.00 |
| வாசித்தலும் | 25 | 4 | 7 | 7 | 43 |
| எழுதுதலும | 58.14 | 9.30 | 16.28 | 16.28 | 100.00 |
| உண்டான பயிற்சி | 65.79 | 44.44 | 23.33 | 53.85 | 47.78 |
| ஒலி உச்சரிப்புப் | 0 | 1 | 5 | 0 | 6 |
| பயிற்சி | 0.00 | 16.67 | 83.33 | 0.00 | 100.00 |
| ஊடக வழி | 0 | 3 | 4 | 1 | 8 |
| கேட்டல் பயிற்சி | 0.00 | 37.50 | 50.00 | 12.50 | 100.00 |
| **மொத்தம்** | **3,8** | **9** | **30** | **13** | **90** |
| சராசரி | **42.22** | **10.00** | **33.33** | **14.44** | **100.00** |

**விளக்க வரைபடம்**




மதிப்பீட்டுக் கருத்து

மொழிவளப் பயிற்சி மாணவனின் மொழித்திறனை வளர்க்கலாம். இப்பயிற்சியின் மூலம் தான் பழங்குடி மாணவர்கள் பாடநூல் குறித்த கருத்துக்களைச் சிறப்பாக அறிந்து கொள்ள முடியும். இங்கு மொழி வளப்பயிற்சி என்பது இன்றியமையாத ஒன்றாக கருதப்படுகின்றது. மேற்கண்ட ஐந்து நிலைகளிலும் இப்பயிற்சி குறித்த கருத்தடிப்படையில் எளிமையாக இருளர், பனியர் மாணவர்கள் எளிமையாகப் பயிற்சியைச் செய்து முடிப்பதாகவும், காடர், குறும்பர் இன மாணவர்கள் சிரமப் படுவதாகவும் தனது கருத்தைத் தெரிவிக்கின்றனர். காடர், குரும்பர் மாணவர்களுக்குக் கூடுதல் பயிற்சி தேவைப்படுவது விளங்குகிறது.

தமிழ் மொழிப் பயன்பாட்டுச்சூழல்

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டில் பேசும் | 29 | 4 | 12 | 12 | 57 |
| மொழி | 50.88 | 7.02 | 21.05 | 21.05 | 100.00 |
| வெளியில் பேசும் | 2 | 3 | 13 | 1 | 19 |
| மொழி | 10.53 | 15.79 | 68.42 | 5.26 | 100.00 |
| பள்ளியில் | 7 | 2 | 5 | 0 | 14 |
| பேசும் மொழி | 50.00 | 14.29 | 35.71 | 0.00 | 100.00 |
| **மொத்தம்** | **38** | **9** | **30** | **13** | **90** |
| **சராசரி** | **42.22** | **10.00** | **33.33** | **14.44** | **100.00** |

**விளக்க வரைபடம்**




மதிப்பீட்டுக் கருத்து

மொழியைப் பயன்படுத்துவதற்கென சூழல் அமைய வேண்டும். தகவல் பரிமாற்றத்திற்கான மொழிப் பயன்பாடு வேறு, கருத்துப் பரிமாற்றத்திற்கான மொழிப் பயன்பாடு வேறு, வெவ்வேறுபட்ட சூழலில் பயன்படும் மொழி, தனிப்பட்ட பொருண்மை அடையாளத்தைப் பெறுகிறது.

அதனடிப்படையில் பழங்குடி மாணவர்களுக்குத் தமிழ் மொழியைப் பேச்சளவிலோ, எழுத்தளவிலோ பயன்படுத்தும் சூழல் உருவாகும் தேவையைக் கருதிப் பார்க்க வேண்டும். மொழிப் பயன்பாட்டுச் சூழல் ஏதுவாக இருக்கும் பட்சத்தில் மாணவனின் மொழி அறிவு மேம்படும். இங்கே இருளர், குறும்பர் இன மாணவர்கள் தமக்கு மொழியைப் பயன்படுத்தும் நன்றாக சூழல் அமைந்திருப்பதாகக் கூறுகின்றனர்.

அதே நேரத்தில் காடர், பனியர் மாணவர்களுக்கு மொழிப் பயன்பாட்டுத் தேவையான சூழல் அவ்வகையில் அமைவதில்லை என்று கருத்தைத் தெரிவிக்கின்றனர். காடர், பனியர் இன மாணவர்களுக்குத் தமிழ்மொழி பேசும் சூழல் அமையாத காரணத்தால் அவன் தமிழ் மொழி அறிவைப் பெறுவதற்கு கடினமாக இருக்கும் நிலை இதன் மூலம் அறியப்படுகிறது.

தமிழ்ப்பாடநூலில் சொல் கலப்பு

அட்டவனை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பிறமொழிக் | 7 | 1 | 10 | 4 | 22 |
| கலப்பு | 31.82 | 4.55 | 45.45 | 18.18 | 100.00 |
| பிறமொழிச் சொல் | 16 | 5 | 12 | 4 | 37 |
| கலப்பு | 43.24 | 13.51 | 32.43 | 10.81 | 100.00 |
| பிறமொழிக் கலப்பு | 0 | 2 | 3 | 2 | 7 |
| இல்லை | 0.00 | 28.57 | 42.86 | 28.57 | 100.00 |
| இவை அனைத்தும் | 15 | 1 | 5 | 3 | 24 |
| | 62.50 | 4.17 | 20.83 | 12.50 | 100.00 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 | 90 |
| சராசரி | 42.22 | 10.00 | 33.33 | 14.44 | 100.00 |

விளக்க வரைபடம்




## மதிப்பீட்டுக் கருத்து

தாய் மொழியோடு அயல் மொழியைக் கலந்து பேசும் வழக்கம், பொதுவாகக் காணப்பட்டாலும் அது பழங்குடி இன மாணவர்களுக்குப் பொருந்தாது. ஏனெனில் அவர்கள் பயனிப்பது, இடம் விட்டு வேறு இடம் நகரும் வாய்ப்பு அவ்வளவாக அமையாது. இடம் விட்டு இடம் பெயரும் போது மொழியில் கொண்டு கொடுக்கும் வாய்ப்பு ஏற்படும். அவ்வாறு கொண்டும் கொடுத்தும் பயன்பாட்டிலிருக்கும். மொழியில் கலப்பு என்பது

இயல்பே. அத்தகைய சூழல் அமையாத பட்சத்தில் பழங்குடி மாணவர்கள் எதிர் கொள்ளும் சிக்கல், அயல் மொழி இடையீடு, இது பயிற்று மொழியிலிருந்தோ, கற்கும் மொழியிலிருந்தோ பெறுவதாகும். அவ்வகையில் இருளர், பணியர் இன மாணவர்கள் மொழிக்கலப்பு அதிகம் இருப்பதாக உணர்கின்றனர். காடர், குரும்பர் இன மாணவர்களின் கருத்துப்படி மொழிக் கலப்பு அதிகம் இல்லை என்ற முரண்பாட்டு நிலையையும் காண்கிறோம். பிறமொழிச்சொல் கலப்பு பற்றி மாணவர்களிடையே இரு வேறு கருத்துகள் நிலவிய போதும் மொழிக் கலப்பற்ற பாடப்பொருள் பழங்குடி இன மாணவர்களின் கற்றலுக்கு எளிமையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் மொழிப் பாடநூலில் தேவையற்ற பகுதி

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| செய்யுள் | 5 | 0 | 2 | 2 | 9 |
| | 55.56 | 0.00 | 22.22 | 22.22 | 100.00 |
| உரைநடை | 3 | 2 | 4 | 1 | 10 |
| | 30.00 | 20.00 | 40.00 | 10.00 | 100.00 |
| கதைப்பகுதி | 5 | 2 | 8 | 2 | 17 |
| | 29.41 | 11.76 | 47.06 | 11.76 | 100.00 |
| தேவையற்றப் | 25 | 5 | 16 | 8 | 54 |
| பகுதிகள் இல்லை | 46.30 | 9.26 | 29.63 | 14.81 | 100.00 |
| **மொத்தம்** | **38** | **9** | **30** | **13** | **90** |
| **சராசரிசராசரி** | **42.22** | **10.00** | **33.33** | **14.44** | **100.00** |

விளக்க வரைபடம்



**மதிப்பீட்டுக் கருத்து**

பாடத்திட்டத்தை வகுக்கும் பொழுது ஒவ்வொரு வகுப்பு நிலைக்குத் தகுந்தாற் போல பாடப்பொருளை அமைப்பது வரன் முறையாகும். ஆனால் அவ்வாறு தெரிவு செய்யப்படும் பாடப்பொருள் மாணவர்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு உணரப்படுகிறதா என்பது மாணவர்களின் புரிதிறனைப் பொறுத்து அமைவனவாகும். எனவே பழங்குடி மாணவனைப் பொறுத்த வரை தேவைப்படும் பொருள் என்பது மாண்வனின் புரிதிறனைப் பொருத்தே அமைகிறது. அதன் படி பெறப்பட்ட கருத்தில் இருளர், பணியர் இன மாணவர்களில் பெரும்பாலோர், தேவையற்ற பகுதிகள் பாடநூலில் இடம்பெற்றிருப்பதாகக் கூறுகின்றனர். காடர், குறும்பர் இன மாணவர்கள் சற்று ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது. தேவையற்ற பகுதிகள் இருப்பினும் கற்றலுக்குக் கடினமாக இருப்பதாகவோ, முற்றிலும் தேவையில்லை என்று ஒதுக்குவதற்கோ அங்கே முற்றிலுமாக இடம் இல்லை.

**பேச்சில் பிழை உணர்தல்**

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சொல் அளவிலா | 17 | 3 | 11 | 4 | 35 |
| | 48.57 | 8.57 | 31.43 | 11.43 | 100.00 |
| ஒலி அளவிலா | 4 | 1 | 8 | 5 | 18 |
| | 22.22 | 5.56 | 44.44 | 27.78 | 100.00 |
| தொடர் அளவிலா | 14 | 4 | 7 | 0 | 25 |
| | 56.00 | 16.00 | 28.00 | 0.00 | 100.00 |
| பொருள் அளவிலா | 3 | 1 | 4 | 4 | 12 |
| | 25.00 | 8.33 | 33.33 | 33.33 | 100.00 |
| **மொத்தம்** | **38** | **9** | **30** | **13** | **90** |
| **சராசரி** | **42.22** | **10.00** | **33.33** | **14.44** | **100.00** |

**விளக்க வரைபடம்**



**மதிப்பீட்டுக் கருத்து**

இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்கும் பழங்குடி மாணவர்கள் ஒவ்வொரு வரும் தனித்தனி மொழியினைப் பேசுகின்றனர். அப்போது அவர்கள் தமிழைப் பேசும் போதும், எழுதும் போதும் சொல், தொடர், ஒலி, பொருள் அளவில் இவர்கள் கற்கும் முறை. வேறுபடுகின்றது. இருந்த போதிலும் ஒரு சில மாணவர்கள் இம்முறையான பயிற்சிகளில் சிறந்தும் விளங்குகின்றனர். இருளர் இன மாணவர்கள் சொல்லளவில் அதிகம் பிழை உணர்வதாகக் கூறுகின்றனர். ஒளி அளவில் சற்றுக் குறைவாகவே பேச்சில் ஒலிப்பிழை உணர்கின்றனர். ஆனால் தொடரளவில் மிக அதிகமாகப் பிழை செய்வதான கருத்தை அவர்கள் முன்வைக்கின்றனர். பொருளளவில் ஒலி அளவிற்கு நிகராகப் பொருளைப் புரிந்து கொள்வதில் பின்தங்கிய நிலையில் உள்ளனர் என்பதை நம்மால் அறியமுடிகிறது.

தமிழ்ப் பாடநூலில் மொழி மாற்றம் அதிகம் காணப்படுவது அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பேச்சு வழக்கில் | 29 | 4 | 15 | 11 | 59 |
| | 49.15 | 6.78 | 25.42 | 18.64 | 100.00 |
| எழுத்து வழக்கில் | 1 | 4 | 9 | 1 | 15 |
| | 6.67 | 26.67 | 60.00 | 6.67 | 100.00 |
| சொல் வழக்கில் | 6 | 0 | 3 | 1 | 10 |
| | 60.00 | 0.00 | 30.00 | 10.00 | 100.00 |
| மொழி நடை வழக்கில் | 2 | 1 | 3 | 0 | 6 |
| | 33.33 | 16.67 | 50.00 | 0.00 | 100.00 |
| **மொத்தம்** | **38** | **9** | **30** | **13** | **90** |
| **சராசரி** | **42.22** | **10.00** | **33.33** | **14.44** | **100.00** |

**விளக்க வரைபடம்**



## மதிப்பீட்டுக் கருத்து

பாட நூலில் இடம்பெறும் மொழியைப் பயன்படுத்துவது சில சூழலில் இயல்பாகிறது. பாடப்பொருளில் பயன்படுத்தப்படும் மொழி நடையில் பிறமொழிக் கலப்போடு இவ்வகையில் ஏதேனும் மாற்றம் நிகழ்ந்திருப்பதை கண்டுணர்ந்ததாக சிலமாணவர்கள் கூறியிருக் கிறார்கள். அதனடிப்படையில், நான்கு நிலைகளில் பிரிக்கப்பட்டு மாணவர்களின் கருத்தைப் பதிவு செய்யப்பட்டன.

இருளர் இன மாணவர்களும், பனியர் இன மாணவர்களும் பேச்சு வழக்கிலும் பொதுவாக மொழி நடை வழக்கிலும் மொழிக் கலப்பும், மாற்றமும் இருப்பதாகக் கூறுகின்றனர். மற்ற இரு பிரிவினரிடமும் அதற்கான கருத்தை அவ்வகையாகக் கிடைக்கப்பெறவில்லை. முறையாக உள்வாங்கிக் கொண்டு கற்கும் மாணவர்களுக்கு இம்மாதிரியான மாற்றல் நிகழ்வுகளைக் கண்டறிய முடியும் கற்கும் நிலையில் கடினமாக எண்ணக் கூடிய மாணவர்களுக்கு இவற்றைக் கண்டறிவது கடினம். மொழி மாற்றல் நிகழ்வென்பது பொது நிலை மாணவர்களுக்குக் கூடாது என்றால், பழங்குடி மாணவர்களுக்கான பாடநூலில் முற்றிலும் கூடாது. அவ்வாறு இடம்பெற்றால் இது அவர்களுக்குக் கூடுதல் மொழிச் சிக்கலே.

## தமிழ்ப் பாடநூலில் கடினமான பகுதி

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| செய்யுள் பகுதி | 4 | 1 | 10 | 3 | 18 |
| | 22.22 | 5.56 | 55.56 | 16.67 | 100.00 |
| உரைநடைப் பகுதி | 2 | 0 | 5 | 0 | 7 |
| | 28.57 | 0.00 | 71.43 | 0.00 | 100.00 |
| இலக்கணப் பகுதி | 26 | 1 | 7 | 5 | 39 |
| | 66.67 | 2.56 | 17.95 | 12.82 | 100.00 |
| மனப்பாடப்பகுதி | 3 | 3 | 4 | 2 | 12 |
| | 25.00 | 25.00 | 33.33 | 16.67 | 100.00 |
| எல்லாப் பகுதிகளும் | 3 | 4 | 4 | 3 | 14 |
| | 21.43 | 28.57 | 28.57 | 21.43 | 100.00 |
| **மொத்தம்** | **38** | **9** | **30** | **13** | **90** |
| **சராசரி** | **42.22** | **10.00** | **33.33** | **14.44** | **100.00** |

**விளக்க வரைபடம்**




மதிப்பீட்டுக் கருத்து

மொழிப் பாடத்தைக் கற்பதில் பழங்குடி மாணவர்கள் அநேக சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அதற்குக் காரணமாகப் பாடப்பொருளில் சில பகுதிகள் கடினமாக இருப்பதைச் சொல்லாம். அப்படி கடினமான பகுதிகள் எந்த அளவில் அதிகமாகப் பழங்குடி மாணவர்களால் உணரப்படுகிறது என்பதைக் காண்கையில் உரைநடைப் பகுதி மிகச் சுலபமாகவும், செய்யுள்பகுதி சுலபமாக இருப்பதாகவும், இலக்கணப் பகுதி கடினமாக இருப்பதாகவும், மனப்பாடப்பகுதியும் நிகராக ஓராளவிற்குச் சுலபமாக இருப்பதாக வரைபடம் விளக்குகிறது. பணியர் இன மாணவர்களைப் பொருத்தவரை எல்லாப் பகுதிகளையும் புரிவதற்குச் சராசரி நிலையே காண்பதாக தனது கருத்தைத் தெரிவிக்கின்றனர். குரும்பர் இன மாணவர்கள் செய்யுட்பகுதி, இலக்கணப் பகுதி, உரைநடைப்பகுதி இம்மூன்றையும் கடினமாகவே பயில்கின்றனர். மனப்பாடப்பகுதி மட்டும் சுலபமாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். பொதுவாகச் சிலர் சராசரிக்குக் கீழ் பின் தங்கிய நிலையில் உள்ளனர். காடர் இன மாணவர்கள் எல்லா பாடப்பகுதிகளையும் கடினமாகவே கருதுகின்றனர். இருளர் இன மாணவர்கள் இலக்கணப் பகுதி மிகச்சுலபமாக இருப்பதாகவும், செய்யுட்பகுதி, மனப்பாடப்பகுதி, உரைநடைப் பகுதி ஆகிய மூன்று பகுதிகளும் ஏறக்குறைய சரிநிகராக இருப்பதாகவும் உணர்கின்றனர்.

**தமிழ்ப்பாடம் கற்றலில் சிறப்புப் பயிற்சி மேற்கொள்வது**

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| உண்டு | 9 | 3 | 1 | 4 | 17 |
| | 52.94 | 17.65 | 5.88 | 23.53 | 100.00 |
| இல்லை | 4 | 4 | 5 | 0 | 13 |
| | 30.77 | 30.77 | 38.46 | 0.00 | 100.00 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 | 30 |
| சராசரி | 43.33 | 23.33 | 20.00 | 13.33 | 100.00 |

**விளக்க வரைபடம்**




**மதிப்பீட்டுக் கருத்து**

மாணவர்களின் கற்றலை மேம்படுத்தச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. பழங்குடி மாணவனின் கற்றல் சவலாக இருப்பினும், மேலும் அவனது கற்றலுக்குத் துணைபுரியும் சிறப்பு வகுப்பு மூலம் பல்வேறு நிலைகளில் ஆசிரியர் அவர்களைக் கையாளும் போது மாணவர்களுக்குக் கடினமாக நினைக்கும் பாடப் பகுதிகளை எளிமையான முறையில் வழங்க உந்துதலாக அமையும். இதனால் ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையே மிகுந்த நெருக்கத்தைக் காணலாம். இருளர், இன மாணவர்களை விட மற்றைய மாணவர்கள் அனைவரும் சிறப்புப் பயிற்சியே வழங்குவதில்லை என்கின்றனர். இச்சூழலில், ஆசிரியர்கள் கட்டாயம் மொழிப் பயிற்சியை சிறப்பாக மேற்கொள்ள வேண்டியது தேவையானதாகும்.

**தமிழ்ப்பாடநூல் கற்றலில் எளிமையான பகுதி**

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| செய்யுள் | 9 | 0 | 2 | 1 | 12 |
| | 75.00 | 0.00 | 16.67 | 8.33 | 100.00 |
| உரைநடை | 23 | 5 | 10 | 8 | 46 |
| | 50.00 | 10.87 | 21.74 | 17.39 | 100.00 |
| இலக்கணப் பகுதி | 2 | 3 | 12 | 1 | 18 |
| | 11.11 | 16.67 | 66.67 | 5.56 | 100.00 |
| மனப்பாடப்பகுதி | 4 | 1 | 6 | 3 | 14 |
| | 28.57 | 7.14 | 42.86 | 21.43 | 100.00 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 | 90 |
| சராசரி | 42.22 | 10.00 | 33.33 | 14.44 | 100.00 |

**விளக்க வரைபடம்**




**மதிப்பீட்டுக் கருத்து**

மொழிப்பாடநூலில் எந்தப் பாடப் பொருளைக் கற்பதற்கு எளிமையாகக் கருதுகிறார்கள் எனக் காண்கையில் செய்யுள்பகுதியும், உரைநடைப்பகுதியும் இருளர் இன மாணவர்களுக்கு எளிதாக இருப்பதாகக் கூறுகின்றனர். அதனைத் தொடர்ந்து இலக்கணப் பகுதியும் அவர்களுக்கு எளிமையானதாகவே இருப்பதாகவும் கருத்தைத் தெரிவிக்கின்றனர். பனியர், இன மாணவர்கள் மனப்பாடப்பகுதி மட்டும் மிகவும் எளிமையாக இருப்பதாகக் கூறுகின்றனர். குறும்பர் இன மாணவர்களையும், காடர் இன மாணவர்களையும் பொறுத்தவரை இரு பிரிவினரும் எல்லாப் பாடப்பகுதிகளும் சற்று கடினமாக இருப்பதாகவே எண்ணுகின்றனர்.

**தமிழ்ப் பாடநூலில் கற்றல் நிலைப்பகுதி**

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மனப்பாடம்செய்யத் தேவையுள்ளது | 30<br>55.56 | 3<br>5.56 | 10<br>18.52 | 11<br>20.37 | 54<br>100.00 |
| மனப்பாடம்செய்யத் தேவையில்லை | 8<br>22.22 | 6<br>16.67 | 20<br>55.56 | 2<br>5.56 | 36<br>100.00 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 | 90 |
| சராசரி | 42.22 | 10.00 | 33.33 | 14.44 | 100.00 |

**விளக்க வரைபடம்**




**மதிப்பீட்டுக் கருத்து**

மனப்பாடம் செய்யும் பகுதியையும், பயிற்சி மேற்கொள்ளும் பகுதியையும் விடுத்து மற்ற பகுதிகளை நேரடியாகக் கற்கவேண்டிய பகுதிகளாகக் கொள்ளலாம். இதில் வினா விடைப்பகுதி, அருஞ்சொற் பொருள் விளக்கப்பகுதி, கடினமாக இருப்பினும், புரிதலுக்காக அப்பகுதியையும் சேர்த்துப் பொருள் கொள்ளலாம். இப்பகுதிகளை மனதில் பதிய வைத்துக் கொள்ளும் அதாவது நினைவிற்கு எடுத்துச் செல்லும் பகுதிகளையும், நினைவில் வைத்துக்கொள்ளத் தேவை யில்லை என்பன போல கருத்தைப் பெறுவதற்கான வினாவில் இருளர் இன மாணவர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டியவை என்று அநேக பாடப்பகுதிகளைக் கூறுகின்றனர். அதற்கடுத்தாற் போல், பணியரும், காடரும் ஒருமித்த கருத்தைப் பதிவு செய்கின்றனர். குறும்பரைப் பொருத்தவரை அவர்களிடமிருந்து அவ்வளவாகக் கருத்தைப்பெற முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் பொதுவாகவே, கற்றல் நிலையில் பின் தங்கியிருப்பதுவே இதற்கு முதன்மைக் காரணமாகும்.

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பேச்சு வழக்கில் | 7 | 0 | 13 | 3 | 23 |
| | 30.43 | 0.00 | 56.52 | 13.04 | 100.00 |
| எழுத்து வழக்கில் | 7 | 2 | 7 | 1 | 17 |
| | 41.18 | 11.76 | 41.18 | 5.88 | 100.00 |
| உச்சரிப்பு வழக்கில் | 3 | 1 | 5 | 1 | 10 |
| | 30.00 | 10.00 | 50.00 | 10.00 | 100.00 |
| அனைத்திலும் எளிமையாக | 21 | 6 | 5 | 8 | 40 |
| உள்ளதா | 52.50 | 15.00 | 12.50 | 20.00 | 100.00 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 | 90 |
| சராசரி | 42.22 | 10.00 | 33.33 | 14.44 | 100.00 |

விளக்க வரைபடம்




மதிப்பீட்டுக் கருத்து

தமிழ் மொழிப்பாடம் என்பதால் மாணவனின் கற்றலுக்கும், கற்றதை நினைவில் வைத்துக் கொண்டு கருத்தைப் புரிவதற்கும் பாடப்பொருளை எடுத்துரைக்கும் மொழியில் எளிமையிருக்க வேண்டும். பழங்குடி மாணவர்களின் புரிதல் என்பது, முழுக்க முழுக்க மொழி நடையைப் பின்பற்றியே அமைகிறது. மொழி நடையில், பேச்சு வழக்கில் எளிமையிருக்கும், எழுத்து வழக்கில் எளிமையிருக்கும். உச்சரிப்பு வழக்கிலும் எளிமையிருப்பது ஒரு சில நேரங்களில் காண முடிகிறது. இங்கு இருளர் இன மாணவர்கள் மொழிப் பயன்பாட்டில் எல்லா நிலைகளிலும் எளிமையாக இருப்பதாக எண்ணுகின்றனர்.

பணியர் இன மாணவர்கள் பேச்சு வழக்கில் மிக எளிமையிருப்பதாகவும், பிறகு, உச்சரிப்பு வழக்கில் அவர்கள் மொழிப் பயன்பாடு எளிதாக இருப்பதாகவும், அதன் பின் எழுத்து வழக்கில் எளிமையிருப்பதாகவும் கூறுகின்றனர். குறும்பர், காடர் இன மாணவர்களைப் பொருத்தவரை இரு இன மாணவர்களும் மொழிப் பயன்பாடு பற்றிய நிகரான கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

**பள்ளியில் நடைபெறும் இலக்கியப் போட்டிகள்**

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பேச்சுப்போட்டி | 4 | 1 | 7 | 1 | 13 |
| | 30.77 | 7.69 | 53.85 | 7.69 | 100.00 |
| கட்டுரைப்போட்டி | 15 | 3 | 14 | 6 | 38 |
| | 39.47 | 7.89 | 36.84 | 15.79 | 100.00 |
| பாட்டுப்போட்டி | 15 | 3 | 5 | 0 | 23 |
| | 65.22 | 13.04 | 21.74 | 0.00 | 100.00 |
| நாடகம் மற்றும் | 4 | 2 | 4 | 6 | 16 |
| நாட்டியப் போட்டி | 25.00 | 12.50 | 25.00 | 37.50 | 100.00 |
| **மொத்தம்** | **38** | **9** | **30** | **13** | **90** |
| **சராசரி** | **42.22** | **10.00** | **33.33** | **14.44** | **100.00** |

விளக்க வரைபடம்




**மதிப்பீட்டுக் கருத்து**

பள்ளிகளில் தமிழ்ப்பாடம் கற்றலுக்குத் துணைசெய்யும் வகையில் கற்பித்தலைத் தொடர்ந்து மேற்கொள்ளும் நிகழ்வுகளையும் கணக்கில் கொண்டு கருதிப் பார்க்க வேண்டும். அந்த

வகையில் பள்ளிகளில் மாணவர்களுக்காக நடத்தப்படும் இலக்கியம் சார்ந்த போட்டிகளைப் பற்றிக் கருதிப் பார்க்கையில் இருளர் இன மாணவர்கள் கட்டுரைப் போட்டிகள் அதிகம் நடைபெறுவதால் அவர்களின் கற்றல் நிலை மேம்படுவதாகவும் அதோடு மற்ற போட்டிகளும் முறையே பயனளிப்பதாகவும் கூறுகின்றனர். அதே போல பனியர் இன மாணவர்களும் நாடக நாட்டியப் போட்டிகள் நடைபெறுவதன் மூலம் பயனடைவதாகக் கூறுகின்றனர். காடர் இன மாணவர்கள் நாடக நாட்டியப் போட்டி மட்டும் அதிகம் நடைபெறுவதாகவும், பேச்சுப் போட்டி முற்றிலும் நடைபெறுவதில்லையெனவும் கூறுகின்றனர். குறும்பர் இன மாணவர்கள் சராசரி என்ற நிலையில் உள்ளனர்.

**தமிழ் கற்றலுக்கான கால அளவில் முதன்மைத்துவம்**

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டில் | 2 | 3 | 2 | 0 | 7 |
| | 28.57 | 42.86 | 28.57 | 0.00 | 100.00 |
| பள்ளியில் | 25 | 1 | 6 | 2 | 34 |
| | 73.53 | 2.94 | 17.65 | 5.88 | 100.00 |
| பொதுவாக | 5 | 3 | 9 | 6 | 23 |
| | 21.74 | 13.04 | 39.13 | 26.09 | 100.00 |
| கால அளவில்லை | 6 | 2 | 13 | 5 | 26 |
| | 23.08 | 7.69 | 50.00 | 19.23 | 100.00 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 | 90 |
| சராசரி | 42.22 | 10.00 | 33.33 | 14.44 | 100.00 |

**விளக்க வரைபடம்**



**மதிப்பீட்டுக் கருத்து**

குறிப்பிட்ட பாடப்பகுதியைப் புரிவதற்கு அதற்காகச் செலவிடும் கால அளவைக் கருதிப் பார்க்க வேண்டும். இவ்வகையில் பழங்குடி மாணவர்கள் மொழிப் பாடத்தைக் கற்பதற்குச் செலவிடும் கால அளவைப் பற்றிப் பார்ப்போமேயானால் மாணவர்களுக்குத் தமிழ் கற்றலில் எந்தெந்த பாடப்பகுதிக்கு அதிக நேரம் செலவிட வேண்டும் என்று வழிகாட்டி, கற்றல் திறனை மேம்படச் செய்ய வேண்டும் என்பதனைத் தெரிவிப்பதாக இந்த வரைபட அட்டவணை அமைகின்றது.

மாணவர்கள் அதிகமாகப் பங்கேற்கும் இலக்கியப் போட்டிகள்

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பேச்சுப்போட்டி | 5 | 3 | 10 | 1 | 19 |
| | 26.32 | 15.79 | 52.63 | 5.26 | 100.00 |
| கட்டுரைப்போட்டி | 7 | 3 | 9 | 4 | 23 |
| | 30.43 | 13.04 | 39.13 | 17.39 | 100.00 |
| கையெழுத்துப் போட்டி | 8 | 0 | 6 | 5 | 19 |
| | 42.11 | 0.00 | 31.58 | 26.32 | 100.00 |
| நாடகப்போட்டி | 4 | 0 | 0 | 1 | 5 |
| | 80.00 | 0.00 | 0.00 | 20.00 | 100.00 |
| கவிதைப்போட்டி | 14 | 3 | 5 | 2 | 24 |
| | 58.33 | 12.50 | 20.83 | 8.33 | 100.00 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 | 90 |
| சராசரி | 42.22 | 10.00 | 33.33 | 14.44 | 100.00 |

விளக்க வரைபடம்



## மதிப்பீட்டுக் கருத்து

இலக்கியப் போட்டிகளை நடத்துவதன் மூலம் மாணவர்களின் கற்றல் திறனை மேலும் வளர்க்கலாம். பழங்குடி இன மாணவர்களுக்காக மேற்கொள்ளும் இதுபோன்ற பயிற்சிகளை ஊக்கப்படுத்துவது தேவையான ஒன்றாகும். நடைமுறையில் இருக்கும் பயிற்சியினை ஆய்வு செய்யும் பொருட்டு பழங்குடி இன மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்தில் இருளர், பணியர் மாணவர்கள் தாங்கள் அதிகமாக இலக்கியப் போட்டிகளில் பங்குபெறுகின்றோம் என்றும் மற்ற மாணவர்கள் பங்கு பெறுவதில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். மற்ற பழங்குடி மாணவர்களைப் போல்பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களையும் இலக்கியப் போட்டிகளில் பங்கு பெறுவதற்கு ஆசிரியர்கள் ஊக்கமளிக்க வேண்டும்.

## பள்ளியில் கருத்தரங்கு நிகழ்வது

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வாரக்கருத்தரங்கு | 0 | 2 | 1 | 2 | 5 |
| | 0.00 | 40.00 | 20.00 | 40.00 | 100.00 |
| மாதக்கருத்தரங்கு | 14 | 1 | 11 | 2 | 28 |
| | 50.00 | 3.57 | 39.29 | 7.14 | 100.00 |
| நாள்தோறும் | 10 | 0 | 6 | 5 | 21 |
| கருத்தரங்கு | 47.62 | 0.00 | 28.57 | 23.81 | 100.00 |
| கருத்தரங்கு | 14 | 6 | 12 | 4 | 36 |
| நடைபெறுவதில்லை | 38.89 | 16.67 | 33.33 | 11.11 | 100.00 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 | 90 |
| சராசரி | 42.22 | 10.00 | 33.33 | 14.44 | 100.00 |

## விளக்க வரைபடம்



**மதிப்பீட்டுக் கருத்து**

தமிழ்மொழி அறிவை வளப்படுத்துவதற்கு, மாணவர்களின் புரிதலுக்குட்பட்டு அவ்வப்போது கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம் மாணவர்களின் மொழி அறிவை வளப்படுத்தலாம். இந்த நோக்கில் மாணவர்களிடையே கருத்தரங்கு பற்றிய விழிப்புணர்வை சோதிக்கும் பொருட்டு திரட்டிய தரவில் காடர், குறும்பர் மாணவர்களின் கருத்து மற்ற இன மாணவர்களின் கருத்தைவிட சற்று வேறுபடுகிறது. இங்கு இருளர், பனியர் மாணவர்கள் அனைத்து நிலைகளிலும் கருத்தரங்கம் நிகழ்வதாகக் கருதுகின்றனர். இருப்பினும் பொதுவாகவே, கருத்தரங்கத்தைப் பற்றிய விழிப்புணர்வு அனைவரிடமும் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பள்ளியில் தமிழ் இலக்கிய மன்றம் நிகழ்வது

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தினந்தோறும் | 2 | 7 | 7 | 1 | 17 |
| | 11.76 | 41.18 | 41.18 | 5.88 | 100.00 |
| வாரத்தில்ஒரு நாள் | 2 | 1 | 23 | 3 | 29 |
| | 6.90 | 3.45 | 79.31 | 10.34 | 100.00 |
| மாதம் ஒரு முறை | 29 | 0 | 0 | 5 | 34 |
| | 85.29 | 0.00 | 0.00 | 14.71 | 100.00 |
| நடைபெறுவதில்லை | 5 | 1 | 0 | 4 | 10 |
| | 50.00 | 10.00 | 0.00 | 40.00 | 100.00 |
| மொத்தம் | 38 | 9 | 30 | 13 | 90 |
| சராசரி | 42.22 | 10.00 | 33.33 | 14.44 | 100.00 |

விளக்க வரைபடம்



## மதிப்பீட்டுக் கருத்து

மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் பாடநூல் குறித்த கற்பித்தலை அளிப்பதுடன் அதனோடு சேர்த்து மொழி அறிவை ஊக்கப்படுத்துமளவிற்கு தமிழ் இலக்கிய மன்றங்கள் மூலம் மொழிப் பயிற்சியை நடத்தினால் அவர்களின் பேச்சாற்றலையும் சிறந்த மொழித் திறனையும் வளர்த்துக் கொள்ள முடியும். இங்கு அட்டவணை விபரம் குறும்பர், காடர் மாணவர்கள் இலக்கிய மன்றம் நடை பெறுவதாக கூறியதையும் இருளர், பணியர் மாணவர்கள் எப்போதாவது நடை பெறுவதாகக் கூறுவதாகவும் காட்டுகிறது.

தமிழ்மொழிப்பாடநூல் கருத்து மதிப்பீடு (10ஆம் வகுப்பு)

தமிழ்ப்பாடநூலின் மொழி நடை

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| எளிமையான | 5 | 5 | 0 | 3 | 13 |
| மொழி நடை | 38.46 | 38.46 | 0.00 | 23.08 | 100.00 |
| எளிமையான | 0 | 0 | 4 | 0 | 4 |
| மொழி நடை | 0.00 | 0.00 | 100.0 | 0.00 | 100.00 |
| சிறப்புத் தமிழ் | 6 | 2 | 1 | 1 | 10 |
| மொழி நடை | 60.00 | 20.00 | 10.00 | 10.00 | 100.00 |
| எதுவுமில்லை | 2 | 0 | 1 | 0 | 3 |
| | 66.67 | 0.00 | 33.33 | 0.00 | 100.00 |
| **மொத்தம்** | **13** | **7** | **6** | **4** | **30** |
| **சராசரி** | **43.33** | **23.33** | **20.00** | **13.33** | **100.00** |

விளக்க வரைபடம்



## மதிப்பீட்டுக் கருத்து

மாணவர்களிடையே மொழிநடை குறித்த கருத்துக் கேட்டலில் இருளர், குறும்பர் மாணவர்களின் கருத்து மற்ற இரு பழங்குடி மாணவர்களின் கருத்தை விட சிறப்பாக அமைந்துள்ளதை காண முடிகின்றது. பணியர், காடர் மாணவர்கள் பாடநூலின் மொழித் திறன் குறித்த புரிதல் திறனில் அவர்களுக்கு சிக்கல் உள்ளது என்பதனை இதன் வழி அறிய முடிகின்றது.

பாடக் கருத்தைப் புரிந்து கொள்ளும் வகையில் இருளர், குறும்பர் மாணவர்கள் புரிதல் திறனைக் காட்டிலும் காடர், பணியர் மாணவர்களின் புரிதிறன் ஈடுகொடுக்க முடியாத நிலையில் உள்ளது.

ஆசிரியர்களுக்கான பொறுப்பு அதிகமாக காடர், பணியர் மாணவர்களிடம் இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம் என்பதனை இந்த வரைபடம் விளக்குகிறது.

தமிழில் மொழிவளப் பயிற்சி

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வாசித்தல் பயிற்சி | 4 | 0 | 0 | 1 | 5 |
| | 80.00 | 0.00 | 0.00 | 20.00 | 100.00 |
| எழுதுதல் பயிற்சி | 1 | 0 | 1 | 0 | 2 |
| | 50.00 | 0.00 | 50.00 | 0.00 | 100.00 |
| வாசித்தலுக்கும் எழுதுதலுக்கும் | 6 | 4 | 1 | 3 | 14 |
| உண்டான பயிற்சி | 42.86 | 28.57 | 7.14 | 21.43 | 100.00 |
| ஒலி உச்சரிப்புப் | 1 | 0 | 2 | 0 | 3 |
| பயிற்சி | 33.33 | 0.00 | 66.67 | 0.00 | 100.00 |
| ஊடக வழி | 1 | 3 | 2 | 0 | 6 |
| கேட்டல் பயிற்சி | 16.67 | 50.00 | 33.33 | 0.00 | 100.00 |
| **மொத்தம்** | **13** | **7** | **6** | **4** | **30** |
| சராசரி | **43.33** | **23.33** | **20.00** | **13.33** | **100.00** |

விளக்க வரைபடம்




மதிப்பீட்டுக் கருத்து

மொழிவளப்பயிற்சி மாணவனின் மொழித் திறனை வளர்க்கலாம். இப்பயிற்சியின் மூலம் தான் பழங்குடி மாணவர்கள் பாடநூல் குறித்த கருத்துக்களைச் சிறப்பாக அறிந்து கொள்ள முடியும். இங்கு, மொழி வளப்பயிற்சி என்பது இன்றியமையாத ஒன்றாக கருதப்படுகின்றது. இப்பயிற்சி குறித்த கருத்தடிப்படையில் இருளர், குறும்பர் மாணவர்கள் மொழிவளப் பயிற்சி என்பது தரவடிப்படையில் எளிமையாக இருப்பதாகவும், பணியர், காடர் மாணவர்கள் அவ்வளவு எளிமையாக இல்லை என்றும் குறிப்பிடுகின்றனர். எனவே மற்ற மாணவர்களை விட பணியர், காடர் மாணவர்களுக்குத் தமிழ் மொழிவளப் பயிற்சியில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. இருளர், குறும்பர் மாணவர்கள் எளிமையாகப் பயிற்சியைச் செய்து முடிப்பதாகவும் பணியர், காடர் இன மாணவர்கள் சிரமப்படுவதாகவும் தனது கருத்தைத் தெரிவிக்கின்றனர். பணியர், காடர் மாணவர்களுக்குக் கூடுதல் மொழிவளப் பயிற்சி மேலும் தேவைப்படுவதை விளங்கமுடிகிறது.

மொழி பயன்பாட்டுச் சூழல்

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டில் பேசும் | 8 | 5 | 0 | 3 | 16 |
| மொழி | 50.00 | 31.25 | 0.00 | 18.75 | 100.00 |
| வெளியில் பேசும் | 2 | 1 | 4 | 0 | 7 |
| மொழி | 28.57 | 14.29 | 57.14 | 0.00 | 100.00 |
| பள்ளியில் பேசும் | 3 | 1 | 2 | 1 | 7 |
| மொழி | 42.86 | 14.29 | 28.57 | 14.29 | 100.00 |
| **மொத்தம்** | **13** | **7** | **6** | **4** | **30** |
| **சராசரி** | **43.33** | **23.33** | **20.00** | **13.33** | **100.00** |

**விளக்க வரைபடம்**




## மதிப்பீட்டுக் கருத்து

மொழிப்பயன்பாட்டுச் சூழல் தான் படிக்கும் மாணவனை ஒரு நல்ல கல்வியாளனாக மாற்றுகிறது. அதன் அடிப்படையில் அவன் பல்வேறு நிலைகளில் சிறந்து விளங்க முடிகின்றது. பாடநூல் கற்றலில் இங் கு மொழிப்பயன் பாட்டுச் சூழல் என்பது இன்றியமையாததாகின்றது. பாடநூலின் மொழிப் பயன்பாட்டுச் சூழல் குறித்து மாணவர்களிடையே கருத்து கேட்டலில், இருளர், குறும்பர், பணியர் மாணவர்களின் கருத்து மற்ற பழங்குடி மாணவர்களின் கருத்திற்கு ஈடுசெய்ய முடியாத அளவிற்கு பின்தங்கியுள்ளதை அட்டவணை குறிப்பிடுகின்றது. காடர் மாணவர்களுக்கு மொழிப் பயன்பாட்டுச் சூழல் என்பன அமையாத காரணத்தால் தமிழ் மொழி அறிவைப் பெறுவதற்குக் கடினமாக இருக்கும் நிலைகளையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

## தமிழ்ப்பாடநூலில் சொல் கலப்பு

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பிற மொழிக் கலப்பு | 5 | 3 | 2 | 4 | 14 |
| | 35.71 | 21.43 | 14.29 | 28.57 | 100.00 |
| பிறமொழிச் சொல் | 4 | 0 | 3 | 0 | 7 |
| கலப்பு | 57.14 | 0.00 | 42.86 | 0.00 | 100.00 |
| பிறமொழிக் கலப்பு | 3 | 4 | 0 | 0 | 7 |
| இல்லை | 42.86 | 57.14 | 0.00 | 0.00 | 100.00 |
| இவை அனைத்தும் | 1 | 0 | 1 | 0 | 2 |
| | 50.00 | 0.00 | 50.00 | 0.00 | 100.00 |
| **மொத்தம்** | **13** | **7** | **6** | **4** | **30** |
| **சராசரி** | **43.33** | **23.33** | **20.00** | **13.33** | **100.00** |

## விளக்க வரைபடம்




## மதிப்பீட்டுக் கருத்து

இரண்டாம் மொழிச் சூழலில் பள்ளியில் தமிழ் படிக்க வரும் பழங்குடி மாணவர்களுக்கு தாங்கள் கற்கும் பாட நூலில் சொல் கலப்பு, அதாவது மொழிக்கலப்பு என்பன இல்லாமல் சிறந்த முறையில் பாடப்பொருள் அமைந்தால் தான் மாணவர்கள் கற்றல் திறனில் ஆர்வம் கொண்டு படிக்கமுடியும். இல்லையேல் அவர்களுக்கு கற்றல் என்பன கடினமான ஒன்றாகவே தெரியும். இங்கு சொல் கலப்பு குறித்த கருத்தில் இருளர், குறும்பர் மாணவர்கள் பாடப்பொருளில் புரிவதில் குழப்பமில்லை கலப்புச் சொற்கள் மிகையாக இருந்த போதிலும் காடர், பணியர் மாணவர்களுக்கு கலப்புச் சொற்களினால் புரிதலில் சிக்கல் இருப்பதாகக் கூறுகின்றனர்.

## தமிழ் மொழிப் பாடநூலில் தேவையற்ற பகுதி

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| செய்யுள் | 1 | 0 | 0 | 0 | 1 |
| | 100.00 | 0.00 | 0.00 | 0.00 | 100.00 |
| உரைநடை | 2 | 1 | 0.001 | 0 | 4 |
| | 50.00 | 25.00 | 25.00 | 0.00 | 100.00 |
| கதைப்பகுதி | 2 | 2 | 4 | 2 | 10 |
| | 20.00 | 20.00 | 40.00 | 20.00 | 100.00 |
| தேவையற்றப் | 8 | 4 | 1 | 2 | 15 |
| பகுதிகள் இல்லை | 53.33 | 26.67 | 6.67 | 13.33 | 100.00 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 | 30 |
| சராசரி | 43.33 | 23.33 | 20.00 | 13.33 | 100.00 |

**விளக்க வரைபடம்**




## மதிப்பீட்டுக் கருத்து

பாடத்திட்டதை வகுக்கும் போது ஒவ்வொரு வகுப்பு நிலைக்குத் தகுந்தாற் போலப் பாடப்பொருளை அமைப்பது வரன்முறையாகும். ஆனால் தெரிவு செய்யப்படும் பாடப்பொருள் மாணவர்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு உணரப்படுகிறதா என்பது மாணவர்களின் புரிதிறனைப் பொறுத்து அமைவனவாகும். பழங்குடி மாணவனைப் பொறுத்தவரை தேவைப்படும் பொருள் என்பது மாணவனின் புரிதிறனைப் பொருத்தே அமைகிறது. அதன்படி பெறப்பட்ட கருத்தில் இருளர், குறும்பர் இன மாணவர்கள் தேவையற்ற பகுதி இல்லை என்றும், பணியர், காடர் மாணவர்கள் தேவையற்ற பகுதி இருப்பதாகவும் கூறுகின்றனர். தேவையற்ற பகுதிகள் இருப்பினும் கற்றலுக்குக் கடினமாக இருப்பதாகவோ முற்றிலும் தேவையில்லை என்று ஒதுக்குவதற்கோ அங்கே கருத்து நிலவவில்லை.

## பேச்சில் பிழை உணர்தல்

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சொல் அளவில் | 8 | 3 | 3 | 2 | 16 |
| | 50.00 | 18.75 | 18.75 | 12.50 | 100.00 |
| ஒலி அளவில் | 0 | 3 | 1 | 0 | 4 |
| | 0.00 | 75.00 | 25.00 | 0.00 | 100.00 |
| தொடர் அளவில் | 0 | 0 | 2 | 1 | 3 |
| | 0.00 | 0.00 | 66.67 | 33.33 | 100.00 |
| பொருள் அளவில் | 5 | 1 | 0 | 1 | 7 |
| | 71.43 | 14.29 | 0.00 | 14.29 | 100.00 |
| **மொத்தம்** | **13** | **7** | **6** | **4** | **30** |
| **சராசரி** | **43.33** | **23.33** | **20.00** | **13.33** | **100.00** |

**விளக்க வரைபடம்**




## மதிப்பீட்டுக் கருத்து

இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்கும் பழங்குடி மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி மொழியினைப் பேசுகின்றனர். அப்போது அவர்கள் தமிழ் பேசும் போதும், எழுதும் போதும், சொல் அளவில், தொடர் அளவில், ஒலி அளவில், பொருள் அளவில் என இவர்கள் தமிழ் கற்கும் முறை வேறுபடுகிறது. இருந்த போதிலும் ஒரு சில மாணவர்கள் இம்முறையான பயிற்சிகளில் சிறந்தும் விளங்குகின்றனர். இருளர், குறும்பர் மாணவர்கள் சொல் அளவில், பேச்சு, தொடர், ஆகிய நிலைகளில் பிழை ஏற்படுவதாக உணர்கின்றனர். அதே சமயம் பணியர், காடர் மாணவர்கள் மேலே குறிப்பிட்ட அனைத்து நிலைகளிலும் அதனைப் புரிந்து கொள்வதில் சிக்கல் உள்ளது என்கின்றனர்.

## மொழி மாற்றம் அதிகம் காணப்படுவது

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பேச்சு வழக்கில் | 10 | 3 | 3 | 4 | 20 |
| | 50.00 | 15.00 | 15.00 | 20.00 | 100.00 |
| எழுத்து வழக்கில் | 2 | 2 | 2 | 0 | 6 |
| | 33.33 | 33.33 | 33.33 | 0.00 | 100.00 |
| சொல் வழக்கில் | 1 | 1 | 1 | 0 | 3 |
| | 33.33 | 33.33 | 33.33 | 0.00 | 100.00 |
| மொழி நடை | 0 | 1 | 0 | 0 | 1 |
| வழக்கில் | 0.00 | 100.00 | 0.00 | 0.00 | 100.00 |
| **மொத்தம்** | **13** | **7** | **6** | **4** | **30** |
| **சராசரி** | **43.33** | **23.33** | **20.00** | **13.33** | **100.00** |

**விளக்க வரைபடம்**




**மதிப்பீட்டுக் கருத்து**

பாடப்பொருளில் பயன்படுத்தப்படும் மொழிக் கலப்போடு இவ்வகையில் ஏதேனும் மாற்றம் நிகழ்ந்திருப்பதைக் கண்டுணர்ந்ததாக சில மாணவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் நான்கு நிலைகளில் பிரிக்கப்பட்டு மாணவர்களின் கருத்தைப் பதிவுசெய்யப் பட்டது. இதில் இருளர், குறும்பர், பணியர் மாணவர்கள் பேச்சு வழக்கிலும், பொதுவாக மொழி நடை வழக்கிலும் மொழி மாற்றம் இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். காடர் மாணவர்களளிடமிருந்து கருத்துஏதுமில்லை. மாணவர்களுக்கு இம்மாதிரியான மாற்றல் நிகழ்வுகளைக் கண்டறிய முடியும். கற்கும் நிலையில் கடினமாக எண்ணக் கூடிய மாணவர்களுக்கு இவற்றைக் கண்டறிவது கடினம். எனவே மொழி மாற்றல் நிகழ்வென்பது பொது நிலை மாணவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்றால் பழங்குடி மாணவர்களுக்கான பாடநூலில் முற்றிலும் இடமளிப்பது கூடாது. அவ்வாறு இடம்பெற்றால் இது அவர்களுக்குக் கூடுதல் மொழிச் சிக்கலே ஆகும்.

**தமிழ்ப் பாடநூலில் கடினமான பகுதி**

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| செய்யுள் பகுதி | 0 | 0 | 1 | 1 | 2 |
| | 0.00 | 0.00 | 50.00 | 50.00 | 100.00 |
| உரைநடைப் பகுதி | 0 | 0 | 2 | 0 | 2 |
| | 0.00 | 0.00 | 100.00 | 0.00 | 100.00 |
| இலக்கணப் பகுதி | 11 | 5 | 3 | 3 | 22 |
| | 50.00 | 22.73 | 13.64 | 13.64 | 100.00 |
| மனப்பாடப்பகுதி | 2 | 1 | 0 | 0 | 3 |
| | 66.67 | 33.33 | 0.00 | 0.00 | 100.00 |
| எல்லாப் பகுதிகளும் | 0 | 1 | 0 | 0 | 1 |
| | 0.00 | 100.00 | 0.00 | 0.00 | 100.00 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 | 30 |
| சராசரி | 43.33 | 23.33 | 20.00 | 13.33 | 100.00 |

## விளக்க வரைபடம்




### மதிப்பீட்டுக் கருத்து

பொதுவாக மொழிப் பாடத்தைக் கற்பதில் பழங்குடி மாணவர்கள் அநேகச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அதற்குக் காரணமாகப் பாடப் பொருளில் சில பகுதிகள் கடினமாக இருப்பதைச் சொல்லலாம். அப்படிக் கடினமான பகுதிகள் எந்த அளவிற்கு அதிகமாகப் பழங்குடி மாணவர்களால் உணரப்படுகிறது என்பதைக் காண்கையில், உரைநடைப்பகுதி மிகச் சுலபமாகவும், செய்யுள் பகுதி சுலபமாகவும், இருப்பதாகவும், இலக்கணப் பகுதி கடினமாக இருப்பதாகவும், மனப்பாடப்பகுதிகள் ஓரளவிற்குச் சுலபமாக இருப்பதாகவும் வரை படம் விளக்குகின்றது. இருளர், குறும்பர் இன மாணவர்கள் செய்யுட் பகுதி, இலக்கணப்பகுதி, உரைநடைப் பகுதி இம்மூன்றும் எளிதாக கற்பதற்கு இருப்பதாகவும் பணியர், காடர் மாணவர்கள் செய்யுட்பகுதி, இலக்கணப் பகுதி, உரைநடைப்பகுதி இம்மூன்றையும் கடினமாகவே பார்க்கின்றனர். மனப்பாடப் பகுதி மட்டும் ஓரளவிற்குச் சுலபமாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். பொதுவாக இவர்கள் சராசரிக்குக்கீழ் பின்தங்கிய நிலையில் உள்ளனர் என்பதனை இந்த வரைபடம் மூலம் அறியமுடிகிறது.

### தமிழ் கற்றலில் சிறப்புப் பயிற்சி

அட்டவனை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| உண்டு | 21 | 5 | 8 | 10 | 44 |
| | 47.73 | 11.36 | 18.18 | 22.73 | 100.00 |
| இல்லை | 17 | 4 | 22 | 3 | 46 |
| | 36.96 | 8.70 | 47.83 | 6.52 | 100.00 |
| **மொத்தம்** | **38** | **9** | **30** | **13** | **90** |
| **சராசரி** | **42.22** | **10.00** | **33.33** | **14.44** | **100.00** |

**விளக்க வரைபடம்**




## மதிப்பீட்டுக் கருத்து

வளர்ந்து வரும் கல்விச் சூழலுக்கு ஏற்ப கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கிய நிலையில் உள்ள மலையின மாணவர்களை கல்வியில் சிறந்தவர்களாக உருவாக்க வேண்டும். அப்போதுதான் மற்றவர்களைப் போல் அதாவது பழங்குடி அல்லாத மாணவர்களைப் போல் இவர்களும் படிப்பில் சிறந்த விளங்குவார்கள். இதற்கு சிறப்பு பயிற்சி என்பதனை இம்மாணவர்களின் குறைகளை அறிந்து அளிக்க வேண்டும். அவ்வாறு அளிப்பதால் மேலும் கற்றலில் இம்மாணவர்களுக்கு ஆர்வம் என்பது அதிகரிக்கும். எனவே தமிழ் பாடநூல் கற்றலில் பள்ளியில் சிறப்புபயிற்சி ஏதும் அளிக்கப் படுகின்றதா என்பது குறித்து கருத்துக் கேட்டலில் ஒவ்வொரு மாணவர்களும் தங்களின் சிறப்பு பயிற்சி குறித்த கருத்தினைப் பல்வேறு தன்மையின் அடிப்படையில் பதிவு செய்துள்ளனர். இங்கு இருளர், காடர் மாணவர்கள் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் பணியர், குறும்பர் மாணவர்கள் சிறப்புப் பயிற்சி அளிக்கப் படுவதில்லை எனவும். தங்களின் கருத்தைப் பதிவு செய்துள்ளார். இத்தகையச் சூழலில், ஆசிரியர்கள் கட்டாயம் அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் சிறப்பு மொழிப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டியது தேவையாகும்.

**தமிழ் கற்றலில் எளிமையான பகுதி**

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| செய்யுள் | 2 | 1 | 0 | 1 | 4 |
| | 50.00 | 25.00 | 0.00 | 25.00 | 100.00 |
| உரைநடை | 6 | 1 | 0 | 1 | 8 |
| | 75.00 | 12.50 | 0.00 | 12.50 | 100.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இலக்கணப் பகுதி | 1 | 2 | 3 | 0 | 6 |
| | 16.67 | 33.33 | 50.00 | 0.00 | 100.00 |
| மனப்பாடப்பகுதி | 4 | 3 | 3 | 2 | 12 |
| | 33.33 | 25.00 | 25.00 | 16.67 | 100.00 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 | 30 |
| சராசரி | 43.33 | 23.33 | 20.00 | 13.33 | 100.00 |

விளக்க வரைபடம்




மதிப்பீட்டுக் கருத்து

பொதுவாக மொழிப் பாடநூலில் எந்தப் பாடப் பொருளைக் கற்பதற்கு எளிமையாக கருதுகின்றனர் என்று காண்கையில் செய்யுள் பகுதி என்பது எளிமையாக உள்ளன என்று இருளர், காடர், குறும்பர் மாணவர்கள் தங்களின் கருத்தைப் பதிவு செய்கின்றனர். அதனைத் தொடர்ந்து உரைநடை குறித்த மதிப்பீட்டில் இருளர் மாணவர்கள் எளிமையாக உள்ளது என்றும் குறும்பர், பணியர், காடர் மாணவர்கள் கடினமாக உள்ளது என்றும் குறிப்பிடுகின்றனர்.

அதேபோல் இலக்கணப் பகுதி குறித்த கருத்துக் கேட்டலில் இருளர், குறும்பர், பணியர் மாணவர்கள் எளிமையாக உள்ளன என்றும் காடர் மாணவர்கள் கடினம் என்றும் குறிப்பிடுகின்றனர். எனவே, இங்கு காடர் இன மாணவர்கள் தான் ஒரு சில பகுதிகள் மட்டும் கடினமாக இருப்பதாகவே எண்ணுகின்றனர்.

**தமிழ்ப் பாடநூலில் கற்றல் நிலைப்பகுதி**

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மனப்பாடம் செய்யத் | 13 | 4 | 1 | 1 | 19 |
| தேவையுள்ளது | 68.42 | 21.05 | 5.26 | 5.26 | 100.00 |
| மனப்பாடம் செய்யத் | 0 | 3 | 5 | 3 | 11 |
| தேவையில்லை | 0.00 | 27.27 | 45.45 | 27.27 | 100.00 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 | 30 |
| சராசரி | 43.33 | 23.33 | 20.00 | 13.33 | 100.00 |

விளக்க வரைபடம்




மதிப்பீட்டுக் கருத்து

பொதுவாக மனப்பாடம் செய்யுட்பகுதியையும், பயிற்சி மேற்கொள்ளும் பகுதியையும் விடுத்து மற்ற பகுதிகளை நேரடியாகக் கற்க வேண்டிய பகுதிகளாகக் கொள்ளலாம். இதில் வினாவிடைப் பகுதி, அருஞ்சொற்பொருள், விளக்கப்பகுதி, கடினமாக இருப்பினும், மாணவர்கள் புரிதலுக்காக அப்பகுதியையும் சேர்த்தும் பொருள் கொள்ளலாம். இப்பகுதிகளை நினைவிற்கு எடுத்துச் செல்லும் பகுதிகளையும் நினைவில் வைத்துக் கொள்ளத் தேவையில்லை என்பன போல கருத்தைப் பெறுதவற்கான வகையில் இருளர், குறும்பர் மாணவர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டியவை என்றும், அநேகப் பாடப்பகுதிகளைக் கூறுகின்றனர். அதற்கடுத்தாற் போல், பணியரும், காடரும் ஒருமித்தகருத்தைப் பதிவு செய்கின்றனர். பணியர், காடர், குறும்பர் மாணவர்களைப் பொருத்தவரை அவர்களிடமிருந்து அவ்வகையான கருத்தைப் பெறமுடியவில்லை. ஏனென்றால் அவர்கள் பொதுவாகவே கற்றல் நிலையில் பின்தங்கியிருப்பதுவே இதற்கு முதன்மைக் காரணமாகும்.

## தமிழ் பாடநூலில் மொழிவளம் கற்பதற்கு

### அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பேச்சு வழக்கில் | 3 | 3 | 3 | 1 | 10 |
| | 30.00 | 30.00 | 30.00 | 10.00 | 100.00 |
| எழுத்து வழக்கில் | 5 | 1 | 2 | 0 | 8 |
| | 62.50 | 12.50 | 25.00 | 0.00 | 100.00 |
| உச்சரிப்பு வழக்கில் | 2 | 0 | 1 | 1 | 4 |
| | 50.00 | 0.00 | 25.00 | 25.00 | 100.00 |
| அனைத்திலும் எளிமையாக | 3 | 3 | 0 | 2 | 8 |
| உள்ளதா | 37.50 | 37.50 | 0.00 | 25.00 | 100.00 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 | 30 |
| சராசரி | 43.33 | 23.33 | 20.00 | 13.33 | 100.00 |

### விளக்க வரைபடம்




### மதிப்பீட்டுக் கருத்து

பொதுவாகத் தமிழ் மொழிப்பாடம் என்பதால் மாணவனின் கற்றலுக்கும், கற்றதை நினைவில் வைத்துக் கொண்டு கருத்தைப் புரிவதற்கும் பாடப் பொருளை எடுத்துரைக்கும் மொழியில் எளிமையாக இருக்க வேண்டும். பழங்குடி மாணவர்களின் புரிதல் என்பன. முழுக்க முழுக்க மொழிநடையைப் பற்றியே அமைகின்றன. மொழி நடையில் பேச்சு வழக்கில் எளிமையிருக்கும். எழுத்து வழக்கில் எளிமையிருக்கும் உச்சரிப்பு வழக்கிலும் எளிமையிருப்பது. ஒரு சில நேரங்களில் காண முடிகிறது. இங்கு இருளர், குறும்பர், பணியர் இன மாணவர்கள் மொழிப் பயன்பாட்டில் எல்லா நிலைகளிலும்

எளிமையாக இருப்பதாக எண்ணுகின்றனர். காடர் இன மாணவர்கள் பேச்சு வழக்கில் எளிமை இல்லை என்றும் குறிப்பிடுகின்றனர். எழுத்து வழக்கில் பணியர், இருளர், குறும்பர் மாணவர்கள் எளிமையாக உள்ளது என்றும் காடர் மாணவர் கடினமாக இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். அதனைத் தொடர்ந்து உச்சரிப்பு நிலையில் பணியர், இருளர், காடர் மாணவர்கள் எளிமையாக இருக்கிறது என்றும் குறும்பர் இன மாணவர்கள் கடினமாக உள்ளது என்றும் தங்கள் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இதன் வழி அறிய முடிகின்றது.

பள்ளியில் இலக்கியப் போட்டி நடைபெறுவது

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பேச்சுப்போட்டி | 5 | 2 | 1 | 1 | 9 |
| | 55.56 | 22.22 | 11.11 | 11.11 | 100.00 |
| கட்டுரைப்போட்டி | 4 | 4 | 2 | 1 | 11 |
| | 36.36 | 36.36 | 18.18 | 9.09 | 100.00 |
| பாட்டுப்போட்டி | 1 | 1 | 3 | 1 | 6 |
| | 16.67 | 16.67 | 50.00 | 16.67 | 100.00 |
| நாடகம் மற்றும் | 3 | 0 | 0 | 1 | 4 |
| நாட்டியப் போட்டி | 75.00 | 0.00 | 0.00 | 25.00 | 100.00 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 | 30 |
| சராசரி | 43.33 | 23.33 | 20.00 | 13.33 | 100.00 |

விளக்க வரைபடம்



## மதிப்பீட்டுக் கருத்து

மாணவர்கள் பயிலும் பள்ளிகளில் தமிழ்ப்பாடம் கற்றலுக்குத் துணை செய்யும் வகையில் கற்பித்தலைத் தொடர்ந்து மேற்கொள்ளும் நிகழ்வுகளையும் கணக்கில் கொண்டு கருதிப் பார்க்க வேண்டும். அந்த வகையில் பள்ளிகளில் மாணவர்களுக்காக நடத்தப்படும் இலக்கியம் சார்ந்த போட்டிகளைப் பற்றிய கருத்தைப் பார்க்கையில் இருளர், குறும்பர் இன மாணவர்கள் கட்டுரைப் போட்டிகள் அதிகம் நடைபெறுவதால் அவர்களின் கற்றல் நிலை மேம்படுவதாகவும் அதோடு மற்ற போட்டிகளும் முறையே பயனளிப்பதாகவும் கூறுகின்றனர். அதே போல் பணியர், காடர் மாணவர்கள் நாடகம் போட்டிகள் நடைபெறுவதன் மூலம் பயனடைவதாக கூறுகின்றனர். காடர், பணியர் இன மாணவர்கள் பேச்சுப் போட்டி மட்டும் நடைபெறுவதில்லையெனவும் கூறுகின்றனர். மற்ற இன மாணவர்கள் இதில் சராசரியே.

தமிழ் கற்றலுக்கான செலவிடும் காள அளவு

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வீட்டில் | 3 | 0 | 1 | 2 | 6 |
| | 50.00 | 0.00 | 16.67 | 33.33 | 100.00 |
| பள்ளியில் | 7 | 3 | 4 | 1 | 15 |
| | 46.67 | 20.00 | 26.67 | 6.67 | 100.00 |
| பொதுவாக | 0 | 0 | 1 | 0 | 1 |
| | 0.00 | 0.00 | 100.00 | 0.00 | 100.00 |
| கால அளவில்லை | 3 | 4 | 0 | 1 | 8 |
| | 37.50 | 50.00 | 0.00 | 12.50 | 100.00 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 | 30 |
| சராசரி | 43.33 | 23.33 | 20.00 | 13.33 | 100.00 |

விளக்க வரைபடம்



**மதிப்பீட்டுக் கருத்து**

வகுப்புகளில் நடத்தப்படும் பாடங்களை பெரும்பாலான மாணவர்கள் வகுப்பறையில் மட்டும் அதாவது பள்ளிச் சூழலில் மட்டுமே ஆசிரியர்கள் கொடுத்த பயிற்சி முறைகளை படிக்கச் செய்கின்றனர். ஒரு சில மாணவர்கள் பள்ளியோடு மட்டுமல்லாமல் வீட்டுச் சூழலிலும் வந்து பயில்கின்றனர். சில மாணவர்களின் பெற்றோர்கள் கல்வியறிவு இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். ஆகையால் வீட்டில் இவர்களைப் படிக்கச் சொல்லி தூண்டுவதில்லை. வீட்டில் உள்ள மின்வசதி குடும்பச் சூழல் சிலவற்றையும் காரணமாகச் சொல்லலாம். தமிழ் கற்றலுக்கான காலஅளவு குறித்த மாணவர்களின் கருத்தில் இருளர், குறும்பர், பணியர் மாணவர்கள் பள்ளியில் வீட்டில் கால அளவு இல்லாமல் தினமும் படிப்பதாகும் காடர் மாணவர்கள் படிப்பதில்லை என்றும் குறிப்பிடுவதை இங்கு காணமுடிகின்றது.

**மாணவர்கள் அதிகமாக பங்கேற்கும் இலக்கியப் போட்டிகள்**

**அட்டவணை**

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பேச்சுப்போட்டி | 1 | 1 | 3 | 1 | 6 |
| | 16.67 | 16.67 | 50.00 | 16.67 | 100.00 |
| கட்டுரைப்போட்டி | 5 | 3 | 2 | 1 | 11 |
| | 45.45 | 27.27 | 18.18 | 9.09 | 100.00 |
| கையெழுத்துப் | 2 | 2 | 1 | 1 | 6 |
| போட்டி | 33.33 | 33.33 | 16.67 | 16.67 | 100.00 |
| நாடகப்போட்டி | 2 | 1 | 0 | 0 | 3 |
| | 66.67 | 33.33 | 0.00 | 0.00 | 100.00 |
| கவிதைப்போட்டி | 3 | 0 | 0 | 1 | 4 |
| | 75.00 | 0.00 | 0.00 | 25.00 | 100.00 |
| **மொத்தம்** | **13** | **7** | **6** | **4** | **30** |
| **சராசரி** | **43.33** | **23.33** | **20.00** | **13.33** | **100.00** |

**விளக்க வரைபடம்**



## மதிப்பீட்டுக் கருத்து

பொதுவாக பழங்குடி மாணவர்களிடையே பேச்சுப் போட்டி குறித்த மதிப்பீட்டில் பணியர் மாணவர்கள் அதிகம் கலந்துகொள்வ தாகவும், இருளர், குறும்பர், காடர் மாணவர்கள் ஓரளவிற்கு பங்குபெறுவதாகவும் குறிப்பிடுகின்றனர். கட்டுரைப் போட்டி குறித்த மதிப்பீட்டில் குறும்பர், இருளர் மாணவர்கள் அதிகமாகக் கலந்து கொள்வதாகவும், பணியர், காடர் மாணவர்கள் கலந்துகொள்வதில்லை என்றும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கின்றனர். கையெழுத்துப் போட்டி குறித்த மதிப்பீட்டில் இருளர், குறும்பர் மாணவர்கள் அதிகமாகப் பங்கேற்ப தாகவும், பணியர், காடர் மாணவர்கள் இதுகுறித்து குறைவாக மதிப்பிடுகின்றனர். நாடகப் போட்டி குறித்த மதிப்பீட்டில் இருளர், குறும்பர் மாணவர்கள் அதிகமாக பங்கேற்பதாகவும், காடர், பணியர் மாணவர்கள் கலந்துகொள்வதில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். கவிதைப்போட்டி குறித்த மதிப்பீட்டில் இருளர், காடர், மாணவர்கள் அதிகமாகப் பங்கேற்பதாகவும், குறும்பர், பணியர் மாணவர்கள் பங்குபெறுவதில்லை என்றும் குறிப்பிடுகின்றனர்.

## பள்ளியில் கருத்தரங்கு

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| வாரக் கருத்தரங்கு | 0 | 2 | 0 | 2 | 4 |
| | 0.00 | 50.00 | 0.00 | 50.00 | 100.00 |
| மாதக் கருத்தரங்கு | 6 | 1 | 2 | 0 | 9 |
| | 66.67 | 11.11 | 22.22 | 0.00 | 100.00 |
| நாள்தோறும் | 3 | 3 | 2 | 1 | 9 |
| கருத்தரங்கு | 33.33 | 33.33 | 22.22 | 11.11 | 100.00 |
| கருத்தரங்கு | 4 | 1 | 2 | 1 | 8 |
| நடைபெறுவதில்லை | 50.00 | 12.50 | 25.00 | 12.50 | 100.00 |
| **மொத்தம்** | **13** | **7** | **6** | **4** | **30** |
| **சராசரி** | **43.33** | **23.33** | **20.00** | **13.33** | **100.00** |

## விளக்க வரைபடம்



**மதிப்பீட்டுக் கருத்து**

மாணவர்களிடையே வாரக்கருத்தரங்கு நடைபெறுகிறதா என்பது குறித்த மதிப்பீட்டில் குறும்பர், காடர் மாணவர்கள் அதிகம் நடைபெறுவதாகவும், இருளர், பணியர் மாணவர்கள் இல்லை என்றும் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. இருளர், பணியர், குறும்பர் மாணவர்கள் மாதக் கருத்தரங்கு நடைபெறுகின்றது என்றும், காடர் மாணவர்கள் நடைபெறுவதில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். இருளர், பணியர், குறும்பர் மாணவர்கள் நாள்தோறும் நடைபெறுகின்றது என்றும் கூறுகின்றனர். காடர் மாணவர்கள் இதுகுறித்து எந்தக் கருத்தையும் குறிப்பிடவில்லை.

**பள்ளியில் தமிழ் இலக்கிய மன்றம்**

அட்டவணை

| | இருளர் | குறும்பர் | பணியர் | காடர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தினந்தோறும் | 3 | 6 | 0 | 1 | 10 |
| | 30.00 | 60.00 | 0.00 | 10.00 | 100.00 |
| வாரத்தில் ஒரு நாள் | 0 | 1 | 6 | 1 | 8 |
| | 0.00 | 12.50 | 75.00 | 12.50 | 100.00 |
| மாதம் ஒரு முறை | 3 | 0 | 0 | 1 | 4 |
| | 75.00 | 0.00 | 0.00 | 25.00 | 100.00 |
| நடைபெறுவதில்லை | 7 | 0 | 0 | 1 | 8 |
| | 87.50 | 0.00 | 0.00 | 12.50 | 100.00 |
| மொத்தம் | 13 | 7 | 6 | 4 | 30 |
| சராசரி | 43.33 | 23.33 | 20.00 | 13.33 | 100.00 |

விளக்க வரைபடம்



## மதிப்பீட்டுக் கருத்து

உயர்நிலை வகுப்பாக 10-ஆம் வகுப்பைக் கருதுவதால் அடுத்த நிலைக்குச் செல்வதற்கு மாணவர்களைத் தரப்படுத்தி அனுப்பும் பொறுப்பில் ஆசிரியர்கள் வெவ்வேறு நிலையில் மொழி வளப் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும். அச்சூழலில் இலக்கிய மன்றங்கள் வழிப்பல்வேறு மொழிப் பயிற்சிக்கான போட்டிகள் நடத்துவதன் மூலம் மாணவர்களைத் தகுதிப்படுத்தலாம். இந்நிலையில் குறும்பர், இருளர் மாணவர்கள் நடைபெறுகின்றதென்றும், காடர் இன மாணவர்கள் சராசரியாக நடைபெறுவதாகவும் கூறுகின்றனர். பணியர் இன மாணவர்கள் முற்றிலுமாக இக்கருத்தை மறுக்கின்றனர். வாரத்தில் ஒருநாள் நடைபெறுவதாக குறும்பர் இன மாணவர்கள் அனைவரும் கூறுகின்றனர். மாதம் ஒருமுறை நடப்பதாக இருளர் இன மாணவர்கள் இக்கருத்தை மறுக்கின்றனர். அதே நேரத்தில் இருளர் இன மாணவர்கள் எப்பொழுதும் நடைபெறுவதேயில்லை என்றும் முரண்பாடான பதிவையும் முன்வைக்கின்றனர். இவ்வகையான பல்வேறுபட்ட கருத்துக்களைப் பார்க்கையில் முறையாக நடைபெறுவதில்லை என்பது புலனாகிறது.

## தொகுப்புரை

பாடநூல் வழிப் பழங்குடி மாணவர்களின் மொழித் திறன் மதிப்பீடு என்ற இந்த வழி 9-ஆம் வகுப்பு, 10-ஆம் வகுப்பு தமிழ் மொழியில் பாடநூலின் மொழிநடை எவ்வாறு கற்றலுக்குச் சிறந்ததாக உள்ளது என்பதையும் இரு வகுப்பு மொழிப் பாடநூலின் பயிற்சிகள் குறித்தும் அதன் அமைப்புமுறைகளைக் குறித்தும் விரிவாக விளக்குவதாக விளக்குகின்றது.

# முடிவுரை

எந்தவொரு ஆய்வும் சமுதாயத்திற்குப் பயன்படும் போதுதான் தன் நோக்கத்தை அது நிறைவு செய்வதாகிறது. அந்த வகையில் “பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீட்டாய்வு” என்னும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வானது மொழியின் வாயிலாக கல்விக்கும், அக்கல்வியின் ஊடாகச் சமுதாயத்திற்கும் பயன்தரும் இலக்கை மையமாகக் கொண்டு அந்த இலக்கையடையும் வழி வகைகள் சிலவற்றை தொகுத்து முடிவுரையாக வழங்குகின்றது.

❖ இந்த ஆய்விற்கு நீலகிரி மற்றும் கோவை மாவட்ட மலைப்பகுதிகளில் வாழும் இருளர், குறும்பர், பணியர், காடர் ஆகிய நான்கு பழங்குடிஇன மாணவர்களை ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பழங்குடி மாணவர்கள் அனைவருக்கும் பேச்சளவிலும், கற்றல் அளவிலும் தமிழ்மொழி என்பது இரண்டாம் மொழியாகவே உள்ளது. 9-ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு பயிலும் பழங்குடி மாணவர்கள் தமிழ் பாடங்களைப் புரிந்து படிப்பதிலும் அதன் பாடக்கூறுகளைக் கற்றுக் கொள்வதிலும், இவர்கள் திறன் குறைந்தவர்களாக இருக்கின்றனர் என்பதனைக் கருத்தில் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. வினா நிரல் தொகுப்பு முறை நேர்காணல், உற்றுநோக்கல் முறை ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இருளர், குறும்பர், பணியர், காடர் மாணவர்களின் தமிழ் பாடநூல் குறித்த அதாவது தமிழ் கற்றலின் திறன்களைச் சோதித்து அளவிடப்பட்டன. இதன் மூலம் இருளர், பணியர் இன மாணவர்கள் கற்றல்நிலை சுமாராக இருப்பதாகவும் குறும்பர், காடர் மாணவர்களின் கற்றல்நிலை பின்தங்கிய நிலையில் உள்ளதையும் அறிய முடிகின்றது.

❖ பொதுவாகப் பழங்குடி மாணவர்கள் தமிழ் கற்றலில் பின்தங்கி இருப்பதற்கு காரணம் இவர்கள் பேசும் தாய்மொழிக் குறிக்கீடு ஆகும். புதுமையான கற்பித்தல் முறையை அறிமுகப் படுத்துவதும் கற்றல் முறையினைச் சரிவர நடைமுறை படுத்தாமலிருப்பதும் இதற்குக் காரணமாகும். எனவே இந்த மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆக்கப்பூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு செயல்பட்டால்தான் பழங்குடி மாணவர்கள் கல்வித் திறனில் சிறந்து விளங் குவர். அவர்களைச் சிறந்த மாணவர்களாக முன்னேறச் செய்ய முடியும் என்பது தீர்வாகக் கூறப்படுகின்றது. பழங்குடி மாணவர்களுக்குக்

கற்பித்தல், கற்றலில் பின்பற்றப்பட்ட வேண்டிய சில ஆலோசனை முறைகள் இங்கு பரிந்துரைக்கப்படுகின்றன.

❖ பழங்குடி மாணவர்களுக்குத் தமிழ் பாடம் கற்பிக்கச் சிறந்த அனுபவம் வாய்ந்த மொழியாசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும்.

❖ பழங்குடி மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கற்பித்தலுக்கென தனிப்பட்ட சிறப்புப் பயிற்சியினை அளிக்க வேண்டும்.

❖ பழங் குடி இனத்தைச் சார்ந்த ஆசிரியர்களை அதிகம் நியமனம் செய்ய வேண்டும்.

❖ ஆசிரியர்கள் தமிழ் பாடத்திட்டத்தினை நன்கு புரிந்து கொண்டு பழங்குடி மாணவர்களின் புரிதல் திறனுக்கு ஏற்றவகையில் கற்பிக்க வேண்டும்.

❖ ஆரம்பப் பள்ளியிலேயே பழங்குடி மாணவர்களுக்கு எழுத்துப் புணர்ச்சி, மயங் கொலி எழுத்துக்களை வேறுபடுத்தி வாசிக்கும் பயிற்சியினைத் தெளிவாகக் கற்பிக்க வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்புகளில் இது குறித்து விரிவாகவும் தெளிவாகவும் கற்பிக்க வேண்டும்.

❖ பழங்குடி மாணவர்களுக்குத் தமிழ் கற்றலில் ஆர்வத்தை ஆசிரியர்கள் அதிகம் உருவாக்கித் தரவேண்டும். செய்தித்தாள் படித்தல், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபெறும் வாய்ப்பையும் உருவாக்க வேண்டும்.

❖ தமிழ் மொழிப் பாடப்பொருள்களை சில கற்றல் கருவிகளின் துணை கொண்டு பழங்குடி மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். அப்போதுதான் தமிழ் மொழி கற்றலில் பழங்குடி மாணவர்களுக்குத் தெளிவும் ஆர்வமும் கிட்டும்.

❖ தமிழ்ப் பாடநூல்களை உருவாக்கும் போது கல்வித்துறை பழங்குடி மாணவர்களின் நலனையும் கருத்தில் கொண்டு பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.

❖ மொழிகற்றல், மொழிவழியாகக் கற்றல் எனும் இவ்விரண்டிற்கும் அடிப்படைகளை உணர்த்துவதாக வருங் காலக் கல்வி என்பது அமைய வேண்டும்.

❖ இது போன்ற பல்வேறு முயற்சிகளை கல்வித்துறை வருங்காலங்களில் மேற்கொண்டால் பழங்குடி மாணவர்களின் கல்வித்தரம் மேன்மை அடையும் என்பதனை இதன் வழி எடுத்துரைக்கப்படுகின்றது.

# துணை நூல்கள்


அகத்தியலிங்கம், சு. 1976 திராவிட மொழிகள்,பாரி நிலையம், சென்னை.

அகத்தியலிங்கம், ச. புஷ்பவல்லி, க. 1977 மொழியியல் வாழ்வும் வரலாறும்,அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

ஆறுமுக முதலியார்., 1977 தமிழ் பயிற்று முறைகள், எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை.

ஆனந்தன், கோ. 1994 கற்பித்தலில் விளையாட்டு முறை இரண்டாவது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு, ஆய்வடங்கள் தொகுதி ஒன்று, கோலாலம்பூர், மலேசியா.

இராபர்ட் சத்திய சோசப், தா. 2001 பழங்குடியினர் கல்வியும் கல்வி நுட்பவியலும், அனைத்திந்திய அறிவியல் தமிழாக்கம், தஞ்சாவூர்.

இராசாராம், சு. 1973 மொழியும் மொழியியலும்,பாரி நிலையம், சென்னை.

இராசாராம். சு. 1980 ஒலியியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

கருணாகரன், கி. 1982 மொழிவளர்ச்சி மணிவாசகர் நூலகம்,சிதம்பரம்.

கிங்ஸ்டன், பா.த. 2006 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீட்டாய்வு, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

குணசேகரன், கே.ஏ. 1994 தமிழக மலையின மக்கள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,41, பி.சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை.

சக்திவேல்.சு., 1985 நீலகிரி தோடப் பழங்குடிகள், மலர்விழி பதிப்பகம், 15, திப்பு சாகிப் தெரு,இராயப்பேட்டை, சென்னை.

சக்திவேல், சு. 1998 தமிழ்நாட்டுப் பழங்குடி மக்கள் வாழ்வும் வரலாறும், மணிவாகர் பதிப்பகம்,8,7, சிவிகா தெரு, பாரிமுனை, சென்னை.

சக்திவேல், சு. 1998 தமிழ் நாட்டுப் பழங் குடிகள் மக்கள்,மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சக்திவேல், சு. 1998 சமவெளி இருளர் வாழ்வும் பண்பாடும்,தமிழ்ப் பல்கலைக்கழகம், முனைவர் பட்ட ஆய்வேடு, தஞ்சாவூர்.

சண்முகம், செ.வை. 1989 மொழி வளர்ச்சியும் தமிழ் உணர்வும் மணிவாசகர் பதிப்பகம்,சென்னை.

ராமச்சந்திரன், 2002 உலக மொழிகளில் தமிழ் சொற்கள், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தார்ந்தம் பதிப்புக் கழகம் லிட், சென்னை.

சங்கரநாராயணன், கோ. 1990 தொடக்கக் கல்வி தமிழ்ப்பயிற்றல் தமிழ் கற்பித்தல் புதிய அணுகுமுறைகள், ஆசிரியர் கருணாகரன், கி., மற்றும் பலர் மொழியியல் துறை, தமிழ்நாடு தொழில்நுட்ப அமைப்புக் கழகம், கோவை.

சீர்காழி இராம்தாஸ், வி. 2008 எல்லோருக்கும் கல்வி,மணிவாசகர் பதிப்பகம்,31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.

சாகுல் ஹமீது, வி.எம். கற்பித்தல் கற்றலின் உளவியல்,சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை.

சுப்பிரமணி, கே.எஸ். 1999 பழங்குடி மக்களும் பழக்க வழக்கங் களும், மணிமேகலை பிரசுரம்,4, தணிகாலசலம் சாலை, தியாகராயர் நகர், சென்னை.

சாம் மோகன்லால் 1996 மொழி வளர்ச்சியும் மொழி ஆசிரியரும், அனைத்திந்திய தமிழ் மொழியற் கழகம், ஐந்தாவது மாநாட்டில் வாசிக்கப்பட்ட நூல்,பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

சிவகுமார், சி. 1990 பழங்குடி மாணவர்களுக்கு முதன் மொழியாகத் தமிழ் கற்பித்தல் புதிய அணுகுமுறைகள், ஆசிரியர் கருணாகரன், கி., தமிழ்நாடு தொழில்நுட்ப அமைப்புக் கழகம், கோவை.

சுப்புரெட்டியார். நா., 1981 தமிழ் பயிற்றும் முறை,மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

சீனிவாச சர்மா, கோ. 1980 இருமொழியம், மொழியியற் கழக வெளியீடு, அண்ணாமலை நகர்.

டாக்டர் வேணுகோபால், இ.வா. 2006 கல்வியில் புதுமைகள், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.

டாக்டர் வேணுகோபால், இ.வா. 2006 கல்வி உளவியல், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை.

டாக்டர் கோகிலா தங்கசாமி, 2005 கல்விப்புதுமைகள், பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு, இராயப்பேட்டை, சென்னை.

டாக்டர் ஞானசுந்தரம், கருணாகரன், கி. ஆசிரியர் கைவிளக்கு இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்.

டாக்டர் திருமலை, மா.சு. மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான கையேடு, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், இந்திய அரசு, மைசூர்.

தமிழ்நாடன், தொ. 1996 தமிழ்நாட்டு மலைவாழ் பழங் குடிகள், சேலம் மாவட்டம், ஓவியர் எழுத்தர் மன்றம்,192, மேட்டுத் தெரு, தடகபட்டி சேலம்.

தயாளன், வே. 2001 மொழி கற்பித்தலில் கல்வி நுட்பவியலின் பங்கு,கல்வி நுட்பவியல், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.

பரந்தாமனார், அ.கு. 1984 நல்ல சமிழ் எழுத வேண்டுமா? பாரி நிலையம்,சென்னை.

பக்தவத்சல பாரதி 1998 பண்பாட்டு மாற்றமும் மரபுவழி நம்பிக்கையும், பழங்குடிகள் பண்பாட்டியல் ஓர் ஆய்வு நாவாவின் ஆராய்ச்சி இதல்.

பக்தவத்சல பாரதி 2007 தமிழகப் பழங்குடிகள், தபாபிரஸ் அச்சகம், மணி ஆப்செட், சென்னை.

பரம சிவானந்தம், அ.மு. 1961 மலைவாழ் மக்கள் மாண்பு, தமிழ்க் கலைப் பதிப்பகம், சென்னை.

பரந்தாமனார், அ.கு. 1984 நல்ல தமிழ் எழுத வேண்டுமா? பாரி நிலையம், சென்னை.

பங்கஜம், ஜி. 1988 நல்லாசிரியரும் கல்வி உளவியலும், விஜயா பதிப்பகம், 20, இராஜவீதி, கோவை.

பரமசிவம், கு. 1983 இக்காலத் தமிழ் மரபு, அன்னம் வெளியீடு, சிவகங்கை.

பரமசிவம், கு. 1983 இந்தியத் தமிழ் மரபு,அன்னம் (பி) லிட், சிவன் கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை.

பாலகிருஷ்ணன், இரா. 1984 நீலகிரி மொழிகள்,அனைத்திந்தியத் தமிழ் மொழியற் கழகம், தஞ்சாவூர்.

பாலகிருஷ்ணன், இரா. 1994 நீலகிரி மொழிகள் அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர்.

பெரியாழ்வார், ஆர். 1981 இருளர் வாழ்வியல், இந்திய மொழிகளின் மைய நிறுவனம், மைசூர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை தமிழ் நூலகம்,சென்னை.

பொன்னப்பன் 1989 தமிழ்ப் பாடம் சொல்லும் முறை ஜெயமாலா அச்சகம், சென்னை.

பொற்கோ 1974 செந்தமிழ், தமிழ் நூலகம், சென்னை.

பேராசிரியர் சந்தானம், எஸ். 1999 கல்விசாரா அறைகூவல்கள் சாந்தா பதிப்பகம், சென்னை.

பேராசிரியர் சந்தானம், எஸ். 1993 கல்வியில் மனவியல் சாந்தா பதிப்பகம், சென்னை.

பிலோ இருதயநாத் மானிட இயலறிஞர் 1978 பழங்குடிகள்,பிரபு பிரிண்டிங் ஹவுஸ், 18, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை.

வாண்டுமாமா 1995 உலகின் பழங்குடி மக்கள், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தில்லைநகர், சென்னை.

ஜானகி, இரா. 2001 பழங்குடி மாணவர்களின் கருத்துப் புலப்பாட்டுத் திறன் மிகுவதற்கேற்ப தமிழ் கற்பித்தல், கற்றல் இவற்றில் இலக்கணத்தின் பங்கு,

1991, நீலகிரி பண்டைய பழங்குடியினர் ஓர் அறிமுகம், பழங்குடியினர் ஆய்வு மையம் வெளியீடு, உதகமண்டலம்.

வீரபாண்டியன், சுப. 1984 தமிழ்ப்பாடம் நடத்தும் விதம், சென்னை.

வேணுகோபால், கு.பா. 2006 பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள், சாரதா பதிப்பகம், திருவல்லிக்கேணி,சென்னை.

விஜயா, கு. 2008 பாடநூல்களில் தமிழ் இலக்கியத்தின் பங்கு,சாந்தா பப்ளிஷர்ஸ், இராயப்பேட்டை, சென்னை.

Report of the working group on tribal development during sixth plan 1980-85 October Government of India, Ministry of Home Affairs, New Delhi.

Ramaiah, D. IssuesDevelopment Allahabad,India

Verma, R.C.India Tribes Through The ages, Government of India January.

ஜுன்லாரன்ஸ் பட்டேல் பணியர் மழலையர் நூல், அக்கார்டு-கூடலூர், நீலகிரி, தமிழ்நாடு ஆதிவாசி முன்னேற்றச் சங்கம்-கூடலூர், நீலகிரி, தமிழ்நாடு இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர், கர்நாடகா.

Sivakumar, C. 1990 **Linguistic Study of the Problems in Learning Tamil by Tribal Children of the Nilgiris.** Bharathiar University, Coimbatore.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113

| அண்மை வெளியீடுகள் | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | சிலப்பதிகார இலக்கியக் கட்டமைப்பு | 160.00 |
| 2. | பழந்தமிழரின் பழக்க வழக்கங்கள் | 55.00 |
| 3. | பேரறிஞர் அண்ணாவின் சமூகப் பொருளாதாரச் சிந்தனைகள் | 75.00 |
| 4. | தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம், அறிவியல், சமூகம் | 70.00 |
| 5. | கிறித்தவக் காப்பியங்கள் | 225.00 |
| 6. | தமிழ் நாளிதழ்களின் மொழிநடை | 70.00 |
| 7. | சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் அன்றும் இன்றும் | 50.00 |
| 8. | குலோத்துங்கனின் கவிதை வளம் | 60.00 |
| 9. | தமிழ்த்தூது (கட்டுரைக் கொத்து) | 40.00 |
| 10. | தனிநாயக அடிகளாரின் ஆய்வுகள் | 50.00 |
| 11. | தனிநாயக அடிகளார் | 120.00 |
| 12. | வளர்ச்சிப் பாதையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 200.00 |
| 13. | சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிநடை | 70.00 |
| 14. | ஆதிசைவம் | 70.00 |
| 15. | பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி - 3 | 235.00 |

வெ.எண் : 786

பழங்குடி மாணவர்களுக்கான
தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு

விலை : ₹ 65.00

ISBN : 978-81-925359-8-2